www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்




# எரிமலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீர வணக்கம்

## இந்தியாவின் இன்னொரு சதி

### கப்பலைத் தகர்த்து தளபதி கிட்டு அவர்களும் ஒன்பது போராளிகளும் வீரச்சாவு

**இந்தியாவின் சதி வேலைக்கு இவர்கள் பலியாக்கப்பட்டனர்**

லெப். கேணல் குட்டிசிறி
கப்டன் குணசீலன்
கப்டன் றொசான்
கப்டன் நாயகன்
லெப். நல்லவன்



மேஜர் வேலன்
கப்டன் ஜீவா
லெப். அமுதன்
லெப். தூயவன்

மூத்த தளபதி
கேணல் கிட்டு

**வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.**

எரிமலை ஆசிரியர் குழு

www.tamilarangam.net




# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரெண்டாம் ஆண்டு
மாசி 1993



ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C - France.
341, Rue de Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


## உலகத் தமிழர்களே! விழிப்புடன் இருங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் தந்திரோபாயத் திட்டத்தில், போராட்டத் தலைவர்களை அழிப்பது என்பதை ஓர் உத்தியாக இந்திய அரசு கைக்கொள்கின்றது என்பதற்கு நீண்டகால ஒளிவுமறைவற்ற உதாரணங்கள் உள்ளன. குற்றவியல் ரீதியான இத்தகு அரச பயங்கரவாத நடவடிக்கைகளின் போது, நீதியும், தர்மமும், அகிம்சைத் தத்துவமும், சர்வதேச நடைமுறைகளும், சட்டங்களும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளமையும் வரலாறு ஆகும். கேணல் கிட்டுவின் தியாக மரணத்துக்கு இந்தியா காரணமாய் இருந்த சம்பவம் இன்னொரு உதாரணமாகும்.

இவ்விடயத்தில் இந்தியா வழமையான சர்வதேச சட்டங்களை (Customary) மீறி உள்ளது. இந்தியாவின் பிராந்தியக் கடல், தரையிலிருந்து 25 மைல்கள் ஆகும். இக்கடல் பகுதியினுள்ளே இந்தியச் சட்டங்களை மீறும் நடவடிக்கையை ஒரு கப்பல் செய்யுமானால் அதனைக் கைது செய்வதற்கு இந்திய அரசுக்கு உரிமையுண்டு. இந்தியக் கடல் எல்லைக்குள் சட்ட மீறலைச் செய்த கப்பலைத் துரத்திச் சென்று சர்வதேசக் கடல் பகுதியில் கைது செய்யவும் சர்வதேச கடல் சட்டங்களில் இடமுண்டு. ஆயினும், கேணல் கிட்டு சென்ற கப்பல் தென்னிந்தியக் கரையிலிருந்து 440 மைலில் இந்தியாவின் பொருளாதாரக் கடல் வலையமான 200 மைல்களுக்கு அப்பால் சென்று கொண்டிருக்கும் போதே இந்தியக் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தடுக்கப்பட்டுள்ளது. பின்னர், இந்தியக் கடல் எல்லையை நோக்கி பலவந்தமாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. பின்னர் கிட்டுவையும், அவருடன் சென்ற விடுதலை வீரர்களையும் சரணடைய வைக்கவும், கைது செய்யவும் எடுத்த முயற்சியின் போது, கப்பல் மாலுமிகளைத் தப்பவைத்த கிட்டுவும், அவரது வீரர்களும் எதிரியிடம் சரணடைய விரும்பாது, விடுதலைப் போராட்ட மரபின்படி, தங்களைக் கப்பலோடு அழித்து வீரச்சாவை எய்தியுள்ளனர்.

உள்ளூர் நேரம் 13ம் திகதி இரவு 10 மணிக்கு ஆரம்பித்த இந்தியக் கடற்படையின் கடற்கொள்ளை, 16ம் திகதி, சோழமண்டலக் கடலினுள்ளே கிட்டுவினதும் ஏனைய 9 போராளிகளினதும் உயிர்ச்சங்கமத்துடன் முடிவுற்றது. இத்தகைய படுபாதகக் குற்றம் புரிந்த இந்தியா சர்வதேச சமூகத்தின் முன்னால் குற்றவாளியாக நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

கிட்டுவின் தமிழீழம் நோக்கிய பயணம், சமாதானத்தையும், சுதந்திரத்தையும் முன்னெடுக்கும் நோக்கம் கொண்டவை என்பது தெளிவானது. சர்வதேச உறவுகளை உறுதிப்படுத்தி, சமாதானக் கதவுகளை அகலத்திறந்து, சுதந்திரக் காற்றை உள்நுழையச் செய்வதே அவரது நோக்கமாக இருந்தது. ஒரு சுத்த வீரனின் இலட்சிய வாழ்வு அவனது மரணத்தின் பின்னும் வாழும் வல்லமை கொண்டது. மேலும், இவ்வீரச்சாவு, அனைத்து தமிழ் மக்களுக்கும் ஓர் பாடமாயும் அமைந்துவிட்டது.

வல்லமை பொருந்திய சக்திகள், தமிழீழத் தேசியத்தை அழிக்கத் திட்டமிட்ட ரீதியில், ஆரவாரம் இல்லாமல் செயற்பட்டு வருகின்றன என்பதே அவ்வுண்மையாகும். மிக்க அவதானமும், விழிப்பும், நுணுக்கமும் நிறைந்த கேணல் கிட்டுவை, இரகசிய விழிகள் உற்று நோக்கிய வண்ணம் இருந்துள்ளன என்பதே எம்மை உறுத்தும் விடயமாகும். ஒரு சிலர் விழிப்புடன் இருந்தால் மட்டும் போதாது. உலகம் வாழ் தமிழர்கள் அனைவரும் துயில் கலைந்து விழித்திருக்க வேண்டும் என்ற போதனையும் இங்கு புலப்படுகின்றது.

தமிழ்த் தேசியம் நிலைபெற்று வருகின்றது. அதனை அழிக்க முற்படும் சக்திகள் இனங்காணப்பட வேண்டும். அவை குறித்து எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். அவற்றிலிருந்து எமது தேசியம் தற்பாதுகாக்கப்பட வேண்டும். எமது தேசிய விடுதலைக்கு தேவையானது தமிழ் மக்கள் அனைவரதும் ஒட்டுமொத்தமான விழிப்பு நிலையே.

www.tamilarangam.net





# ஒரு தீ
# தன்னைத தானே
# தீமூட்டிக் கொண்டது.

ஒரு சகாப்தம்
தன்னைத் தானே
கறைப்படுத்திக் கொண்டது
மனித நேயத்தின்
சிகரத்தைத் தொலைத்ததால்.

சமாதான கரு சுமந்து
போர்முகம் சென்ற புறா
ஆழக்கடல் நடுவே
அஸ்தமித்துப் போனதாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காந்தியின் கைத்தடி
மீண்டும் ஒருமுறை தவறிப் போனதால்
ஒரு தீ
தன்னைத் தானே தீமூட்டிக் கொண்டது.

சிதைந்த உடலும்
பிளந்த கபாலமும்
எலும்பும் சதையுமாய்
சிந்திய இரத்தமும்
ஒப்பாரி ஓலமுமாய்
எங்கள்
வாழ்வை மிதித்து
மண்ணை மிதித்து நகர்ந்த
அசோகச் சக்கரம்
மீண்டும் ஒருமுறை....

கிட்டு அண்ணா!
இந்தப் பெயருக்குத்தான்
எத்தனை முகங்கள்
கோதிக்கும் நெருப்பாய்
உருகும் பனியாய்
சுழலும் புயலாய்
வருடும் தென்றலாய்
இன்னும் இன்னும்....

விடுதலைப் புலிகளின்
மூத்த தளபதியே!
நீங்கள் எரிந்த கடலலைகள்
நாளை கரைவந்து சேர்கையில்
உங்களின் மூச்சை
சுவாசித்துக் கொண்டு
எங்களின் தேசம்
எழுந்து
நிமிர்ந்து நிற்கும்.

- கஜன் -

# உறுதி!

இலட்சியத்தோடு என்னை வளர்த்தான். என் உள்ளத்தில் ஒளிச்சுடரை ஏற்றினான். இலட்சிய உணர்வை என் இரத்தத்தில் செறிய வைத்தான். அச்சம் என்ற இருளை என்றோ அகற்றினான். துணிவே என் இயல்பு ஆயிற்று. வலிமையை பாய்ச்சி வீரத்தில் என்னை ஆழ்த்தினான். யான் பயமறியாத பலம் பெற்றேன். விறல் என்ற வீரத்திற்கு உரியவனானேன். நாட்டின் காவலனானேன். மக்களின் இமைபோலானேன்.

வீரமறவனானேன். போர்த்தழும்புகள் எனக்கு இன்பம் தந்தன.

மண்ணிலே மறவன் என்ற பெயர் சூடச் செய்தவன் என் தலைவனே. என்னை ஆக்கியோன் அவனே. உயிர் ஊட்டியோன் அவனே. என்னை நம்பிய தலைவனுக்கே என் உயிர் உரியது. அவனது இலட்சியமே என் இன்னுயிர். என் இறுதி மூச்சும் அதற்கே.

மாசுபடாத வீரமரணமாய் என் வாழ்வு முடியும். என் வெற்றியைக் கேட்டு மகிழ்ந்த என் தலைவனின் நெஞ்சம், என் மரணத்தைக் கேட்டுக் கண்ணீர் கசியும்! அந்த உன்னத முடிவையே யான் வேண்டுகிறேன்.

■ நாக. பத்மநாதன் ■

www.tamilarangam.net



**1987-05-26** வடமராட்சியில் "லிபரேசன் ஒப்பரேசன்" தொடங்கி இரண்டாம் நாள். நான் வல்வை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். இலங்கை இராணுவம் பலத்த எதிர்ப்புகளுக்கும், இழப்புகளுக்கும் மத்தியில், ஆகாய, கடல் தாக்குதல்களின் உதவியோடும் டாங்கிகள் சகிதமும் கொஞ்சம் கொஞ்சமாக தொண்டைமானாறு இராணுவ முகாமிலிருந்து முன்னேறிக் கொண்டிருந்தது.

அன்று அதிகாலை 5 மணியிலிருந்தே ஹெலி, பொம்மர், அவ்ரோ ஆகிய மூன்றும் தங்கள் இஷ்டம் போல் கண்மூடித்தனமாக வல்வெட்டித்துறையில் சகல பகுதிகளிலும் குண்டுகளை வீசியும், றொக்கற் தாக்குதலை நடத்திக் கொண்டும் இருந்தன. இக் முன்னேறிய இராணுவத்தின் கண்மூடித்தனமான 'ஷெல்' தாக்குதலினாலும், தொடர்ச்சியான ஆகாய, கடல் தாக்குதலினாலும் போராளிகள் மட்டுமல்ல, மக்கள் பலரும் படுகாயமுற்றனர். காயமடைந்த சகலரும் உடனுக்குடன் சென்ஜோன்ஸ் முதலுதவிப் பிரிவினால் எமது வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டார்கள். எமது வைத்தியசாலையிலோ ஒரே ஒரு கட்டிடம் தான் இரு மாடிகளைக் கொண்டது. அவ் இரு மாடிகளில் மேலே குழந்தைகள் வாட்டும், கீழே பிரசவ அறையுடன், பிரசவ வாட்டும் அமைந்துள்ளன. உயி

**சாந்தி**

ரைக் காப்பாற்றும் நோக்குடன் அவ்வூரில் உள்ள சிறுவர்கள் முதல் முதியோர் வரை அந்த

# சோதனை அலைகளைத் தாண்டிய துணிவுப் படகு

கண்மூடித்தனமான தாக்குதலினாலும் இராணுவம் முன்னேறிக் கொண்டிருக்கும் காரணத்தினாலும், பதுங்கு குழியினுள் இருப்பதற்கு மக்கள் பயந்தார்கள். இதன் நிமித்தம் அவ்வூர் மக்கள் சகலரும் வைத்தியசாலைக்குப் பாதுகாப்பைத் தேடி வந்து கொண்டிருந்தார்கள். வைத்தியசாலைக்கு அவ்வளவு துணிஞ்சு, கெதியாக, அநேகமாக குண்டு போடமாட்டான் என்று மக்களின் ஒரு சிறு நம்பிக்கை. அந்த நேரத்தில் வீண் போகவில்லை. எப்படியோ எமது வைத்தியசாலை குண்டுவீச்சுத் தாக்குதலுக்குள்ளாகவில்லை. ஆனால், "அவ்ரோ"விலிருந்து போடப்பட்ட குண்டுகளில் அனேகமானவை வைத்தியசாலையைச் சுற்றி அண்மித்த பகுதிகளிலேயே வீழ்ந்து வெடித்தன.

இரண்டு மாடிக் கட்டிடத்தின் கீழ்ப் பகுதியான பிரசவ வாட்டினுள் அடைக்கலம் புகுந்திருந்தார்கள். இந்நிலையில் இட நெருக்



கடி காரணமாக நான் காயமடைந்தவர்களை வெளிநோயாளர் பிரிவிலுள்ள மருந்து கட்டும் அறையில் வைத்தே அவர்களுக்குச் சிகிச்சை செய்துகொண்டிருந்தேன். அவ்வேளையில் ஒரு ஷெல் நாம் சிகிச்சை செய்துகொண்டிருந்த அறையின் யன்னலுக்கு அருகில் வெளிப்புறமாக வீழ்ந்து வெடித்தது. சகல ஊழியர்களும் நிலத்தில் வீழ்ந்து படுத்துவிட்டார்கள். அச் ஷெல்லினால் யன்னல் கண்ணாடிகள் நொருங்கியதுடன், நாம் நின்ற அறையில் போடப்பட்டிருந்த மின்குமிழ் (பல்பு) உடைந்து எம்மேல் கொட்டுப்பட்டது. எமது ஊழியர்கள் பதட்டமடைந்துவிட்டார்கள். ஆகவே காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டும், ஸ்ரெச்சரில் ஏற்றிக் கொண்டும் ஒரே ஒரு ஷெல் பாதுகாப்பு இடமான பிரசவ வாட்டினுள் நாமும் புகுந்தோம். அங்கு போனபோது கால் வைக்க இடமில்லாத அளவிற்கு நெருக்கடி. ஒருவாறு நிலைமையை எடுத்துச் சொல்லி, ஒரு சிறு இடம் ஒதுக்கி எடுத்து, அதில் மூன்று கட்டில்களைப் போட்டு காயமடைந்தவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சையளித்துக் கொண்டிருந்தேன். அதேநேரம் இறந்தவர்கள் இருவரை எம்மிடம் கொண்டு வந்து சேர்த்தார்கள். அத்துடன் நாம் சிகிச்சை செய்து கொண்டிருந்தபோது ஒரு மூதாட்டி இறந்துவிட்டாள். மொத்தத்தில் எம்மிடம் காயமடைந்தவர்கள் பத்துப் பேரும், இறந்தவர்கள் மூன்று பேரும் இருந்தனர்.

காயமடைந்த பத்துப் பேரில் ஐவர் போராளிகள். ஒருவர் என்னிடம் பயிற்சி பெற்ற 'சென்ஜோன்ஸ்' முதலுதவியாளன். அந்த முதலுதவியாளனுக்கு தலையில் பொம்மர் தாக்குதலினால் காயமேற்பட்டு மூளை வெளியில் வந்துவிட்டது. அவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தான். எனக்குத் தெரியும், அவர் தாய்க்கு ஒரே மகன். தந்தையும் இல்லை. என்னால் ஆனவரை அவனுக்குச் செய்யக்கூடிய சிகிச்சையெல்லாம் செய்தேன். ஆனால் காயப்பட்டு 7ம் நாள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அவன் இறந்துவிட்டான்.

போராளிகளில் ஒருவருக்குத்தான் கொஞ்சம் கடுமை. வயிற்றில் குண்டு பாய்ந்திருந்தது. ஆகவே அவருக்கு விசேட கவனிப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் இருந்ததால், அவரை பிரசவ வாட்டிலிருந்து பிரசவ அறைக்கு மாற்றி, அங்குள்ள ஒரு கட்டிலில் படுக்க வைத்தோம். (பிரசவ அறையினுள் மகப்பேற்றுக்காக 3 கட்டில்கள் மட்டும் போடப்பட்டுள்ளன.)

இந்நிலையில்தான் எனக்குப் பெரும் சோதனை ஏற்படத் தொடங்கியது. ஏற்கனவே பிள்ளைப் பெறுவுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஐந்து கர்ப்பிணித் தாய்மார்களும் மக்களுடன் மக்களாக அந்தப் பிரசவ வாட்டினுள் இருந்தார்கள். அவர்கள் யாவருக்கும் பிள்ளை பிறப்பதற்குரிய காலக்கெடுவுக்கு நாள் இன்னமும் இருக்கின்றது. அன்று காலைவரை எதுவித வலியோ, அறிகுறியோ இல்லாமல் இருந்தார்கள். ஆனால் தொடர்ச்சியான ஆகாயத் தாக்குதல்களினாலோ அல்லது இராணுவம் முன்னேறிக் கொண்டு வருவதினால் என்னவோ அவர்களில் இருவருக்கு பிரசவ வேதனை தொடங்கிவிட்டது. அதில் ஒருவர், ஏற்கனவே வயிற்றில் காயமடைந்து பிரசவ அறையில் எமது தீவிர கவனிப்பில் இருக்கும் போராளியின் சொந்த சகோதரி. இச் சகோதரி தம்பி காயப்பட்டு வந்த நேரத்திலிருந்து அழுதுகொண்டே இருந்தவர்.

இந்த உள ரீதியான தாக்கத்தினால் பிரசவ வலி சடுதியாக ஏற்பட்டிருக்கலாம் என்பது எனது அபிப்பிராயம். பிறகென்ன, உடனடியாக அவரைப் பிரசவ அறைக்குக் கூட்டிச் சென்று, தம்பியின் கட்டிலுக்குப் பக்கத்துக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டு, இரு கட்டில்களுக்குமிடையில் ஒரு திரை போட்டுவிட்டு, பிரசவத்தைப் பார்வையிடத் தொடங்கினேன். இதேநேரத்தில் வைத்தியசாலையைச் சுற்றி மும்முனைத் தாக்குதல்களும் நடந்து கொண்டிருந்தன.

இந்தத் தாய்க்கு இது இரண்டாவது பிரசவம் ஆகையால் ஒரு அரை மணித்தியாலப் போராட்டத்தின் பின்பு ஓர் அழகான ஆண் மகவைப் பெற்றெடுத்தார். எல்லாருக்கும் திருப்தி? ஆனால் எமது திருப்தி? ஏன் தாயின் சந்தோசம் கூட ஒரு வினாடியில் பறந்துவிட்டது. அவரின் முகத்தில் கூட ஓர் இனந்தெரியாத பீதி. ஏனென்றால் இப்ப பிறந்தவன் ஆம்பிளைப் பிள்ளையல்லவா? இவன் சிலவேளை மாமனைக் கொன்றுவிடுவானோ என்ற பயம் சகலரின் மனத்திலும் பட்டுவிட்டது. ஆனால் மாமனுக்கோ பெரும் சந்தோசம். பிள்ளை பிறந்தவுடன் "டேய் அக்காவுக்கு பையன் பிறந்திருக்கிறானடா" என்றவுடன் அவன் முகத்தில் ஏற்பட்ட சந்தோசத்தை வார்த்தைகளில் சொல்ல முடியாது. பிறந்த பிள்ளையோ பாவம். அது என்ன தப்பு பண்ணியது நாம் எல்லோரும் திட்டுவதற்கு. அதுவோ எம்மைச் சுற்றி நடப்பது எதனையும் புரியாமல், எம்மையெல்லாம் மலங்க மலங்கப் பார்த்தது. ஆனால் நாம் நினைத்த மாதிரி, பயந்த மாதிரி எதுவுமே நடக்கவில்லை. சகலதும் மூடக் கொள்கைதான் என்பதைப் புரிந்து கொண்டோம். தாயும், சேயும் மட்டுமல்ல, பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த மாமா கூட நலமாகத்தான் கடைசிவரை இருந்தார். எமது இப்போராட்டம் நடந்தது மதியத்தின் பின் 2 மணியளவில். கிட்டத்தட்ட மாலை 5 மணி இருக்கும் எமது ஆதரவாளர் எம்மிடம் வந்து "இராணுவம் வல்வெட்டித்துறைச் சந்திக்குக் கிட்ட வந்திட்டான். நீங்கள் எல்லோரும் வெளிக்கிடுங்க" என்று மக்களிடம் சொன்னார். அவர் சொன்னதுதான் தாமதம் சகல மக்களும் தமது மூட்டை முடிச்சுகளுடனும் குழந்தை குட்டிகளுடனும் மந்திகையை நோக்கி நடக்கத் தொடங்கிவிட்டார்கள். எமது ஊழியர்களிலும் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் தங்கள் பயணத்தைத் தொடங்கிவிட்டார்கள். யாருக்குத்தான் பயமில்லை. ஆனால் என் நிலையோ வைத்தியசாலைப் பொறுப்பு ஒரு பக்கம். அடுத்ததாக வாட்டினுள் காயமடைந்தோர் பத்துப் பேர். இறந்தவர்கள் மூன்று பேர். அத்துடன் ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன் பிரசவித்த தாய்மார்கள் இருவர்.

வந்த ஆதரவாளர் மீண்டும் என்னிடம் வந்து "டொக்டரம்மா, நீங்க எல்லாரும் வெளிக்கிடுங்க. காயக்காரர்களை ஏதோ விதத்தில் ஏற்றுவம்" என்றார். அதேநேரம் இரண்டு ஹெலிகள் எமது வைத்தியசாலையைச் சுற்றி கலிபர் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தன. நாம் உடனடியாக செயல்பட்டு எமது அம்புலன்சுக்கு பச்சை ஓலை கட்டி, உருமறைப்புச் செய்து, அதில் காயமடைந்தவர்களை ஏற்றிவிட்டு, பிரசவ தாய்மார்களை சைக்கிள்களில் ஏற்றி அனுப்பிவிட்டு, இறந்தவர்களை அப்படியே வாட்டினுள் விட்டு விட்டு, வைத்தியசாலையின் முக்கிய பகுதிகளைப் பூட்டிவிட்டு, திறப்புகளுடனும், என்னுடன் கூட நின்ற ஒரு சில ஊழியர்களுடனும் நடந்தேன். ■□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**1992**ம் ஆண்டின் மாவீரர் நாள் பிறக்கப் போகின்றது. இந்த நாளின் பிறப்பின்போது நாம் மாவீரர் துயிலுமில்லத்தில் நிற்க வேண்டும். இதற்காகச் சென்று கொண்டிருக்கின்றோம். பகலிலேயே எங்கோ ஒருவரைத்தான் காணக்கூடியதாக இருக்கும். இராசபாதையில் இந்த நள்ளிரவிலும் ஒரே மக்கள் கூட்டம். இந்த வீதியிலிருந்து மாவீரர் துயிலுமில்லத்திற்குச் செல்லும் வீதியில் இன்னும் கூடுதலான மக்கள் ருக்கிறார் எண்டு சொல்லுவியே... இப்ப கிளியண்ணை வந்திருக்கிறார் ஒருக்காப் பார் ராசா....' ஒரு மாவீரனின் சமாதியில் அவர் தாய் அழுது கொண்டே சொல்லும் வார்த்தைகள் எமது நெஞ்சைப் பிழிகின்றது. கண்ணீர் முட்டுகிறது. கூட வந்தவர்களுக்குத் தெரியாதபடி துடைத்துக் கொள்கிறேன். இப்போதே அழத்தொடங்கினால்.... கஷ்டப்பட்டு கண்ணீரைச் சிக்கனப்படுத்திக் கொள்கிறேன்... பின்பு தேவையல்லவா. காட்டிக்கொள்ளச் சிரமப்படுகின்றேன். ஒவ்வொரு வினாடியும் செல்லச் செல்ல மயிர்க் கால்கள் குத்திடுகின்றன.

மாவீரர் துயிலுமில்லத்தில் முதலாவது சுடர் ஏற்றப்படும் இடம், அந்த நேரத்தை எதிர்பார்த்தபடி மனம் எதையோ தேடுகின்றது. 12.00 மணி யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் முதலாவது சுடரை ஏற்றுகிறார். எங்கும் ஆலயமணியோசை... தீபத்தில் ஏற்றப்படும் ஒளியைத்

# இன்றைய நிகழ்வில் அன்றைய நினைவுகள்

கரும்பறவை

திரள் திரளாகச் செல்கிறார்களே.... இவர்கள் கிளாலியை நோக்கிச் செல்லும் மக்கள் கூட்டமல்ல.... நல்லூர்த் திருவிழா முடிந்ததும் கடலைக் கடைகளுக்கும் ஐஸ்கிறீம் கடைகளுக்கும் வேடிக்கை பார்க்கும் கூட்டமும் அல்ல... அனைவருமே உணர்ச்சிப் பிழம்புகளாய் காட்சியளிக்கின்றார்கள். எங்கள் தேசத்தின் விடுதலையைச் சத்தியம் செய்யும் அந்தக் கூட்டத்தினூடேதான் போய்க் கொண்டிருக்கின்றோம். இது ஒரு வித்தியாசமான அனுபவம்தான். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின்போதும் மனதுள் ஏதோ ஒன்று... அதை விபரிக்க முடியவில்லை.

"என்ரை ராசா.... கிளியண்ணை வந்திருக்கிறார்.... பாரன்... ராசா... சத்தம் போடாதையணை கிளியண்ணை வந்தி

வழியில் இந்த ஆண்டு மாவீரர் தினம் பிறக்கும் வேளையில் மணியோசைக்குப் பின் ஒலிக்கவிருக்கும் மாவீரர் பாடலைப் பாடிய வர்ணராமேஸ்வரன் வருகிறார். "ராமேஸ்வரன் எனக்குப் பக்கத்தில் நில்லுங்கோ.... நீங்கள் தான் எனக்குப் பக்கத்தில நிண்டு பாடுறது" உரிமையுடன் கட்டளையிடுகிறார் புதுவையண்ணா.... இப்படித்தான் நாங்கள் எங்கள் மக்களை வசப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

சுற்றும் முற்றும் பார்க்கிறேன். மாவீரர் சமாதியில் ஊதுவத்திகளைக் கொழுத்தியும், மலர் வைத்தும்..... எந்த ஒரு ஆலயமும் இந்த மாதிரியான புற, அகத்தூய்மையோடு காணப்படுவதில்லை..... கண்ணீரைக் கட்டுப்படுத்த சிரமமாக இருக்கிறது. சாதாரணமாக இருப்பதாகக்

தொடர்ந்து எனது கண்கள் எனது கட்டுப்பாட்டை இழக்கின்றன. ஆலயமணியோசை ஒலிக்கு மட்டும் மௌனமாக நின்று அஞ்சலிக்கின்றோம். ராமேஸ்வரன் பாடுகின்றார். இதே பாடல் ஒலிபெருக்கியிலும்... நாம் உறுதியெடுத்துக் கொள்கிறோம்...

வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்

வரலாறு மீதிலும் உறுதி.

விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை

வீரர்கள் மீதிலும் உறுதி.

இழிவாக வாழோம் தமிழீழப் போரில்

இனிமேலும் ஓயோம் உறுதி.

நான் ஏன் அழுகின்றேன்... இழப்புக்களால் உரமேறிய தேசமல்லவா எனது தேசம்... ஐயாயிரத்துக்கு மேலும் சில நூறு

www.tamilarangam.net



பேர்களை இழந்து விட்டோமே, இன்னுமா மாறவில்லை நான். சிலனது வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. "போராளிகள் மென்மையான மனமுடையவர்கள். மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் கண்டு மனம் சகிக்க முடியாதவர்களே போராளிகளாகின்றனர். அதைத் தாங்கிக் கொண்டு சாதாரணமாக இருக்கக்கூடியவர்கள்தான் போராட்டத்திற்கு வெளியில் நிற்கிறார்கள்" எவ்வளவு அச்சொட்டான வார்த்தைகள் இவை. சூழவுள்ள மக்களைப் பார்க்கிறேன், எத்தனை எத்தனை ஆயிரம் சொந்தங்கள் எமக்கு... எல்லோரும் எம்மவர்கள்...



ஆனால் அன்று நீயும் ஆனந்தும் எரிக்கப்படும் போது உங்களுக்குப் பக்கத்தில் ஒருவருமே இல்லையே... உனது வீரச்சாவுச் செய்தியைக் கேட்டு திருமலையிலிருந்து பறந்து வந்த உனது அம்மா, உனது உடலைத் தரும்படி எவ்வளவு மன்றாடியிருப்பார் சிறிலங்கா இராணுவத்திடம். அவர்கள் உனது உடலைக் கொடுக்கவில்லையே... பௌத்த தர்மம் அங்கு இடமளிக்கவில்லை... இன்று இந்தத் தேசமே நிமிர்ந்து நின்று எங்களுக்காகச் சொந்தம் கொண்டாடுகின்றது. நாங்கள் வளர்ந்து விட்டோம்... எங்கும் போராளிகள்... பொதுமக்கள்...

ஒரு தாக்குதலுக்காக யாழ் நகரப்பகுதிக்குள் சென்றுகொண்டிருக்கிறோம். மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில் இராணுவத்தினர் இரண்டு வாகனங்களில் வந்து இறங்குகின்றனர். கம்பீரமான தோற்றத்துடன் தனக்குச் சொந்தமில்லாத மண்ணில் நடமாடுகின்றனர் இராணுவத்தினர். அப்போது நீ சொல்கிறாய், ''இதப்போல நாங்களும் ஆம்ஸைக் கட்டிக்கொண்டு சுதந்திரமா பஸ்ரான்றுக்க திரியவேணும். அப்ப அது புதினமில்லாத மாதிரிச் சனம் போகவேணும்", எவ்வளவு ஆசையாகச் சொன்னாய் இதை. போராட்டம் வெல்லும்... நாங்கள் வளர்வோம் என்பதெல்லாம் நாம் எதிர்பார்த்ததுதான். ஆனால் இவ்வளவு விரைவாகவா. எல்லாம் இன்று போல் இருக்கிறது.

"உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்

உறவினர் வந்துள்ளோம்."

இதே நேரம் இந்த மாவீரர் துயிலுமில்லத்தில் ஏதோ ஒரு இடத்தில் அழுது கொண்டிருப்பார்கள் எனது குஞ்சமாவும், குஞ்சையாவும். எனது இளமைக் காலங்கள் நினைவுக்கு வருகின்றன. இவர்களின் மகன் நக்கீரன் (செந்தில்குமரன்) அப்போது பிறக்கவில்லை. (ஆறு பெண்பிள்ளைகளுக்குப் பின்னே இவன் பிறந்தான்) ஒவ்வொரு பிள்ளையும் பிறக்கும் போது இது ஆண்பிள்ளையாக இருக்காதா என்ற எதிர்பார்ப்பு இருக்கும். இனி ஆண்பிள்ளையே பிறக்காது; தமக்கு இறுதிக் கடன் செய்ய ஆண் பிள்ளை இல்லையே என்று குஞ்சையாவுக்கு ஒரு ஏக்கம். அதனால் அவர் என்னுடன் கூடியளவு பாசத்துடன் இருந்தார். ஒரு நாள் எனக்குத் தேவையான பழவகைகளை வாங்கித் தந்து ''குஞ்சையாவுக்கு கொள்ளி வைப்பியா மனா?'' என்று கேட்டார். நானும் 'ஓம்' என்றேன். அவருக்கு மகிழ்ச்சி தாளவில்லை, அதன்பிறகு எனது தேவைகளை நிறைவேற்றுமிடத்தை நான் தெரிந்துகொண்டேன். ஒவ்வொரு தடவையும் அவர் என்னைக் கேட்பார்

"என்ரை ராசா.... கிளியண்ணை வந்திருக்கிறார்.... பாரன்... ராசா... சத்தம் போடாதையணை கிளியண்ணை வந்திருக்கிறார் எண்டு சொல்லுவியே... இப்ப கிளியண்ணை வந்திருக்கிறார் ஒருக்காப் பார் ராசா....' ஒரு மாவீரனின் சமாதியில் அவர் தாய் அழுது கொண்டே சொல்லும் வார்த்தைகள் எமது நெஞ்சைப் பிழிகின்றது. கண்ணீர் முட்டுகிறது. கூட வந்தவர்களுக்குத் தெரியாதபடி துடைத்துக் கொள்கிறேன். இப்போதே அழத்தொடங்கினால். ... கஷ்டப்பட்டு கண்ணீரைச் சிக்கனப்படுத்திக் கொள்கிறேன்... பின்பு தேவையல்லவா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''குஞ்சையாவுக்கு என்ன செய்வாய்?'' 'கொள்ளிவைப்பன்' இதன் தாக்கம் விளங்காது பதில் சொல்லும் வயது.

ஏழாவதாகச் செந்தில்குமரன் பிறந்தான். அவன்மீது பாசமாகக் கொட்டி வளர்த்தார்கள். நானும் வளர்ந்து விட்டேன். அப்போதெல்லாம் இந்தப் பழைய சம்பவத்தை எனது குடும்பத்தாரிடம் சொல்லிச் சிரிப்பேன். "இப்ப குஞ்சையா செத்து நான் கொள்ளிவைக்கப் போனால், குஞ்சையா பெட்டிக்குள்ளால எழும்பி "ஏன் நீ கொள்ளி வைக்கிறாய்? செந்தில் எங்கை போட்டான்?" எண்டு கேட்பார் என்று சொல்லிச் சிரிப்பேன்.

அவன் இயக்கத்துக்குப் போய் மாவீரர் ஆனதும் நான் அங்கே போனேன். அப்போது அவர் 'டேய் நீ சின்னனாய் இருக்கேக்கை குஞ்சையாருக்குக் கொள்ளி வைப்பனெண்டெல்லோ சொன்னனீ.. வைப்பாய்தானே?' என்றார்.

புரியாத வயதில் சொன்ன அந்த வார்த்தைகளில் இத்தனை அர்த்தமா...? இத்தனை தாக்கமா...? தொடர்ந்து பாடல் ஒலிக்கின்றது.

"......... அன்று

செங்களம் மீதிலே உங்களோடாடிய

தோழர்கள் வந்துள்ளோம்"

- அடிபட்ட பந்தாக மீண்டும் சீலனை நோக்கி நினைவுகள்... சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், மேல் மாடியில் காலில் காயப்பட்ட சீலன் காலை இழுத்துக் கொண்டு வருகிறான். நிப்பீட்டரையும் இழுத்துக் கொண்டு; இயலாத நிலையில் மாத்தையாவிடம் நிப்பீட்டரை கொடுத்துவிட்டு அந்த பொலிஸ் நிலைய வளவில் தேங்கியிருந்த மழைத்தண்ணீரைக் குடிக்கிறான். தொடர்ந்து படுத்தபடியே அவனது உத்தரவுகள் "ஒண்டையும் விடக்கூடாது எல்லாத்தையும் ஏத்தவேணும்'' இயந்திரமாக இயங்குகிறோம். எல்லாவற்றையும் ஏத்தியதும் மினிபஸ் புறப்படுகின்றது. அழுதபடியே ரஞ்சன் காயப்பட்ட எல்லோரையும் கொஞ்சுகிறான். (சீலன், புலேந்திரன், ரகு) எல்லோரையும் காப்பாற்ற விரைவாக வாகனத்தைச் செலுத்துகிறான் சங்கர். இன்று இந்தத் தாக்குதலில் கலந்து கொண்டவர்களில் ரகுவும், ராமுவும் இயக்கத்தில் இல்லை. நானும் மாத்தயாவும் மட்டுமே இயக்கத்திலிருக்கிறோம். அன்று மற்றவர்கள் காயப்பட்டதற்காக அழுத ரஞ்சன் உட்பட ஏனைய அனைவரையும் தொலைத்துவிட்டு நிற்கிறோம். அதேவரிகள் மீண்டும்.

......... அன்று

செங்களம் மீதிலே உங்களோடாடிய

தோழர்கள் வந்துள்ளோம்.

வரிசையாக நினைவுக்கு வருகின்றனர். "யாழ்ப்பாணத்துக்கு வெளியில அடிக்க வேணும்" என்று அடிக்கடி கூறும் செல்லக்கிளியம்மான்.

உமையாள்புரத்தில் இராணுவத்தினர் ஓடும்போது சிரித்தபடியே "துரத்துங்கோடா" என்றபடியே அவர்களின் ட்றக்கில் ஏறிய செல்லக்கிளியம்மான்... கழுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதலில் ''அம்மாட்டச் சொல்லுங்கோ நான் சண்டையிலதான் செத்தனானெண்டு'' என்று சொன்ன பரமதேவா, ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடுமையாகச் சண்டை நடந்து கொண்டிருக்கும்போது "ரெண்டு கிறனைட் தாங்கோ, நான் உள்ளுக்கை போய்க் காட்டுறன்" என்று சொன்ன விசாகன், ''அண்ணை ஒரு சக்கைக் கானைத் தாங்கோ, நான் கொழுத்திக் கொண்டுபோய் உள்ளுக்கை வச்சிட்டு வாறன்" என்று சக்கைக்கானை வாங்கிக்கொண்டு துப்பாக்கி வேட்டுகளுக்கிடையே பொலிஸாருக்கு மத்தியில் அதை வைத்துவிட்டு வந்த கமல்... இன்னும் எத்தனை எத்தனை...

"எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை

இங்கே திறவுங்கள்.

ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே

மறுபடி உறங்குங்கள்"

தவிக்கும் மனதின் வார்த்தைப் பிளம்பு இது. எனக்கு இதற்கும் மேல்... "ழ"கரம் "ல"கரம் வித்தியாசமில்லாமல் மழலையாக ஒலிக்கும் சீலனின் வார்த்தைகளைக் கேட்க வேண்டும்போல் இருக்கிறது.

"நள்ளிரா வேளையில் நெய் விளக்கேற்றியே

நாமுமை வணங்குகிறோம்"

பசீனுக்கு எப்போதும் சந்தேகம்; இந்த சயனைட் வேலை செய்யுமாவென்று அடிக்கடி கேட்பான் "அண்ணை இது வேலை செய்யுமோ", "அது வேலை செய்யும் நீ போடா" வல்வெட்டித்துறைக்கு அனுப்பி வைப்போம். நாம் எத்தனை தரம் சொன்னாலும் அவனுக்குத் திருப்தியில்லை.

## சாகும்போதும் தேடல்

கிரேகத்தின் பெரும் சிறையில் சிறைப்படுத்தப்பட்ட சோக்ரடிஸ் தன் மரணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அப்பொழுது அவருடன் அந்தச் சிறையில் இருந்த மற்றொரு கைதி ஒரு பாடலைப் பாடினான். உடனே சோக்ரடிஸ் அந்தக் கைதியிடம் ஓடிச் சென்று அந்தப் பாடலைத் தனக்கு மீண்டும் ஒருமுறை பாடிக் காட்டுமாறு வேண்டினார்.

"மரண தண்டனைக் கைதியான உனக்குச் சாகப் போகும் நேரத்தில் இது எதற்கு!'' என்று ஏளனமாகக் கேட்டான் அந்தக் கைதி. இதைக் கேட்டுவிட்டு "சாவதற்குள் இன்னும் ஒரு புதிய விஷயத்தைக் கூடுதலாகத் தெரிந்து கொள்ளலாமே" என்று பதில் கூறினார் கிரேக்க ஞானி சோக்ரடிஸ்.

எதையும் துருவித் துருவித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்தான் எத்தனை ஆர்வம் அந்த மேதைக்கு.

கல்மடு செல்வதேவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு நாள் நள்ளிரவு, களைத்துப்போய் வந்த நான் படுக்கப் போகிறேன். அப்போதும் கேட்கிறான், "அண்ணை இது வேலை செய்யுமோ" எனக்கு எரிச்சல் "வேலை செய்யாது போலகிடக்கு... உன்னிலதான் ரெஸ்ற் பண்ணவேணும்... போய்ப்படடா"

அவன்தான் எமது இயக்கத்தில் முதன் முதல் சயனைட் உட்கொண்டவன். அந்தச் செய்தி கிடைத்ததும் நான்.... "இந்த வாயால் இனி எதுவும்..."

"எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்"


கண்ணால் காணமுடியவில்லைத்தான், அனால் மனதில் அனைவரது முகங்களும்... அங்கிருந்து நகர்கிறேன்.

"உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் அதை
நிரைநிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்"

என்ற வரிகளை மனதில் சுமந்தபடி அங்கிருந்து நகர்கிறேன். கடந்த வருடத்தைப் போலவே அங்கு பலர் மயங்கி விழுகின்றார்கள். முதலுதவிப் படையினர் அழைக்கப்படுகின்றனர். அறிவிப்பாளரின் மொழியில்கூட சோகம்...

உலகத்தில் எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் இப்படியொரு காட்சியைக் காணமுடியாது என்று என் மனது சத்தியம் செய்கிறது. ■■

# என் தோழர்களுக்கு....



நீண்ட காலமாக சிங்கள இனவாதப் பிடிக்குள் சிக்கி அல்லல் உற்றுக் கொண்டிருக்கும் எனது மக்களுக்கு, என்னால் முடிந்தவரை சேவை செய்ய விரும்புகின்றேன். ஆதரவற்று தினம் தினம் மடிந்து கொண்டிருக்கும் எனது மக்களுக்கு ஒரு தோழனாக, தந்தையாக, சகோதரனாக, நண்பனாக இருக்க விரும்புகின்றேன்.

இயக்கம் என்பது அவர்களைப் பாதுகாக்கும் வெறும் இராணுவ அமைப்பு மட்டுமல்ல; அவர்களுக்கு நல்வழி காட்டி; வாழ்வை வளப்படுத்தும் அமைப்பும் கூட.

இயக்கம் என்பது மக்களுக்கு அமைதியையும், வாழ்வையும், வாழ்க்கையில் நம்பிக்கையையும் கொடுக்கின்ற ஒரு அமைப்பாக விளங்க வேண்டும். எந்தக் கட்டத்திலும் மக்களுடைய சுதந்திரத்திற்கோ, வாழ்வுக்கோ இடையூறாக அமைந்துவிடக்கூடாது.

நாம் ஆயுதங்களை ஏந்தியிருப்பது மக்களுக்கு ஓர் சுதந்திரமான, சுபீட்சமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே. அதே ஆயுதங்கள் எமது மக்களுக்கே அச்சுறுத்தலாக ஒருபோதும் மாறிவிடக்கூடாது.

விடுதலைக்காக ஆயுதம் ஏந்தும் ஒவ்வொரு இளைஞனும் தான் யாருக்காக போராடுகின்றேன் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆயுதம் ஏந்துகின்ற ஒவ்வொரு இளைஞனும் இதைச் சரியாகப் புரிந்து கொண்டு உள்ளானா என்பதை இயக்கம் அடிக்கடி பரிசோதித்துக் கொள்ள வேண்டும். சில சமூக விரோத சக்திகள் ஊடுருவச் செய்வார்கள். இவ்விடயத்தில் இயக்கம் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

மக்களுடைய சுதந்திரத்திற்காகப் போராடும் இயக்கம் இயல்பாகவே மக்களை வழிநடத்திச் செல்லும் தலைமையையும், அதிகாரத்தையும் பெற்றுக் கொள்கின்றது.

அவ்வதிகாரமானது ஒரு குடும்பத் தலைவனுக்குரிய பொறுப்பையும், கடமையையும், தலைமையையும் கொண்டிருக்க வேண்டுமே ஒழிய, மக்களுக்கு எஜமானர்களாக மாறிவிடக்கூடாது.

பொதுவாக அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தைக் கையிலெடுத்துப் பழகும்போது அது ஒரு வகையில் சர்வாதிகாரத் தன்மைக்கும் இட்டுச் செல்லும். ஆனால் மக்களை நேசித்து, மக்களுடனேயே வாழும், மக்களின் அடிப்படைத் தேவையைப் புரிந்து கொள்ளும் ஒரு இயக்கம் சர்வாதிகாரத் தன்மைக்கு செல்ல முடியாது.

இயக்கத்தில் தலைவர்களாக உள்ளவர்கள் மக்களில் சகல தரப்பினருடனும் தொடர்புடையவர்களாகவும், சகலருடைய கருத்துக்கும் மதிப்பளிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

எல்லோரையும் எமது மக்களாகக் கருதுபவர்களாகவும், எல்லோருடைய நல்வாழ்வுக்காகவும்தான் போராடுகின்றோம் என்பதை உணர்பவர்களாகவும் இருக்க வேண்டும்

□ கிட்டு □ 23/06/1991

www.tamilarangam.net





கடல் தாயின் மடி மீது கப்பல்
கப்பலில் எங்களின் அண்ணன்
தமிழ் ஈழக் காற்று வந்து
அலை கடல் மடியுருட்ட
ஆர்ப்பரிக்கும் கடல்
எழுகின்ற ஒவ்வொரு அலைக்குள்ளும்
மாவீரர் முகங்கள்.
உப்புக் கரித்த காற்று
செவிக்குள்
தமிழ்ப் பாவின் சுவை நனைக்க.

இன் துயரால்
நெஞ்சைப் பிழியும் நிலவு;
நிலவில் தோய்ந்து, தோய்ந்து
கப்பல் எழ
நீள, நீள
அவன் நினைவோ பாலமிடும்.
மண்ணின் ஜீவ
உறவின் துடிப்பில்
இதயம் அசைய
ஈரம் கொள்ளும் நெஞ்சும்

www.tamilarangam.net



மண்ணின் காதலால்
கெஞ்சும் விழியும்
கனத்தே நிறைய
எங்களின் அண்ணன்
சூரியனைப் பிழக்கும் சூரியனோ!
சுடரும் பேரறிவின் அழகோ!
பின்னை இவன், தமிழ் அன்னையின்
பிள்ளையல்வா!

என்ன இது!
பேரிடி எம்மினத்தின் மீது
வீழ்ந்ததுவே!

விடுதலைத் தேவி!
நின் வரவால் செழிப்பாள்.
வேகமும் உடுத்தியவள் நிலமதிர நடப்பாள்
என்றறிந்தோ எதிரி பயந்தனன்
சதிவலைப் பின்னல் கொண்டு
அன்ன நினைத்தனன்....



பற்றிப் பற்றிச்
சுவாலித்து எரியும்
தீயோடு விளையாட்டு
மானுடத்தை நெரித்துக் கொல்லும்
குணம் வேறு.
பெரியவாள் நீ என்ற நினைப்பும்
பேட்டை ரவுடித்தனமும்
முதலில் களை.

பொழுதெல்லாம் போற்றிப்
போரை வளர்த்தவன்
இந்தப் போர் வெல்ல
தன் வாழ்வை ஈய்ந்தவன்.
அவன் நேயம் அதிர்வாய்
உயிருள் ஒலியாய் நிற்க
அவன் நினைவால் நெகிழ்ந்து
எம் தேசம் அழுதது.



எண்ணியது கூடுவது
எம்மிடத்தில்லைக் காண்!
திண்ணிய உறுதி
நெஞ்சம் கொண்டவர் ஆடும்
சமர்க்களம்
உந்தனுக்கு இன்னும் புதிதோ?

ஒரு மண்ணின் விடுதலை
உந்தன் அகலத்திறந்த
சந்தைக் கோப்பானதல்ல.

காற்றில் கலந்த வீரர் மூச்சு
மூச்சுள யாவும் வீச்சுடன் நிமிரும்.
மூசும் இளைய கன்றும்
மூசி, மூசி எழும் எங்களின் மண்ணும்
இப்படி ஓர் இடி எப்படித் தாங்கும்.
புவியெலாம் அதிரு!
பூகம்பமே எழுந்து ஆடு!
தீயே பரவு!
திசையெலாம் மானுடம் கொல்லும் செயல் அறு.
வழி விடு, வழி விடு
சுதந்திரத் தேவி வருகிறாள்.

* சுபா *

www.tamilarangam.net



# நமக்குத் தேவைப்படும் அரங்கு

க. சிதம்பரநாதன்

விழிப்பு இன்றி விடுதலை சாத்தியமில்லை. சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளை விளங்கிக் கொண்டு அவற்றை மாற்றுவதற்கான வழியில் தாக்கமான செயற்பாட்டில் ஈடுபடும் அளவிற்கான விழிப்பு நிலை மக்களிடத்து ஏற்படாதவிடத்து அந்த மக்கள் கூட்டம் தன்னை தளைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு அருகதையற்ற ஒரு கூட்டமாகவே விளங்கும். ஒரு விடுதலைப் போராட்டத்தில் பண்பாட்டு எழுச்சி அடைதல் ஓர் முக்கிய கட்டம்.

"இத்தகைய பண்பாட்டு எழுச்சியை ஏற்படுத்துவதில் கலைகள், முக்கியமாக அரங்கு சிறப்பான பங்கை வகிக்க முடியும். குறிப்பாக அரங்கு ஏனைய கலைகளை விட சமூகத்தால் மிக இறுக்கமான முறையில் நிர்ணயிக்கப்படும் ஒன்றாக உள்ளது. பொது மக்களோடு அது கொள்ளும் நெருக்கமான தொடர்பும், நம்ப வைப்பதில் அது கொண்டுள்ள கூடிய வலுவுமே இதற்குக் காரணமாக அமைகின்றது." என்று ஒகஸ்ரா (B)போல் என்றவத்தின் அமெரிக்க அரங்கச் செயலாளி கூறுகின்றார்.

அரங்கு உண்மையில் ஓர் ஆயுதம். மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம். இந்தக் காரணத்தினால் அரங்கைச் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் பயன்படுத்த நாம் பாடுபட வேண்டும். இதே காரணத்திற்காகத்தான் ஒடுக்குமுறையாளர்கள் அரங்கை தமது செல்வாக்கைப் பொதுமக்கள் மீது திணிக்கும் கருவியாகப் பயன்படுத்தப் பெரு முயற்சி செய்கிறார்கள். தமது மேலாண்மையை மக்கள்மீது செலுத்தும் கருவியாக அரங்கைப்பாவிப்பதற்காக அரங்கின் சாரத்தையே இவர்கள் மாற்றிவிடுகின்றார்கள். உண்மையான அரங்கின் ஒரு திரிவுபட்ட வடிவத்தையே எமக்கு இவர்கள் காட்டுகின்றார்கள். நாமும் அதையே உண்மையான அரங்கு என்று நம்பி எம்மை அடிமைப்படுத்த, மந்தைகளாக்கப் பயன்படுத்தப்படுகின்ற அதே அரங்கையே பயன்படுத்த முயல்கின்றோம். இதுபற்றி ஓரளவுக்கு விளக்கமாகச் சற்றுப் பின்னர் நோக்குவோம்.

உண்மையில் அரங்கு தன் தோற்றத்தில் மக்கள் சுதந்திரமாக திறந்த வெளிகளில் ஆடிப்பாடும் ஒரு கலையாக இருந்ததாக அரங்க மானிடவியலாளர்கள் கூறுவர். அரங்கு பற்றிய மிகவும் பழமை வாய்ந்த சான்றுகள், புராதன கிரேக்கத்தில், 'தயோனிஸியஸ்' விழாக்களை பல மட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடிப் பங்கு பற்றும் பாரிய சனரஞ்சகக் கொண்டாட்டங்களாகவே கூறுகின்றன. ஆரம்பத்தில் அரங்கு கோரஸ், வெகுசனங்கள், மக்கள் என்பதாகவே இருந்தது. இந்த அரங்கு அனைவரும் சுயாதீனமாகப் பங்குபற்றக் கூடிய கொண்டாட்டமாகவே இருந்தது.

பின்னர் வந்த மேற்குடி மக்கள் அரங்கை ஆற்றுபவர்களாகவும், பார்ப்போர்களாகவும் பிரித்தனர். சிலர் மேடையில் ஆற்றுகையில் ஈடுபட, ஏனையோர் அமைதியாக சொல்முனைப்பற்ற நிலையிலே இருந்து பார்ப்போர்களாக ஆக்கப்பட்டனர். இவர்கள் 'பார்வையாளர்கள்' என்று அழைக்கப்பட்டனர். மேடையில் நடப்பவற்றை இவர்கள் கண்மூடித்தனமாக நம்பினர். மேடையில் உள்ள நடிகர்களின் உணர்ச்சிகளுக்கே பார்வையாளர்களும் வசப்பட்டனர். பார்வையாளர்கள் எதுவும் சிந்திப்பதில்லை. வெறும் சடங்களாக ஆக்கப்பட்டனர். ஒடுக்குமுறையாளர்கள் இவ்வாறு மக்களை மந்தைகளாக்கி அவர்கள் மீது தமது கருத்துக்களை திணிக்கும் வகையிலே அரங்கைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயன்படுத்தியதன் மூலம் தம்மை அசாதாரன சிறப்புக்குரிய மனிதர்களாக்கப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். மக்கள் சடங்களாகினர்.

இன்று எம் மத்தியில் நிலவுகின்ற அரங்குகளில் பெரும்பாலானவை இத்தகைய அரங்குகள் தான். அரங்கு என்றவுடன் எமது எண்ணத்திற்கு வருபவை யாவை? பெட்டிபோல் அடைக்கப்பட்ட மேடை, நடிகர்களையும் பார்வையாளர்களையும் பிரிக்கும் முன்திரை, இருட்டிலே கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் பார்வையாளர்கள்...

ஒரு தாக்க வன்மையுள்ள மக்களை எழுச்சி கொள்ள வைக்கின்ற அரங்கே நமக்குத் தேவையானது. கலைப் படைப்பிற்கும் பார்வையாளர்களுக்கும் உள்ள தொடர்பு ஒரு இருவழித் தொடர்பாக அமைதல் நமக்குத் தேவைப்படும் அரங்கில் முக்கியமானதாகும். நாம் அடிப்படையில் இரண்டு வித்தியாசமான அரங்குகளைப்பற்றிக் கதைக்கின்றோம். ஒன்று மேலாண்மை செலுத்துகின்ற அரங்கு; பார்வையாளனைத் தளைநீக்கி அவனைச் செயல் முனைப்போனாக எழுச்சி கொள்ள வைக்கின்ற அரங்கு. முன்னையது அறிவை வெறுமனே மாற்றம் செய்கிற நடவடிக்கை, ஆற்றுபவர்களில் இருந்து பார்வையாளர்களுக்கு, பின்னையது அறிவைப் பெறுகிற ஒரு நடைமுறை. இரண்டும் எதிர் எதிர் பணிகளாக இருப்பது போலவே, இவ்விரு பணிகளுக்கான நடைமுறையும் எதிரெதிரானதாய் அமைதல் வேண்டும். அதாவது பார்வையாளர் மீது மேலாண்மை செலுத்தி அவர்களைச் செயல் முனைப்பற்ற நிலையில் வைத்திருக்க விரும்புகின்ற அரங்கின் நடைமுறையும் பார்வையாளர்களைத் தளை நீக்கி அவர்களைச் செயல் முனைப்புடையோராக ஆக்க விரும்புகின்ற அரங்கின் நடைமுறையும் வெவ்வேறானவையே. முன்னையது ஒடுக்குமுறையாளர்களுக்கானது; பின்னையது ஒடுக்கப்பட்டவர்களுக்கானது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் நாம் இன்னமும் முதலாவது வகை அரங்கையே தெரிந்தோ தெரியாமலோ பெருமளவில் பயன்படுத்தி வருகின்றோம். இது ஒரு சோகமான நிலையாகும். உண்மையில் இந்த அரங்கை, முதலாவது வகை அரங்கை நாம் எம்மை ஆளவந்த மேற்கத்தியரிடமிருந்தே பெற்றோம். எமது மக்களுக்கு அந்நியமான இந்த அரங்கையே நாம் தொடர்ந்தும் பயன்படுத்துவது உண்மையில் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான ஒரு நடவடிக்கையே. நீண்டகாலம் வெளிநாட்டவர்களால் பண்பாட்டு ரீதியாகச் சீரழிக்கப்பட்டதால் அடிமை மனப்பான்மையும் பயமும் சுயநலமும் மிகுந்துவிட்ட எமது இனத்திலிருந்து ஏதோ ஒருவகையில் எழுச்சியடைந்து விட்ட இளைஞர்கள் போராளிகளாக எல்லையில் நின்று போர்புரியும் அதேவேளை, எம்மைச் சீரழிக்க, எந்த வகை அரங்கை ஆளவந்த அந்நியன் பயன்படுத்தினானோ அதே அரங்கையே நாமும் பயன்படுத்தி மக்களை மந்தைகளாக்குவது எல்லைகளில் நின்று போரிடும் போராளிகளுக்கு நாம் செய்யும் துரோகமில்லையா? மந்தைகளாக்கப்படுகின்ற ஒரு மக்கள் கூட்டத்திடமிருந்து எவ்வாறு புதிய போராளிகள் எழமுடியும்; எழ முடியாதே.

மக்களின் மந்தை மனப்பான்மையை நீக்கி எழுச்சி பெற்ற மக்களினமாக ஆக்குவதற்குத் தேவையான பொர்ருத்தமான அரங்க வடிவங்களை உருவாக்க வேண்டுதல் அவசியமானதாகும். அதாவது மாற்றம் கட்டாயமானது. புதிய வடிவங்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்த வடிவங்கள் மக்கள் சுயாதீனமாக அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றக்கூடிய வகையினதாக, அவர்களை அடக்கி வைக்காததாக இருக்க வேண்டும். பொருத்தமான அரங்க ஆற்றுகைகளில் பங்குபற்றுவதால் தளைநீக்கப்பட்ட பார்வையாளன் ஒரு முழுமனிதனாக செயல் முனைப்புள்ள முயற்சியில் ஈடுபடுவான். எனவே அரங்கை மக்களுக்கானதாக்கிக் கொள்ள வேண்டும். மக்கள் அரங்கு உருவாக்கப்பட வேண்டும்.

## வீரமரணமடைந்த கிட்டு மாமாவிற்கு

விடுதலை விருட்ச்சமொன்று
வேரோடு சரிந்ததம்மா
வேதனையில் மக்கள்
விடும் கண்ணீரை யார் துடைப்பார்?

அன்னியர் சதியால்
அணைந்த தீபமொன்று.
ஆற்றல் மிகு வீரனவன்
ஆழ்கடல் நடுவினிலே
அடைந்தது மரணமல்ல.
இன்னும் விடுதலை உயிர்ப்புக்காய்
உவர் நீரில் விதைத்த வித்தொன்று.

தேசமங்கு அழுகின்றது.
அன்னியர் சதியால்
ஆறிரு செல்வங்கள் இழந்தோம்.
அண்ணன் திலீபனை இழந்தோம்.
இழப்புக்கள் பட்டியல்
இன்னமும் ஓயவில்லை
எம்மினத்தின் துயரம்
இன்னும் தீரவில்லை.

அவர்கள்....
விதைத்துவிட்ட விடுதலை உணர்வுகள்
ஓர் உதயத்தைக் காண்பதற்கே!

வி.ரி. மயிலழகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மானம் காத்த மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன்

கடந்த அக்டோபர் மாதம் 16ம் திகதி வீரபாண்டிய கட்ட பொம்மனின் நினைவு நாள். இது இந்தியாவில் வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

18ம் நூற்றாண்டு பறங்கியர் கூட்டம் தமிழகத்தின் மீது படை யெடுத்தது. வணிகரீதியாக இந்தியாவிற்குள் நுழைந்த இக்கூட்டம், அப்போது தமிழகத்தை ஆண்ட ஆற்காடு நவாப்பிற்கு கடன் கொடுத்து நாட்டை அடகுப் பொருளாகப் பெற்றது.

ஆங்கிலேயர் தமிழகத்துள் நுழைந்த காலத்தில் வேங்கடத்திற் குத் தெற்கேயுள்ள தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி இல்லை. தமிழ கத்தின் ஒரு பகுதியில் நாயக்கர் மன்னர் ஆட்சி; பிறிதொரு பகுதி யில் மராத்தியர் ஆட்சி; அத்தனை பேர் மீதும் ஆற்காடு நவாப் ஆதிக்கம். அந்த ஆதிக்கத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்த வந்தது ஆங்கிலேய வணிக கூட்டம். அந்தக் கூட்டத்திற்கும் போட்டி யாகப் புகுந்தன டச்சு, பிரெஞ்சு வணிகக் கூட்டங்கள்.

இவ்வாறு 18ம் நூற்றாண்டில் விஜயநகர, மராத்திய, மொகலாய, ஆங்கிலேய, டச்சு, பிரெஞ்சு ஏகா திபத்தியக் கூட்டங்களின் வேட்டைக் காடாக தமிழகம் விளங்கியது.

வீரபாண்டிய கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியின் மன்ன னாக முடி சூடிக் கொண்ட காலத்தில், மொகலாய வல்லர சின் இறுதிச் சின்னமாக விளங் கிய ஆற்காடு நவாப், இந்த பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் மீதும் மேலாதிக்கம் பெற்றிருந் தான். பின்னர் அந்த மேலாதிக்கத் தையும் கிழக்கிந்திய ஆங்கில நிறுவனத்திற்கு சொற்ப பணத்திற் காக அடகு வைத்துவிட்டான். அந்த அடகுப் பொருளைத் தம்மு டையதாக்கிக் கொண்டது ஆங்கி லேய வணிகக் கூட்டம்.

வீரபாண்டிய கட்டபொம்மன், ஆற்காடு நவாப், அவன் மீது ஆதிக்கம் பெற்றிருந்த ஆங்கில நிறுவனத்தினர் இருசாராருக்குமே கப்பம் செலுத்த மறுத்தான். இந்தக் கிழக்கிந்திய நிறுவனத்திற்கு எதிராக போர் முரசு கொட்டி னான் கட்டபொம்மன். இதுவே இந்திய சரித்திரத்தில் மாவீரன் கட்டபொம்மனுக்குள்ள தனிச் சிறப்பாகும். பாரதமே ஆங்கிலேய ருக்கு பணிந்துபோன காலத்தில் ஒருவன் கட்டபொம்மன் மட்டும் பணிய மறுத்தான். அதனாலேயே அவன் வரலாற்றுச் சிறப்பெய்தி யுள்ளான்.

வெள்ளையர் ஆற்றலின் முன்னே இறுதியில் கட்டபொம் மன் வீழ்ச்சியுறக் காரணமாக அமைந்தது வீரமின்மையன்று. சகோதரப் பாளையக்காரர்கள் செய்த துரோகம்! மறவர் வழி பட்ட பாளையங்கள், கம்பளத் தார் வழிவந்த பாளையங்கள் என்ற இரு பிரிவினரிடையே நிலைத்திருந்த பாரம்பரிய வேற்றுமை இதற்குக் காரணம் எனலாம். இதற்கெல்லாம் மேலாக ஆங்கிலேயரிடம் பீரங்கிகள், துப்பாக்கிகள் போன்ற நவீன கரு விகள் இருந்தன. இக்காரணங்க ளால் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையம் பறங்கியர் தாக்குதலில் வீழ்ச்சியுற்றது. அன்று எட்டயபு ரம் சமஸ்தானம் கட்டபொம் மனை பிடித்துக் கொடுக்கவில் லையானால் தமிழகத்தின் சரித்தி ரம் வேறு திக்கில் திரும்பியிருக் கும்.

தமிழகத்தின் வரலாற்றில் வட வாரியரை வென்ற சேரன் செங்குட்டுவன். தமிழர் சாம்ராச் சியம் கண்ட இராஜ ராஜ சோழன் ஆகிய இரு பெரும் வேந்தர்களையடுத்து மூன்றாவது சிறப்பிடத்தை கட்டபொம்மன் பெறுகிறான்.

ஆங்கிலேயர் கட்டபொம்மனி டம் கேட்டது ஆண்டுக்கொரு முறை வரிப்பணம் மட்டுமே! அரசுரிமை அல்ல. "ஆண்டுதோ றும் வரிப்பணம் கூட வேண்டாம், எங்கள் அதிகா ரத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக ஒருமுறை சொற்ப பணம் கொடுத்தால் போதும்." என்று கூட ஆங்கிலே யர் கேட்டுப் பார்த்தனர். அதற் குக் கூட கட்டபொம்மன் இணங் கவில்லை.

அவமானத்திலிருந்து தமிழ கத்தை அப்போது மீட்ட வீரத்த லைவனாக கட்டபொம்மன் திகழ் கிறான்.

கட்டபொம்மன் காலத்தில் அங்கு அரசியல் கட்சிகள் எதுவும் கிடையாது. எனவே எந்தவொரு அரசியல்வாதியும் கட்டபொம் மனை சொந்தம் கொண்டாட முடியாது. ஆனால் சுதந்திர உணர்வுள்ள ஒவ்வொரு மனித னுக்கும் கட்டபொம்மன் சொந்தமானவன்.

— சிபி —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஈழத்தமிழர் எழுச்சியில் கவிதைக் கலையின் பங்களிப்பு

இ. முருகையன்

ஈழத் தமிழர் எழுச்சி என்பது இந்த நூற்றாண்டுத் தமிழர் வரலாற்றிலே தோன்றியுள்ள மிகவும் பிரதானமான நிகழ்வு. இன்று இது தென்னாசிய அரசியல் அரங்கிலே, நடு மேடையைப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்று கூறலாம். வரலாற்று நிகழ்வுகள் எல்லாமே ஒரு விதத்தில், ஆதி அந்தம் இல்லாதவை. எது தொடக்கம் எது முடிவு என்று வரையறுத்துக் கூறுவது இலகு அன்று. ஈழத்தமிழர் எழுச்சி என்னும் நிகழ்வு கூட அந்த நியதிக்குப் புறம்பானதல்ல. இதன் திட்டவட்டமான தொடக்கம் எது என்றோ, அந்தத் தொடக்கம் ஆரம்பித்த காலம், நேரம், முகூர்த்தம் எது என்று கணித்துக் கூறுதல் இயலாது. ஆனால் வசதியின் பொருட்டு, வரலாற்றின் ஓட்டத்தைச் சில கட்டங்களாக வகுத்து அவற்றுக்கு தொடக்கமும் முடிவும் கற்பிப்பது அறிஞர்களின் வழக்கமாக உள்ளது.

பருமட்டாகப் பார்க்கும் போது, தமிழர் இலங்கையிலே தம்மை ஒரு தேசியக் குழுமமாகக் கருதி, தமது உரிமைகள் அரித்தெடுக்கப் படுகின்றன என்ற உண்மையை உணரத் தொடங்கிய காலம் 1950க்குச் சற்று முந்தியது எனலாம். அக்காலம்தொட்டே ஈழத் தமிழர் எழுச்சிக்குத் தமிழ்க் கவிதைக் கலையும் (ஏதோ ஒரு விதத்திலே) தனது பங்களிப்பைச் செய்யத் தொடங்கிவிட்டது. 1948 50ம் ஆண்டுக்கும் இடையில் என்று நினைக்கிறேன். புயல் என்னுமொரு சஞ்சிகையில் ஒரு கவிதையைப் படித்த நினைவு இலேசாக நெஞ்சத்தில் நிழலிடுகிறது. அந்த ஏட்டின் ஆசிரியர் வை.இராவணன், பாட்டின் தலைப்பு, 'படை திரண்டு வருவதனை பாரீர் சொன்னேன்' பாட்டை இயற்றியவர் தில்லைச் சிவன். அதில் வரும் வீறு மிகுந்த கூற்றொன்று என் நினைவிலே இப்போதும் பசுமையாய் உள்ளது.

"செந்தமிழன் செரு என்றால் வாளைத் தொட்டுச்
சீறி எழும் சிங்கமடா?"

செரு என்பது போர். கவிஞர் கருதும் போர் எப்போது வரும், ஏன் வரும் என்பன எல்லாம் அந்தப் பாட்டிலே தெளிவாக எடுத்துரைக்கப்படவில்லை. அனால், தமிழர் மரபிலே வந்த வீரமுழக்கத் தொனியின் ஆவேச ஆற்றல் முழுதும் அந்தக் கவிதை அடியிலே பொதிந்து வைக்கப் பட்டுள்ளது அல்லவா?

இதே கவிஞர், 'ஈழம் எமது நாடு' என்று மற்றொரு கவிதையும் இயற்றியுள்ளார்.

"ஈழம் எமதுயர் நாடு எந்தை
இருந்து மகிழ்ந்து மடிந்த மண்மேடு
சூழும் துயர் முடித்திங்கே
சுத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுதந்திரராக மகிழ்ந்திடு வோமே
ஓலமிட்டாவதொன்றில்லை நித்தம்
உதைபட்டு வாழ்வதும் தொல்லை
காலம் வருமந்த வேளை எதிர்
காத்திருந்தே எடு வாளை"

முற்கூறிய பாட்டிலும் வாள் வருகிறது, இந்த இரண்டாவது பாட்டிலும் வாள் வருகிறது. பாரதிதாசன் கூட,

"விண்ணிடை இரதம் ஊர்ந்து
மேதினி கலக்குதற்கும்....
மண்ணிடை வாளை ஏந்திப்
பகைப் புலம் மாய்ப்பதற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார்?

எனும் நிலை காண்பதன்றோ?
என்றுதான் பாடுவான்
கையிலே வேல் ஏந்திக்
கடல் உலகாளும் வேந்தர்"

பற்றி அவன் பெருமைப்படுவான்


"கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே"

என்று தமிழ் மகனைக் கூவி அழைப்பான் அந்தப் பாவேந்தன்.

இங்கெல்லாம் வாளும் வேலும் தாங்கிப் போரிடும் பழந் தமிழ் வீரந்தான் பெருமையுடன எண்ணிப் பார்க்கப்படுகின்றது. நவீன ஆயுதங்கள் பற்றிய எண்ணமோ, புதிய சுடுகலன்கள், எறிகணைகள் பற்றிய குறிப்புகளோ மருந்துக்கும் கிடையாது. அது ஒரு நிலை. அந்த நிலையில் எழுந்த ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுக்கள் எல்லாம் கள அனுபவத்தின் நேரடிப் பேறுகளாகத் தோன்றியவையல்ல. அநீதிகளையும், அடாவடித்தனங்களையும் கண்டு மூண்டெழுந்த சீற்றத்தின் விளைவாகத் தோன்றிய எதிர்ப்பு முழக்கங்கள் என்று அவற்றைக் கூறலாம். நம்மவருக்கு உணர்ச்சி ஊட்ட வேண்டும் என்ற ஆர்வ வேகத்திற் பறந்த கனற் பொறிகள் அவை. இதோ, இராஜபாரதி என்ற வி.கி. இராஜதுரையின் பாட்டிலே பறந்து வந்த ஒரு பொறி....

தமிழ் மொழியும் தாய் நாடே. உன்னைக் காக்கத்
தலை அரிந்து தருவேன். என் தாலி பூண்ட
அமுதனைய மனையாளைப் பிரிவேன்: ஆடும்
அலைகடலுட் குதிப்பேன்; உன் அன்புக்காக
உமி தவிடே என்றாலும் உண்டு வாழ்வேன்....."

இந்தப் பாட்டைப் பற்றி நண்பர் "மகாகவி" யுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது அவர் கேட்டார் 'தலையை அரிந்து தருவதனாலே யாருக்கு என்ன நன்மை? ஒருவர் அலைகடலினுள்ளே குதிப்பதனால் என்ன நடைமுறைப் 'பயன் கிடைக்கப் போகிறது?' நண்பரின் விமரிசனம் சரியானது என்று தான் அன்று எனக்கும் தோன்றியது. ஆனால் தாம் பெரிதெனக் கருதும் பெருங்குறிக்கோள் ஒன்றின் பொருட்டுத் தம் உயிரையே வழங்குகின்ற வீரப் பெருஞ் செயல்களைச் சுட்டும் அடையாளங்களாக இவற்றைக் கொள்ளலாம்தானே என்று இப்பொழுது தோன்றுகிறது. போரென்பது நிதர்சன நிகழ்ச்சியாக வடிவம் பெறாத அந்தக் காலகட்டத்தில், முன்னோக்குடைய பாவலனின் உயிராற்றல் இவ்வித உருவேற்றத்தைப் பெறுவதிலே புதுமை இல்லையன்றோ?




நீண்ட விடுதலைப் பயணத்தில், சோர்வுகள் எம்மை ஆட்கொள்ளலாம். போராட்ட வாழ்வின் பெரும் சுமைகள் எம்மை அழுத்திப் பிடிக்கலாம். மேலும் பளுக்கள் எம்மீது சுமத்தப்படலாம். ஆனால் நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு, உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்த ஒரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது. வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம். இன்று எமது வீரர்களின் கல்லறையிலிருந்து ஒலிக்கும் சுதந்திர கீதமும் உறுதியின் உன்னதத்தைத்தான் பாடுகின்றது.

வே. பிரபாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





"உளவு பார்ப்பதற்கும், லஞ்சம் கொடுப்பதற்கும், தகவல் சேகரிக்கவும் பல லட்சக்கணக்கான டாலர்களைச் செலவு செய்து வரும் இந்த அடக்குமுறை ஆட்சியின் கீழ், தேச பக்தர்களை ஒன்று திரட்டி பயிற்சியளிப்பது, ஒருங்கிணைத்து, அவர்களுக்கு ஆயுதமளிப்பது, தாக்குதலுக்கான திட்டத்தை தயாரிப்பதை விட மிகுந்த சிரமமான ஒன்றாகவே இருந்தது. எனினும் இவர்களும், இவர்களைப் போன்ற வேறு பலரும், நம்பற்கரிய தீவிரத்துடனும், விருப்பத்துடனும், ஒழுங்குடனும் இவை அனைத்தையும் செய்து முடித்தார்கள். இதற்கு மேலும் அவர்களைப் பாராட்டுவதற்கான காரணம் என்னவென்றால்,

இந்தப்பணிக்காக அவர்கள் தங்களிடமிருந்த அனைத்தையும் அளித்தார்கள்; இறுதியில் தங்களது உயிரையும் இதற்காகவே அர்ப்பணித்தார்கள்."

(வரலாறு என்னை விடுதலை செய்யும் *பிடல் காஸ்ட்ரோ)

ஈழத் தமிழர் எழுச்சியின் தொடக்க காலத்தில் போராட்டத்தின் தேவை பற்றிய எண்ணங்கள் இலேசாகக் கருக்கொண்டன. அந்த எண்ணக் கருக்களுக்கு உருவம் தந்தும், உரமூட்டியும் தமது கற்பனை ஆற்றலைக் கவிஞர்கள் தொழிற்படுத்தினார்கள். ஆவேசங்கள் கலையுருப் பெற்று வெளிவீச்சங் கொண்டன.

1956 இலே பண்டாரநாயக்க சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். அதனோடு நமது இன எழுச்சியிலே மற்றொரு கட்டம் முகிழ்த்தது. சாத்துவீகப் போராட்டம் என்றும், சத்தியாக்கிரகம் என்றும், அறப்போர் என்றும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இங்கு இடம்பெற்றவை வன்செயல்கள் அல்ல: இத்தருணத்தில் கையாளப்பட்ட முறை வன்முறை அல்ல: மென்முறை.

ஐம்பதுகளின் பிற்பகுதியிலும் அறுபதுகளிலும் தோன்றிய கவிதைகளின் உள்ளடக்கம் மேற்கூறிய மென்செயல் நடவடிக்கைகளைச் சார்ந்து எழுந்தன. இக் காலப் பகுதியில் 'சுதந்திரனும், ஈழகேசரியும்' எழுச்சிக் கவிதைகள் பெரும்பாலானவற்றை வெளியிட்டன. "மகாகவி" நீலாவணன், காசிஆனந்தன், இ.அம்பிகைபாகன், சி.சரணபவன்(சிற்பி) முதலாகிய பலர் இவற்றை இயற்றினார்கள். இக்கவிதைகளின் உள்ளடக்கம் மென்செயற் போராட்டஞ் சார்ந்து இருந்தாலும், வன்செயற் போர்ச் சார்புள்ள சொல்லாட்சிகள் இவற்றில் இடம்பெற்றதுண்டு.

"பாவம் இவ்விலங்கைப் பச்சை நாடு; அந்தோ

பலமுறை தமிழரின் பலத்தை,

சாவகம் கடாரம் சயித்த அவ்விறலைச்

சலித்தது நெடுகிலும் சுவைத்து!

தேவையே போலும் பிற்கு மோர் 'டோசு!'

சிறிததிற் கொடுக்க ஏன் தயக்கம்?"

இங்கு தென்னிந்தியத் தமிழர்களின் படையெடுப்புக்கள் குறிப்பிடப்படுவது வெளிப்படை. மற்றொரு பாட்டில் நான் எழுதினேன்....

"யாரை அடக்கிடும் ஈன நினைப்பிது? நாடாளும்

ஈழ இனத்தர் உன் மானம் அறுத்திடுவார் போலும்!

போரை அழைத்திடு பாடம் அவர்க்கது போதிக்கும்,

பூரண வெற்றியை நீ அடை! இக்கணமே போவாய்"

(குறிப்பு: நாடாளும் ஈழ இனத்தர்: சிங்களவர்)

இங்கு போர் என்று சொல்லப் படுவது மென்செயல் நடவடிக்கையை அல்ல, ஏனென்றால், அடுத்த பந்தியில் நான் பாடினேன்...

தாயை ஒறுத்திடுவோரை எதிர்த்திடு! தாழ்வோடத்

தானை நடத்துக: போதும் இனிப் பொறை...."

தானை என்பது சேனை : மறப்படை

"மஹாகவி" பாடினார்....

"பாறை எல்லாம் அதிர்க; நம்

படை எல்லாம் திரள்கவே"

என்று கிழக்கிலங்கையிலே மண் பறிபோவதைப் பற்றி ஒரு கவிதையிலே சுட்டிக் காட்டியவர்...

"அழகாய் இருக்கிறது தமிழா! உனக்கெதுவும்

ஆகாததில்லை எழடா!"

என்று அறைகூவல் விடுத்தார். (அரசியற் பாட்டுக்களை எழுதும் போத 'மஹாகவி' பயன்படுத்திய புனைபெயர் "மாபாடி"

செய்தித் தாள்களிலும், பருவ இதழ்களிலும் வந்த கவிதை தவிர வேறும் பல ஆக்கங்கள் நூல் வடிவம் பெற்றும் வந்தன. அவற்றுள் 'தமிழ் எங்கள் ஆயுதம்' என்பதும் ஒன்று. இதனை வெளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யிட்டவர்கள் யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர். இந்நூலின் தயாரிப்பு வேலையின்போது சங்கச் செயலாளராக நான் இருந்தேன். கவிஞர் காசி. ஆனந்தனின் 'தமிழன் கனவு' 1968ல் வெளியாயிற்று. அதில் வரும் கவிதைகளும் மென்செயற் போராட்டத்திற்குத் தம்மை மட்டுப்படுத்திக் கொண்டன என்று சொல்ல முடியாது.

"தாவிடு வேங்கைகள் குகை யிடை ஒளிந்தன

போலும் தமிழ் வீரர்

காவிய மார்பிடை ஒளிந்தன குண்டுகள்

களத்தே செவ்வானின்

ஓவியம் வரைந்தது தமிழரின் குங்குமக் குருதி நீரோட்டம்!

சாவிலும் விடுதலை பெறுவது மெய்யென

வீழ்ந்தார் தமிழ் நெஞ்சர்"

மென்செயல் நடவடிக்கை சார்ந்து எழுந்த கவிதைகள் சொல்லளவிலே வன்செயற் குறிப்புள்ளனவாய் இருந்தது உண்மை. ஆனால் பொருளளவிலே அவை மென்முறைக்கு அப்பாற்பட்டவற்றை நோக்கித் தீவிரமாகத் தம் கருத்தைச் செலுத்தின என்று சொல்லிவிட முடியாது.

மறப்போர் என்பது அறப்போரின் ஒரு குறியீடு போலப் பயன் பட்டது என்று கூறுவது ஓரளவு சரியாகும்.

ஈழத் தமிழர் எழுச்சி எழுபதுகளிலே வன்முறைத் திசைநெறியில் மெல்ல மெல்ல செல்லத் தொடங்கிற்று. எண்பதுகளின் தொடக்க, நடு, இறுதிக் கூறுகளினூடே, அந்த எழுச்சியானது முழு அளவிலான படைக்கலப் பயன்பாட்டு நிலைக்கு வந்து சேர்ந்தது. இந்தக் காலப் பகுதியின் கவிதைக்கலை பல பரிமாணங்களை உடையது. விரிவான, கவனமான ஊன்றிய ஆய்வுக்கு உரியது. சில பிரதான வகைப்பாடுகளையும், உள்ளோட்டங்களையும் மாத்திரம் இங்கு சுருக்கமாகப் பார்க்கலாம்.

இப்பொழுது நாம் போர் நிகழ் காலத்திற்கு வந்துவிட்டோம். இக்காலகட்டத்தில் நமது மக்கள் தொகையை இரு பெரும் பிரிவினராக வகுக்கலாம். போரில் நேரடிப் பங்கேற்கும் போராளிகள் ஒரு பிரிவினர். ஏனையோர் மற்றொரு பிரிவினர். கவிதை படைக்கும் கவிஞர்களும் இவ்விரு பிரிவுகளுள் அடங்குவர். சுருக்கம் நோக்கி, இவ்விரு பிரிவினரையும் களக் கவிஞர்கள், வெளிக்கவிஞர்கள் என்று சுட்டுவோம்.

வெளிக் கவிஞர்களின் படைப்புகள், உரிமை இழப்புக்களை விவரிப்பனவாயும், எதிரி தரப்பினரின் அநியாயங்களையும் அவற்றால் விளையும் இன்னல்களையும் எடுத்துரைப்பனவாயும் பெரும்பாலும் அமைகின்றன. மக்களின் வாழ்நிலைப் பதிவுகளாயும், ஏக்கங்களாயும் இவை உள்ளன.

> மக்கள் தங்கள் உரிமைகளை திரும்பப் பெறவேண்டும் என்று தீர்மானித்து விட்டால் அவர்களை எந்த ஒரு ஆயுதமும், எந்த ஒரு தாக்குதலும் அழித்துவிட முடியாது.
>
> நேற்றைய வரலாற்றிலும், இன்றைய நடப்பிலுமே இதற்கு மிகச் சமீபத்திய உதாரணம் பொலிவியாவில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். அந்த எழுச்சியில் சுரங்கத் தொழிலாளர் டைனமைட் குச்சிகளைக் கொண்டே இராணுவப் படைகளை நசுக்கித் தோற்கடித்தனர்.
>
> (வரலாறு என்னை விடுதலை செய்யும் • பிடல் காஸ்ட்ரோ)

தா. இராமலிங்கம், சண்முகம் சிவலிங்கம், சோ. பத்மநாதன், சு. வில்வரத்தினம், சாருமதி, வவுனியா திலீபன் முதலான பலரின் சில படைப்புக்களை வெளிக்கவிஞர் ஆக்கங்களுக்கு வகை மாதிரிகளாக எடுத்துக் காட்டலாம்.

"எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன

எங்கள் இமைகள் கவிந்துள்ளன

எங்கள் உதடுகள் அண்டியுள்ளன

......

எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக

எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக

எங்கள் முதுகில் கசையால் அடிக்குக

எங்கள் முதுகுத்தோல் பிய்ந்தொழிந்து போகட்டும்

தாழ்ந்த புருவங்கள் ஒருநாள் நிமிரும்

கவிந்த இமைகள் ஒருநாள் விரியும்

இறுகிய உதடுகள் ஒருநாள் துடிதுடிக்கும்

அதுவரை நீங்கள் எங்களை ஆள்க

அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக"

வெளியில் நிற்கும் மக்கள் கூட்டத்தினிடை கூட எவ்வளவு ஆற்றல் வாய்ந்த சலனங்கள் தோன்றக்கூடும் என்பதற்கு சண்முகம் சிவலிங்கம் அவர்களின் மேற்காட்டிய வரிகள் சான்றுகளாய் உள்ளன.

வெளிக் கவிஞர்கள் தனியான கவிதைப் புத்தகங்களையும் வெளியிட்டுள்ளனர். காரை சுந்தரம்பிள்ளையின் 'பாதை மாறிய போது....', கல்வயல் வே. குமாரசா

www.tamilarangam.net



மியின் 'மரண நினைவுகள்', சார்ள்ஸின் 'அணையாத அறிவாலயம்', திருஞானசேகரத்தின் 'புதியதோர் உலகம் செய்வோம்', எனது 'வெறியாட்டு' என்பன சில எடுத்துக்காட்டுகள்.

இனி களக் கவிஞர்கள் பக்கம் நமது பார்வையைத் திருப்புவோம். போர்க்களத்தில் நேரடி நடவடிக்கையில் ஈடுபடும் போராளிகள் தமது உணர்வின் வெளிப்பாட்டுச் சாதனங்களாக, இயற்பாக்களாகிய கவிதைகளையும், இசைப் பாடல்களையும் கொண்டுள்ளனர். இவற்றுட் பல கவிதைகள் 'தமிழீழம்', 'விடுதலைப் புலிகள்', 'சுதந்திரப் பறவைகள்', 'வெளிச்சம்', 'நெருப்பு' முதலான ஏடுகளில் இடம் பெறலாயின; இடம் பெறுகின்றன. முத்தமிழ் விழாக் கவியரங்குகளில் ஒலிக்கின்றன. புலிகளின் குரல் ஒலிபரப்பிலும் கேட்கப்படுகின்றன.

இந்த இயற்பாக்களின் சிறப்பியல்புகள் மனங்கொள்ளத் தக்கன.

இவற்றிலே கள அநுபவம் பேசுகிறது;

போராளிகளை உந்தி நிற்கும் உணர்வு நிலை உணர்த்தப்படுகின்றது;

நேர்மையான, நேரிய வெளிப்பாட்டின் நாதம் ஒலிக்கிறது;

கவிஞரின் பற்றுறுதி பதிவு செய்யப்படுகிறது.

போராளிகளிடை நிலவும் உறவு நிலைகளும், ஆளுமைகளின் பல்வேறு பரிமாணங்களும் காட்டப்படுகின்றன.

வானதி, பாவரசன், வாஞ்சிநாதன், கஸ்தூரி முதலிய கவிஞர்கள் பலரின் ஆக்கங்கள் மக்கள் மத்தியில் அறியப்பட்டுள்ளன. தலைவர் பிரபாகரன் கூட கவிதைக்கலையின் பால் ஈடுபாடு உடையவர் என்பதைக் கேள்விப்படும் போது, ஈழத்தமிழர் முயற்சியில் கவிதைக் கலையின் பங்களிப்புக் கணிசமானதே என்னும் எண்ணம் உறுதிப்படுகிறது.

> "எழுந்திருங்கள். சோம்பலையும், மூடத்தனத்தையும் வீசியெறிந்துவிட்டு வெளியே உலாவி உலகத்தின் ஏனைய பாகங்களில் உள்ள மாந்தர்கள் முன்னேற்றமடைந்து கொண்டு போவதைப் பாருங்கள். எத்தனை நாளைக்கு மூலையில் ஒதுங்கிக் கிடக்கப் போகிறீர்கள். நீங்கள் சுத்த வீரர்களின் வழிப் பிறந்தவர்கள் என்பதை மறந்து விட்டீர்களா? சூரனுக்கு உயிர் துரும்பு; தேச முன்னேற்றத்திற்காக உயிரையும் கொடுக்கத் தயாராகயிருக்கும் வாலிபர்கள் ஆயிரக்கணக்கான பேர் முன்வரவேண்டும். மேனிலையை அடைவதற்கு முயலுவோம், அம்முயற்சியில் உயிர் போனாலும் போகட்டும்."
>
> * உயர்திரு விபுலானந்த அடிகள்

களக் கவிஞர்களின் இலட்சிய வேட்கையும், ஓர்மத்தையும், உறுதியையும் அவர்களது ஆக்கங்கள் நமக்குத் தெளிவாக உணர்த்தி வைக்கின்றன. அத்துடன் சண்டைகளின் செப்பமான படப்பிடிப்பாகவும் உள்ளன. 'சுதந்திரப் பறவைகளில்' வந்த ஒரு கவிதையைப் பார்க்கலாம்....

"பற்றைகளின் இடையே சருகுகளின் சரசரப்பு....

புரியாத பாஷைகளின் ரகசியச் சத்தங்கள்.....

எதிரியின் பிரவேசத்தைப் பறை சாற்றுவனவாய்....

துப்பாக்கியைப் பிடித்த கரங்கள்

புதிய வலிவு பெறுகின்றன.

சட,சட....

அவளது துப்பாக்கி

மின்னல் வேகத்தில் எதிரியை நோக்கி

தனது ரவைகளை உமிழ்கிறது

அத்தோடு

அவளது சகாக்களின் துப்பாக்கிகளும் சட,சட.....

........

நாளை.... அவளது மூச்சும்

அவளது தோழியைப் போல்,

இன்று மறைந்த இரண்டு தோழர்கள் போல்,

இந்த மண்ணின் மடியில்

மீளாத் துயிலில் நிசப்தமாகலாம்

.........

அனால் அதுவரை

அவள் கரங்களில் இருக்கும் துப்பாக்கி

கனன்று கொண்டே இருக்கும்

கால்கள் விரைந்து கொண்டே இருக்கும்"

இந்த இடத்தில் மற்றுமொன்றைக் குறிப்பிட வேண்டும். களக் கவிஞர்கள் பலரின் கவிதைகள் பெயரிலிகள் (அனோனிமஸ்) ஆக இருக்கின்றன. கவிஞர்கள் தாம் யார் என்பதை வெளிப்படுத்தி பிரசித்தம் செய்வதில் அதிக ஆர்வம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அது சரி, அவர்கள் வேறு எப்படி இருப்பார்கள்? அவர்கள் 'தாய் ஈழம் வாழ என்று தம்மையே தந்துள்ளோர்கள்' அல்லவா? தம் இன்னுயிர் ஈந்தும் தாய் நிலம் காக்கும் மறவர்கள் பேரும் பிரசித்தமும் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருப்பதில் வியப்பில்லையே! இவர்களைத் 'தற்கொலைக் கொலையாளிகள்' என்று எதிரி தரப்பினர் சிலர் இழிவு செய்ய முற்படுவதுண்டு. இவர்கள் செய்வது 'தற்கொலை' அல்ல இது 'தற்கொடை'. தற்கொடை என்ற புதிய பதத்தை ஆக்கி இவர்களின் அருஞ்செயலைக் குறிப்பதற்கு நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்கொடையாளர்களாய் உள்ள கவிஞர்கள், இசைப்பாக்களை இயற்றுவதிலும், பாடுவதிலும் வேட்கை உடையோராய் உள்ளனர்.

"அடைக்கலம் தந்த வீடுகளே
போய் வருகின்றோம் நன்றி....."

என்னும் பாடல் அடிகளிலே போராளியின் நன்றியுணர்வு எவ்வளவு இதமாகவும், இனிமையாகவும் பொங்கிப் பரவுகிறது!

"எம் தோழர்களின் கல்லறையில்
மண் போட்டுப் போகின்றோம்"
"கோட்டை கோட்டையாய் இனி விழும் புலிக்
கொடி கொடியாகவே இனி எழும்..."
"இந்த மண் எங்களின் சொந்த மண் இதன்
எல்லைகள் மீறி யார் வந்தவன்..."

என்றெல்லாம் வரும் பாடல் அடிகளில் இசையின் செழுமையுடன் கவிதைத் திறமும் ஈடு சோடாக ஓசை வீசுவதை நாம் நுபவிக்கிறோம். பாவலர்கள் தொடக்கம் பாட்டன், பாட்டிமார் வரை இந்தப் பாடல்களை முணுமுணுக்கிறார்கள். இது புனைந்துரை அல்ல, அணிந்துரையும் அல்ல. அப்பட்டமான அநுபவ உண்மை.

நளினமும் வலிமையும் இழையோடும் சொற்களைச் சரளமாகப் பெருகி ஓடச் செய்யும் பழக்கமுள்ளவர் புதுவை இரத்தினதுரை. அவரின் இயற்பாக்களின் இயல்பு கூட அதுதான். அந்த வாலாயப்பட்ட சொல்லோட்டத்துடன், இசையின் நயமும் இழையும் போது... சொலொலுக்குச் சொல்லு, சுகமாய்ச் சுதி கூட்டுகிறது. புதுவையார் சிறந்த இசைப் பாவாணராகவும் வெற்றி பெற்றுவிடுகிறார். அவரது வழியிலே ஏனைய இசைப்பாவலர்களும் முன்னேற முற்பட்டுள்ளார்கள்.

ஈழத்தமிழர் எழுச்சியில், கவிதைக் கலை நடந்து வந்த பாதையின் சுவட்டை ஒருவாறு இனங்காட்ட முயன்றுள்ளேன். தொடக்கத்தில் ஆவேச முழக்கமாய் இருந்த கவிதைகள் தொன்மையான பழந்தமிழ் உணர்வோட்டத்திலிருந்து உந்துதல் பெற்றன. பின்னர் அறப்போருக்கு ஒரு குறியீடாக மறப்போர் சொல்லாட்டம் அமைந்தது. அதன் பின்னர் உண்மையான போர் நிகழ்காலம் தோன்றிற்று. அப்பொழுது, களக் கவிஞர்களும் நமது எழுச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர்; செய்து வருகின்றனர். இயற்பா நிலையிலும், இசைப்பா நிலையிலும் களக் கவிஞர்களின் பங்களிப்புத் தொடர்கிறது. தொகையிலும், தரத்திலும் இந்தப் பங்களிப்பின் தரம் மேம்பட்டு வருகிறது. இது நம் கவிதைத் துறையில் ஆரோக்கியமான ஒரு வளர்ச்சிப் போக்காக அமையும் என நாம் எதிர்பார்க்கலாம்

* * *

## எங்கள் கைக்கு அதிகாரம் மாற்றுவோம்

தா. இராமலிங்கம்

மழை பெய்து நிலம் அரித்து
பழையபடி வீதி எல்லாம்
குண்டும் குழியும்!
சீராகச் செப்பன் இட்டுத்
திருத்தி அமைப்பதற்கு
எங்கள் கையில் தான்
அதிகாரம் இல்லையே!
சொன்னதைத் தானே
நாங்கள் செய்யலாம்!
போனமாரி முடிந்த பின்னர் தான்
பெரிய கிடங்காய்ப் பார்த்து
ஓட்டுவேலை செய்து முடித்தோம்.
இப்போது என்னவென்றால்
மழைபெய்ய மழைபெய்ய
பாரியவாகனம் உதைத்துதைத்து
ஓட்டுவீட்டுக் கல் பறந்து
பழையபடி வீதி எல்லாம்
குண்டும் குழியும்,
வெள்ளத்தில் வாகனங்கள்
விழுந்து எழும்பி
விழுந்து எழும்பி
ஓடுகின்றபோது
விபத்துக்கு உள்ளாகி
கால் முறிந்து போனவர்கள்
கைமுறிந்து போனவர்கள்
எத்தனை பேர் பாருங்கள்!
வாருங்கள்!
வீதியை முழுமையாய்
கிண்டிப் புரட்டி
செப்பனிட்டுச் சீரமைக்க
எங்கள் கைகளுக்கு
அதிகாரம் மாற்றுவோம்.

www.tamilarangam.net





# மானமில்லாத மரங்கள்

மானமில்லாத மரங்கள்... இன்னுமா
மரித்துப் போகவில்லை ?
உன்னைப்போல் தான்
மரங்களுக்கும் ஒற்றைக்கால் !

□□□

எங்களில்...
ஆயுதப்பயிற்சி பெற்றவர்கள்
அதிகம் !
உங்களில்
மரணப் பயிற்சி பெற்றவர்கள்
அதிகம் !

□□□

எங்களின்...
நிஜக் கேடயங்கள்
நிட்சயமாகப் புறமுதுகுகள்
உங்களின்...
மரணக்கேடயமோ...
மார்நிமிர்த்தும் புறநானூறுகள்

□□□

உன்னைப் போன்றோர்க்கு
உதவி செய்யும்...
மரணம் சில பேர்களுக்கு மட்டுமே
மரியாதை செய்யும் !

□□□

விரல்களைக் கூடச் சுமக்க இயலாத
வீணான கால்கள் இருக்க...
எப்படி ?
உன் ஒற்றைக்காலுக்கு
உலகத்தைச் செருப்பாக்கிக் கொண்டாய் !

□□□

உயிரை மரணத்திற்குள்
ஒழித்து வைக்கும் வித்தையில்
நீ இன்னும் வாழ்கிறாய் !

□□□

சாவுகளில்... சாவிதயாரிக்கும்
சக்தியினால் இங்கே
பூட்டுக்களைப் பொய்யாக்கிவிட்டாய் !

□□□

மண்ணில் வேரூண்றிய
ஒற்றைக் கால் மரங்கள்
ஒருபுறம் இருக்கட்டும்....
உனக்குத் தெரியுமா ?
நாங்கள்
இரட்டைக் கால் மரங்கள் !

பா.மீ.சுந்தரம்
தமிழ்நாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிட்டு ஒரு சகாப்த நாயகன்

*** திலகர் ***

கேணல் கிட்டு போன்றவர்கள் ஒரு மயிர்நீப்பின் உயிர் வாழாக் கவரிமான் இனத்தைச் சேர்ந்தவர்கள்; உயிர் அனைத்தும் தன்மானம் குத்திட்டு நிற்பவர்கள். அநுபவ அறிவு நிரம்பப் பெற்றவர்கள். மாசற்ற இலட்சிய உறுதி கொண்டவர்கள். இவ்வடிப்படையில் எழுகின்ற தன்னெழுச்சிகரமான செயல்களைப் புரியவும், சாதனைகளைப் படைக்கவும், அக்கர்ம வினையின்போது தம் உயிர்களைத் தற்கொடை செய்யவும் தகுதி படைத்தவர்கள்.

கிட்டுவின் வாழ்க்கை தமிழீழ வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. தமிழீழ வரலாற்றை புதிய பாதையில் உந்தித் தள்ளிய சக்திகளில் ஒன்றாக அவர் விளங்கியுள்ளார். தமிமழீழத் தேரின் சக்கரக்காலை முன்னோக்கி உருட்டிய செயற்பாட்டில் அவரது வாழ்வும் இன்னொரு வரலாறு ஆகின்றது.

1977ம் ஆண்டு கலவரத்தினால் கொடுமைகளுக்கு உட்பட்டு தாயகத்திற்கு ஓடிவந்த அகதிகளின் நிலை, அவர்கள் மீது அவர் கொண்ட கழிவிரக்கம், "அதன் அடிப்படையில் இனி என்ன செய்வது?" என்று எழுந்த கேள்விக்கான விடை என்பவற்றின் தாக்கமே அவரைப் போராட்டப் பாதைக்கு இழுத்து வந்தது. 1978ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் முழுநேர உறுப்பினர் ஆனார். நகர்ப்புற கெரில்லா வாழ்க்கை, அதன் ஆபத்துக்கள், கரந்தடித் தாக்குதல்கள், இரகசிய நகர்வுகள், அரச வங்கிகள், அரச படையின் மீதான திட்டமிட்ட நடவடிக்கைகள் என்ற ரீதியில் அமைந்திருந்தது அவரது ஆரம்ப காலம்.

1984ம், 1985ம் ஆண்டுகளில் பண்டிதர் யாழ் குடாநாட்டின் பிராந்தியத் தளபதியாக இருந்த காலத்தில், இராணுவ நடவடிக்

www.tamilarangam.net



கைகளுக்குப் பொறுப்பாக இருந்த கிட்டு, பண்டிதரின் மறைவுக்குப் பின்னர் யாழ்பிராந்தியத் தளபதியானார். இவரது இக்காலம், தமிழீழ வரலாற்றின் மிக முக்கிய காலம் என்பதோடு, மிகப் பெரியதொரு முனேனெடுப்பாகவும், ஆழமான சுவட்டினைப் பதித்ததாகவும் அமைந்தது. சிறிலங்காவின் பொலிஸ் நிலையங்களை யாழ் குடாநாட்டிலிருந்து அகற்றி, இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கியதன் மூலம், குடாநாட்டினுள் அரைப் விடுதலை பிரதேசங்களை (Semi Liberated Zones) ஏற்படுத்தினார். சிறிலங்காவின் நிர்வாகத்திற்குப் புறம்பாக தமிழ்த் தேசிய பொலிஸ் நிர்வாகமும், சிவில் நிர்வாகமும் கால் கொள்ளத் தொடங்கின. மேலும், சுய பொருளாதாரத்திற்கான அடித்தளக் கட்டுமானங்களும் அக்காலத்தில் இடப்பட்டன. இம் முன்னெடுப்பானது, தமிழீழம் என்ற புதிய அரசொன்றை அமைக்கும் முயற்சியில், மிக அடிப்படையானதும், ஆக்கபூர்வமானதுமாகும். அதே வேளை, மிகக் குறைந்த ஆள், ஆயுத பலத்துடன் அவர் புரிந்த இச்சாதனை அவரின் போர் உத்தித் திறமையை பறைசாற்றுவதாகவும் அமைந்தது. இந்திய அரசாங்கம் பல்வேறு தமிழ்க் குழுக்களைத் தனது ஏவல்ப் படையாக வளர்த்து, போராட்டத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கையைத் தொடங்கிய போது, அக்குழுக்களை நிராயுதபாணியாக்கும் செயலை மிகக் கச்சிதமாகத் தலைமையின் கட்டளைப்படி செய்து முடித்தார். அதிர்ச்சியூட்டும், மின்னல் வேகத் தாக்குதல்கள் குறைந்த உயிரிழப்புடன் எண்ணிய காரியத்தைச் சாதித்துக் கொடுத்தது. 1987, மார்ச் மாதத்தில், அவரது காரினுள் கிரனைட் ஒன்று அரசகூலி ஒருவனால் போடப்பட்ட



www.tamilarangam.net



போது அவர் தனது கால் ஒன்றை இழந்தார். அத்திமீர்ச் சம்பவத்தில், அவர் காரின் கதவைத் திறந்து வெளியே பாய்ந்ததும், தனது கைத்துப்பாக்கியை எடுத்து வெடி தீர்த்ததும், அவரின் கலங்கா உறுதிக்கு சான்றுகளாக விளங்கின.

யுத்தக் கைதிகளின் பரிமாற்றம், இந்தியாவில் இருக்கும் போது, முஸ்லீம் தலைவர்களோடு நடத்திய பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் ஆகியவை கிட்டுவை இன்னொரு கோணத்தில், புதியதொரு பரிமாணத்தில் உலகுக்கு வெளிப்படுத்தின. அவர் ஒரு சிறந்த யுத்த தந்திரோபாயவாதி மட்டுமல்ல அரசியல் ராஜதந்திரி என்பதே அப்பரிமாணமாகும். சிறிலங்கா அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட வேளையில், கொழும்பு வந்த அவர், தனது இழந்த காலுக்கு மருத்துவம் செய்யும் பாவனையில் லண்டன் வந்தார். அவர் புறப்படுவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர்தான் அவர் தங்கியிருந்த ஹோட்டல் அறையில் அவரது திருமணம் நெருங்கிய ஒரு சிலருடன் இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயல்ப்பாட்டை ஸ்திரப்படுத்தும் தேவை இருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேச அந்தஸ்த்தை நோக்கி உயர்த்தும் செயல்ப்பாட்டை, விரிவுபடுத்தவும், வேகப்படுத்தவும் வேண்டியிருந்தது. இதற்கு அடிப்படையாக புலம்பெயர்ந்த தமிழ் மக்களை அணிதிரட்டுவதும், அதனைச் செய்வதற்கு விடுதலைப் புலிகளின் கிளைகளின் செயல்ப்பாடுகளை விஸ்தரிப்பதும் அவசியமாக இருந்தது. இதன் காரணமாக இலண்டனில் விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் அவர் பொறுப்பில் உருவாகியது. தனது நோக்கில் கணிசமான அளவு வெற்றி பெற்றார் என்றே கூறவேண்டும். வெளிநாட்டுக் கிளைகளில், எச்செயலாயினும், உயர்ந்த தரமுடையதாக இருக்க வேண்டும் என்பதனை நடைமுறைப்படுத்தினார். மேலும், தமிழ் மக்களுடனான உறவுகளுடன் வெளிநாட்டு மக்கள், அமைப்புகள், அரசாங்கங்கள் ஆகியவற்றுடனான உறவுகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார். லண்டனில் "களத்தில்" பத்திரிகையை ஆரம்பித்து இரண்டு வாரங்களுக்கு ஒன்று வெளிவருமாறு செய்தார். ஐரோப்பாவில் ஏனைய தமிழ்ச் செய்திப் பத்திரிகைகளுக்கு இதுவே முன்னோடி எனலாம். உள்ளடக்கம், தரம்,



வடிவமைப்பு, மக்களைச் சென்றடைதல் ஆகிய விடயங்களில் "களத்தில்", "எரிமலை", "தரிசனம்" ஆகிய வெளியீடுகளுக்கு ஓர் உந்துசக்தியாக, ஆலோசகராக, கண்டிப்பாளராக, பின்னணி இயக்குநராக அவரே விளங்கினார். தமிழீழப் பொருளாதாரம், அகதிகள் புனர்வாழ்வு, பிரச்சாரம், நிதிசேகரிப்பு ஆகிய விடயங்களில் வெளிநாட்டுக் கிளைச் செயல்பாடுகள் புதிய பாய்ச்சலைக் காட்டி நின்றன.

சர்வதேச உறவுகள் என்ற விடயம் மிக நுணுக்கமானதும், பரந்துபட்டதுமாகும். இவ்விடயத்திலி மிகச் சிறந்த அனுபவ பாடங்களைக் கற்றுவந்தார். பல்வேறு நாட்டு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளோடு அவர் நடத்திய உரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் தமிழீழப் போராட்டத்தை இன்னொரு தளத்துக்கு உயர்த்திச் சென்றன. சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காமல் எவ்வாறு சமாதானத்தைக் கொண்டு வருதல் என்பதே அவரது அணுகுமுறையாக இருந்தது. அவ்விடயத்தில் உலக சமுதாயத்தை, குறிப்பாக மேற்குலகத்தை எமது போராட்டத்தின் நியாயத்தின்பால் திருப்பி வந்தார் என்பதே உண்மையாகும். "சமாதானவாதி" என்ற பட்டத்தை மேற்குலக ராஜதந்திர வட்டத்தில் சூட்டிக்கொண்டார். சமாதானத்துக்கு சிறிலங்கா அரசாங்கமே முட்டுக் கட்டையாக உள்ள தென்பதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மிக நாசூக்காகச் சுட்டிக் காட்டினார். வெளிநாடுகளில் இருந்தவாறு சுதந்திரப் போராட்டக் கடமைகளை வேகமாக ஆற்றிய ஒரே காரணத்திற்காக அவர் ஐக்கிய இராட்சியத்திலிருந்து 1991 யூலை வெளியேற்றப்பட்ட போதிலும், அவர் மறைவாக வாழ்ந்த காலத்திலும், அதே ஈடுபாட்டுடன் அக் கடமைகள் தொடர்ந்து இடம் பெற்றன.

சர்வதேச உறவுகளில், அதன் நியதிகளுக்குத் தகுதியான முறையில் இயக்கம் ஈடுகொடுப்பது அவசியமானதாகும். சர்வதேச அங்கீகாரத்திற்கு தேவையானதுமாகும். இந்த உண்மையைப் பட்டறிந்த அவர், விடுதலைப் புலிகள் அமைப்பை அத்தகு மாற்றங்களுக்கு உட்படுத்தும் ஆலோசனைகளையும் தலைபீடத்தின் பரிசீலனைக்கு எடுத்துச் சென்றார். மேலும், சமாதானத்தையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தும் திட்டங்களும் அவரிடத்தில் இருந்தன. இவை நிறைவேறுவதைக் காலதாமதப்படுத்தி விட்டதாக எதிரிகள் கங்கணங் கட்டியுள்ளனர். மக்களின் ஒன்று திரண்ட சக்தியாக வெளிப்பட்டு அவர் தனது மரணத்தின் பின்னரும் இதைச் சாதிப்பார் என்பது நிச்சயம். □■□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உளங்கள் உடலிர்தான்

வல்வையூரான்

சிறுகதை

நான் இயக்கத்தில் வந்து சேர்ந்து வருடங்கள் நான்கு கழிந்து விட்டன.

இந்த நான்கு வருடங்களிலும் என்றுமே வீட்டுக்குச்செல்ல வேண்டுமென்றோ, எனது பெற்றோர்களை சந்திக்க வேண்டுமென்றோ உடன்பிறப்புக்களை சந்திக்க வேண்டுமென்றோ ஆசைப்பட்டவளுமல்ல.

இயக்கத்தில் உள்ள பிள்ளைகளில் பலர் வீடுகளுக்கு விடுமுறையில் சென்று வந்துள்ளார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் வீடு செல்லாததற்குக் காரணம், நான் வீட்டிற்குச் சென்றால் வீட்டிலுள்ளவர்கள் என்னை மறித்து விடுவார்கள் என்றோ அழுது ஒப்பாரி வைப்பார்கள் என்பதாலோ அல்ல.

வீட்டிற்குச் செல்லவேண்டும்; பெற்றோரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏனோ எனக்கு ஏற்படவில்லை. அவ்வளவு தான்.

பொதுக் கூட்டங்களில் பேசப்பட்ட ஆவேசப் பேச்சுக்களைக் கேட்டு விட்டோவெறுமனே உணர்ச்சியினால் உந்தப்பட்டோ நான் திடீரென்று இயக்கத்துக்கு வந்து சேர்ந்துவிட்டவள் அல்ல.

நான் பிறந்து வளர்ந்த வடமாராட்சிப் பகுதி, அடிக்கடி சிங்கள ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களால் அழிக்கப்பட்ட நிகழ்வுகள் என் மனதில் கொஞ்சம் கொஞ்சமாக போராட்ட உணர்வை வளர்த்துக் கொண்டே வந்தன.

ஆனாலும் பெண்கள் பூரணமாகத் தங்களை போராட்டத்துடன் இணைத்துக் கொள்ளாத நாட்கள் அவை.

ஆரம்பத்தில் 'சுதந்திரப் பறவைகள்' அமைப்பிலேயே என்னை இணைத்துக் கொண்டேன். முதலுதவிச் சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டு சிங்கள இராணுவத்தினரின் தாக்குதல்களினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சிகிச்சைகள் செய்வது போன்ற செயல்களில் என்னையும் ஈடுபடுத்திக்கொண்டு வந்தேன்.

உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் என்று நான் திரிந்த ஆரம்ப நாட்களில் எனது வீட்டிலும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

"பொம்பிளைப் பிள்ளையள் கண்டபாட்டிலை வீட்டைவிட்டு வெளிக்கிடக் கூடாது. புலிக்கொடியைத் தூக்கிக்கொண்டு ஊர்வலமெண்டும் உண்ணாவிரதம் எண்டும் றோட்டில திரியிறது அவமானம். பொடியளும் பெட்டையளும் சேர்ந்துகொண்டு திரிஞ்சா பாக்கிறவை என்ன சொல்லுவினம்....?" என்றெல்லாம் அம்மா அடிக்கடி சொல்லிக் கொள்வா.

"அவையளோடை சேரக்கூடாது.... இவையளோடை பழகக்கூடாது....', என்றெல்லாம் நச்சரிப்புக்கள் வேறு.

'சாதி குறைந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களோடு நான் பேசினால், பழகினால், சேர்ந்து திரிந்தால் அவர்களோடு நான் ஓடி விடுவேன்' என்ற அச்சம் அம்மாவுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

இந்த அழுத்தங்கள் அனைத்தும் போராட்டத்தின் பக்கம் என்னை இழுத்துச் சென்றனவே தவிர யாழ்பாணக் குடாநாட்டில் உள்ள ஒரு சாதாரண பெண்ணுக்கு ஏற்படுகின்ற படிக்க வேண்டும், திருமணம் செய்ய வேண்டும், குழந்தைகளைப் பெற வேண்டும் என்பது போன்ற சரா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரி வாழ்க்கைக்கு இட்டுச்செல்ல வில்லை.

எனது நெஞ்சத்தினுள் வித்தாக விதைக்கப்பட்டு சின்னஞ்சிறு செடியாக வளர்ந்து கொண்டிருந்த எனது போராட்ட உணர்வுகள் பாரியதோர் விருட்சமாக வளர்வதற்கு 'வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கை வழிசமைத்தது.

லங்கா அரசின் திட்டமிட்ட அந்தப் பெரிய தாக்குதல்களின் போது அப்பகுதி மக்கள் எல்லோரும் பாடசாலைகளிலும் கோயில்களிலும் தஞ்சம் புகுந்தனர்.

முதலுதவிச் சிகிச்சை நிலையமொன்றில் கடமை புரிந்து கொண்டிருந்த நானும், சினேகிதிகள் சிலரும் எங்கள் பெற்றோர்களோடு கோயில் ஒன்றில் தஞ்சம் புகுந்த போதுதான் எங்களது மக்களின் மனோநிலையை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

''இஞ்சார் பெட்டையள் நீங்கள் இங்கை இருக்க வேண்டாம் எங்கையாவது ஓடி விடுங்கோ..... நீங்கள் இங்கை இருக்கிறதாலை எங்கடை பெம்பிளைப்பிள்ளையளையும் ஆமி வந்து பிடிச்சுக் கொண்டு போயிடுவான்... நீங்கள் எங்கையாவது ஓடுங்கோ... அல்லது ஆமியிட்டைப் போய்ச் சரண் அடையுங்கோ." என்று கோயில் மண்டபத்தில் கூடியிருந்த எங்கடை ஊர்ச்சனமே எங்களுக்குச் சொன்னபோது, எனக்கு என்னையறியாமலேயே அவர்கள் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அவ்வளவு நாளும் நாங்கள் நடாத்திக் கொண்டிருந்த முதலுதவிச் சிகிச்சை நிலையத்தில், எந்த மக்கள் எங்களிடம் வந்து நோய் நொடியென்று சொல்லி மருந்துகளை வாங்கிப் போனார்களோ, காயங்களுக்கு மருந்து கட்டுவித்துக்கொண்டு சென்றார்களோ, அந்த மக்களே எங்களை அந்த இடத்திலிருந்து "ஓடுங்கோ... ஓடுங்கோ" என்று விரட்டிய போது தான்..

"கட்டாயமாக நான் இயக்கத்திற்குப் போய்ச் சேர வேண்டும்; இயக்கத்தைப் பற்றி போராட்டத்தின் அவசியம் பற்றி மக்களுக்குப் புரியவைக்க வேண்டும்" என்ற உணர்வு ஆத்திரத்தோடு கலந்து கொண்டது.

அமைதிப்படை என்ற பெயரில் இந்தியா இங்கு வந்ததும் நான் அந்தக் காலகட்டத்தில் இயக்கத்தில் என்னை இணைத்துக்கொண்டதும் அலம்பில் காட்டுக்குள் நான் பயிற்சி பெற்றதும் கடந்தகால நிகழ்வுகள்.

இந்தியக்காரனோ... சிங்களவனோ மொத்தத்தில ஆமியோட சண்டை பிடிக்கிறதெண்டா...

அடிபாட்டுக்குப் போறதெண்டா.....

நாங்கள் எங்களுக்குள்ளேயே போட்டி போட்டுக்கொள்ளுவம்....

எங்களை அடிபாட்டுக்கு விடவில்லையெண்டு சொல்லி அண்ணையிலை எத்தனை தடவை கோபப்பட்டிருப்பம்...

ஆனா இப்ப என்னாலை அடிபாட்டுக்கு போக ஏலாமல் இருக்கு எண்டு நினைக்கேக்கை தான்...

கோட்டை அடிபாடு, சிலாவத்துறை அடிபாடு, மாங்குளம் தாக்குதல் எல்லாவற்றிலும் வெற்றிக்களிப்போடு மீண்டு எனக்கு ஆனையிறவு அடிபாட்டிலைதான்...

ஆனையிறவு அடிபாட்டுக்கு நாங்கள் வெளிக்கிட்டதை இப்ப நினைச்சாலும் எவ்வளவு சந்தோசமா இருக்குது.....

## குறள் வெள்ளம்

# ஆறாத வடு

மனம் ஒரு கண்ணாடி என்பர். ஏன்? இது கீறப்பட்டால் அந்தக் கீறலை அழிக்கவே முடியாது.

எனவே, அடுத்தவர் மனங்களை நாம் புண்படுத்தாமல் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். நாவினால் ஒரு மனதை சுட்டுவிட்டால் அந்த வேதனையை உயிருள்ளவரை மாற்ற முடியாது; மறைக்க முடியாது. அந்த வார்த்தை மனதை வருத்திக் கொண்டே இருக்கும்.

கோபத்தினால், அறியாமையினால் செய்யும் தீங்குகளில் நாவினால் செய்வதே மிகவும் கொடியது. ஒரு உடற்காயத்தைக் கொடுத்தால், தீயினால் சுட்டுவிட்டால் கூட அது சில காலத்தில் ஆறிவிடும்.

ஆனால் வெளியில் விட்ட வார்த்தையை திரும்பப் பெறவே முடியாது. எனவே சிந்தித்துப் பேசுங்கள்.

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

'அம்பிகைபாகன்'

www.tamilarangam.net



பெண் போராளிகள் நாங்களும், அண்ணாக்களுமாக பல நூற்றுக்கணக்கானோர் எந்தவித கவலைகளுமின்றி "எப்ப அடிப்பம்...? எப்ப ஆனையிறவைப் பிடிப்பம்.....?" என்ற ஆவலோடு தான் சென்றோம்.

நாங்கள் சென்ற இயக்கச்சிப் பகுதி பரந்த வெளிப் பிரதேசம். அந்தப் பகுதியில் இழப்புக்கள் அதிகம் வருமென்பது எங்களுக்கு முன்பே தெரியும். ஆனாலும் இழப்புக்களை நினைத்தால் நாங்கள் சண்டைபிடிக்க முடியாது. நாங்கள் முன்பு கலந்து கொண்ட எத்தனையோ களங்களில் இழப்புக்களையும் சந்தித்திருக்கின்றோம்; வெற்றிகளையும் பெற்றிருக்கின்றோம்.

குழுக்கள் குழுக்களாக நாங்கள் பிரிக்கப்பட்டு அனுப்பப்பட்டோம். முதலில் ஒரு குழு உள்ளே சென்று காயப்பட்டிட்டுது அல்லது இழப்புக்கள் ஏற்பட்டிட்டுது என்பது தெரிந்த பின்பே அடுத்த குழு தாக்குதலுக்குச் செல்லும்.

வெள்ளிப்பனி உருகி தலையில் வீழ்ந்தது போல் இருந்தேன்' என்றொரு பாடல் வரியுண்டு. பனிக்கட்டி வெள்ளையாக, பார்ப்பதற்கு வெள்ளிக்கட்டு போன்று இருப்பது ஏன் தெரியுமா? பனிக்கட்டி தண்ணீரின் உறைந்த வடிவம் ஆகும். உறைந்த தண்ணீரில் பல படிகங்கள் காணப்படும். இப்படிகங்கள் பல முகங்களைக் கொண்டவை. இந்த முகங்கள் வெளியே உள்ள வெளிச்சத்தைப் பிரதிபலிப்பதால் தான் பனிக்கட்டி நிறமாகத் தோன்றுகின்றது.

இ. கோகுலரங்கன்
2ம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்.

பாதுகாப்பு வாகனம் ஒன்று முன்னே செல்ல அதன் பாதுகாப்பில் எங்களது முதலாவது குழு சென்று கொண்டிருந்தது. எங்களது காவலரணிலிருந்து நூறு யார் தூரம் வரை எங்கள் வாகனம் சென்றுவிட்டது. எதிரி தரப்பிலிருந்து எந்தவிதமான தாக்குதலும் எங்கள் பகுதியை நோக்கி வரவில்லை. ட்ராக்டர் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருந்தது. ஐந்து நிமிட இடைவெளியின் பின் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் அனைத்திலுமிருந்தும் சகல விதமான ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டதை எங்களால் உணர்ந்துகொள்ள முடிந்தது. எங்கள் பகுதியிலிருந்தும் பதில்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

எங்களது பாதுகாப்பு வாகனத்தின் மீது எதிரி தரப்பிலிருந்து ஆர்.பி.ஜி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதனால் அது தீப்பற்றி எரிந்தது. அதன் பாதுகாப்பில் சென்ற பிள்ளைகள் சிதறி பல பக்கங்களிலும் சென்றபோது அவர்களை நோக்கிச் சீறிப் பாய்ந்து வந்தன ரவைகள். எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

முன்னுக்குச் சென்ற நால்வர் காயப்பட்டு விட்டதாகவும், அவர்களை அப்புறப்படுத்தும்படியும் வீமா அறிவித்தாள்.

அதன்படி மீட்புக் குழுவினர் சென்று காயப்பட்டவர்களைத் தூக்கி வந்தனர். பிள்ளைகள் உயிராபத்தான நிலையில் இருந்த காரணத்தினால் அவர்களது ஆயுதங்களை மீட்புக் குழுவினரால் எடுத்துவர முடியாது போய்விட்டது.

முன்னே சென்ற இரு குழுக்களைச் சேர்ந்தவர்களும் காயப்பட்டு விட்டதனால் மூன்றாவது குழுவினரோடு நானும் செல்ல நேர்ந்தது.

நான் சென்றபோது எங்கள் தரப்பில் ஆர்.பி.ஜி. கொண்டு சென்றவர்களில் 'லோடர்' வீரமரணம் அடைந்திருந்தார். இயக்குபவரும் காயமடைந்திருந்தார். 'செல்' நிரப்பியபடி ஆர்.பி.ஜி கீழே விழுந்து கிடந்தது. காயப்பட்டவரையும் தூக்கி ஆர்.பி.ஜியையும் கொண்டு சென்று பின்புறமாக அனுப்பிவிட்டு மீண்டும் நான் முன்னேறினேன்.

அங்கு சென்றவர்களில் பலரும் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டோ, காயப்பட்டோ இருந்தனர். அது வெட்டவெளிப் பிரதேசம் என்பதால் காயமுற்றவர்களைத் தூக்கிச் சென்றவர்களும் காயமடைந்து ஆங்காங்கு கிடந்தனர். அவர்களைத் தூக்க முனைந்தால் எதிரியின் காவலரண்களைப் பிடிக்க முடியாது போய்விடும் என்பதால், பக்கத்தில் நின்ற அண்ணாக்களிடம் "பொயின்ரைப் பிடிக்க வேணும். விடியப் போகுது, ஓடிவாருங்கோ" என்று சொல்லிக் கொண்டே நான் முன்னுக்கு ஓடினேன். அண்ணாமாரும் நானும் ஓடிப்போய் ஒரு இடத்தில் நிலை எடுத்திருந்து அடித்துவிட்டு மீண்டும் முன்னே செல்வதற்காக எழுந்தபோது அண்ணாக்கள் இருவருக்கு வயிற்றில் வெடி விழுந்தது.

அவர்கள் தங்களுக்கு வெடிவிழுந்ததை பொருட்படுத்தவேயில்லை.....

"அக்கா ஓடுங்கோ அக்கா... பொயின்ரைப் பிடியுங்கோ அக்கா....." என்றுதான் கத்திச்சினம்.

நான் முன்னுக்கு ஓடினன். அங்கை 'அருள் 89' லோட் பண்ணியபடி பிள்ளையள் நின்று கொண்டிருந்தினம். எதிரியின் காவலரணிலிருந்து 30 யார் தூரத்துக்குக் கிட்டப் போயிட்டம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இதிலையிருந்து நாங்கள் அடிச்சால் அவன் 203 செல் அடிப்பான். பொயின்றுக்குக் கிட்டவந்து படுத்திருக்கிறது வீண் வேலை. எழும்பி முன்னுக்கு ஓடிப் போய் 'சக்கைக்கான்' எறிவம்" என்றேன் நான்.

"காந்தி அக்கா, என்னிடம் ரவைகள் முடிஞ்சிது. எனக்கு ரவுண்ட்ஸ் அனுப்பச் சொல்லி வோக்கியில் அறிவியுங்கோ" என லீமா என்னிடம் சொன்னாள்.

வோக்கியில் தொடர்பு எடுக்க முயன்றேன். நான் பேசியது எம்மவர்களுக்குக் கேட்கவில்லை. அவர்கள் பேசியது எனக்குக் கேட்கவில்லை. வோக்கித் தொடர்புகளைத் தொடர்ந்து குழப்பிக் கொண்டிருந்தார்கள்.

எங்கும் ஒரே வெடிச்சத்தம்.... வோக்கியில் தொடர்பு எடுக்க முடியாமலேயே இருந்தது.

"முட்கம்பிகளை அகற்றிவிட்டு நாங்கள் முன்னுக்குப் போய் கிரனைட் வீசுவம்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து முன்னுக்கு ஓடினேன் நான்.

'ரோர்பிடோவின்' (வெடிக் கண்ணி) மூலம் மிதிவெடிகளை வெடிக்கச் செய்வதிலும், முட்கம்பி வேலிகளை அகற்றும் வேலையிலும் ஈடுப்டிருந்த லீமாவின் குரல் என்னைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

"எனக்குக் காயம் காந்தி அக்கா...." என்று சொல்லியபடியே மார்பைப் பொத்தியபடி லீமா கீழே விழுந்ததுதான் எனக்குத் தெரியும். அவள் வீரமரணமடைந்து விட்டாள் என்பதனை நான் பின்புதான் தெரிந்து கொண்டேன்.

திடீரென்று யாரோ என்னையும் தூக்கிவீசியது போன்றதோர் உணர்வு. கொஞ்சத்தூரம் மேலே போய் கீழே வந்தது மாதிரியான நிலை. காலொன்றில் இனம் புரியாத வலி. ஆனாலும் நான் மயங்கிவிடவில்லை. நிலா வெளிச்சத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருந்த 'பராலைற்றின்' உதவியோடு கால்களை ஒரு கணம் உற்று நோக்கினேன்.

காலொன்றில் முழங்காலுக்குக் கீழே எதுவும் இல்லை... வெறும் எலும்பும் பிய்த்தெறியப்பட்ட நிலையில் சதைத்துண்டங்களுமாய்....

நான் 'மைன்ஸிலை' காலை வைச்சபடியால் எனது காலொன்றை இழந்துவிட்டேன் என்பதனை அப்பொழுதுதான் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

எழும்பினால் அடுத்த காலும் போய் விடுமோ என்ற தயக்க உணர்வு.

ஆனாலும் காலொன்று பறிபோய்விட்ட நிலையிலும் கத்தினேன்.

கால்போனது எனக்குப் பிரச்சினையாய் படவில்லை. என்னாலை எழும்பி ஓட ஏலாமல் கிடக்கு..... பொயின்ரைப் பிடிக்க ஏலாமல் போச்சு என்ற ஏக்கமே என் நெஞ்சில் பரவி நின்றது.

அப்பவும் நான் பலமாகக் கத்தினேன்.

"எனக்கு மைன்ஸிலை கால் போயிட்டுது... என்னைத் தூக்க வேண்டாம்.... எழும்பி எல்லோரும் ஓடுங்கோ....

> உங்கள் ஆடைகளைப் பற்றி எப்போதாவது நீங்கள் கவனிக்காமல் இருக்கலாம். ஆனால், உங்கள் உள்ளம் எப்போதும் சுத்தமாக இருக்கும் விதத்தில் தினமும் விழிப்புடன் இருந்து கவனித்து வரவேண்டும்.
>
> ▫ மார்க் டுவைன் ▫

பொயின்ரைப் பிடியுங்கோ." என்று தொடர்ந்து கத்தினேன்.

பொழுது விடியத் தொடங்கியிட்டுது... இனி மேலும் படுத்துக் கிடந்தால் ஆமி வந்து பிடிச்சுக் கொண்டு போயிடுவான்... அல்லது ஷெல் அடிச்சு எங்களைச் சாகடிச்சுப் போடுவான்.

நான் சாகிறதுக்கு எப்பவுமே பயப்பிட இல்லை... ஒரு கால் போய்விட்டது என்பதற்காக செத்துவிடவும் முடியாது.

எமது இயக்கத்தில் இரண்டு கண்களும் இரண்டு கைகளும் இழந்தவள் வாயினால் பேனாவைக் கவ்வி எழுதுகிறாள்.... காலினால் ரவைகளை நிரப்புகின்றாள்....

எனக்கு ஒரு கால்தானே போய்விட்டது....

நான் எதற்காக சாவை அரவணைக்க வேண்டும்.

நாங்கள் எதிரியிடம் பிடிபட்டு விடக் கூடாது என்பதற்காக எங்கள் மானத்தைக் காப்பதற்காக எங்கள் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் 'சயனைட்டை' ஒருகணம் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

ஆனாலும் சாவைத் தேடிக் கொண்டுவிட்டால் சிலவேளை எனது உடலை எம்மவர்களால் மீட்க முடியாது போய் விட்டால் எனது உயிரற்ற உடலைக்கூட அந்த இனவெறி பிடித்த சிறிலங்கா அரசின் சிங்கள இராணுவத்தினர் சீரழித்து சின்னா பின்னப் படுத்தி விடவும் கூடும்....

மெது மெதுவாக இழுத்து இழுத்து எங்கடை காவலரணுக்கு கிட்ட சென்றுதான் வோக்கியிலை அறிவிச்சன். "என்னை வந்து தூக்குங்கோ" என்று சொல்லி.

நான் இயக்கத்திலை சேர்ந்து நாலு வருசத்துக்குப் பிறகுஎனக்குக் கால்போன பிற்பாடுதான் எங்கட வீட்டில என்ர அப்பா, அம்மா, சகோதரங்கள் எல்லாரை

www.tamilarangam.net



யும் கண்டனான்.... அதுவரையும் நான் எவரையுமே சந்திக்க வில்லை.

என்னைப் பார்ப்பதற்காக 'வைகறைக்கு' வந்த அம்மா, "இனியும் இங்கையிருந்து என்னடி செய்யப்போறாய்....? காலைப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்து விடன்..." என்று சொன்ன போது எனக்கு அம்மா மீது ஆத்திரம் வரவில்லை. அவரது அறியாமையை எண்ணியபோது சிரிப்புத்தான் வந்தது.

சில வேளை நீங்களும், "சொத்தி.. அதுவும் பொம்பிளைப் பிள்ளை... இனி உன்னாலை சண்டைபிடிக்க ஏலுமே..? விசர்க்கதைகளை விட்டுப்போட்டு வீட்டை போய் ஆத்தை அப்புவோடை இரன்" எண்டுதான் சொல்லுவியள்.

அம்மாவுக்குச் சொன்னதைத் தான் உங்களுக்கும் சொல்லுறன்.

"களத்தில் நாங்கள் வீரமரணம டையலாம். எங்கள் கண்கள் பறி போகலாம். கைகள் போகலாம். கால்கள் போகலாம். நாங்கள் ஊனமுற்றவர்களாகலாம். ஆனாலும் நாமனைவரும் உறுதியோடு இறுதிவரை போராடி எமது இலட்சியத்தை வென்றெடுப் போம். இது திண்ணம்."

**நன்றி: புலிகளின் குரல்**



## விரைந்து செல்

எட்டி நட ராசா
மாலைக் கருக்கலுக்குள்
வேலை முடிக்க வேண்டும்
வடக்கன் சோடி காளைகளே!
கடைக்கண் பார்வை வேண்டா
நேர்வழி நோக்கி எட்டி நட.

மண்ணின் ஈரப்பதன்
திண்ணிக் காய்வதற்குள்
வம்சத்து வயிறுகள்
ஒட்டி உலர்வதற்குள்
எட்டி நட

நான் பாடுபட
நாளை அறுவடை செய்வது
யார் யாரோ
விளை நிலங்களுள்
சிங்கங்கள் குடி புகமுன்
எட்டி நட.

சகடை வானில்
சன்னங் கொண்டலைய
சிரசு மேல் குருதி சொரியுமுன்
எட்டி நட.

வேளையோடு வீடு ஏகவேண்டும்
வேதனையோடு விழி பார்க்கும்
இல்லாள் முன் என்
இருப்பை உறுதி செய்வதற்காக
எட்டிநட ராசா

மாலைக் கருக்கலுக்குள்
வேலை முடிக்க வேண்டும்.

ந. முரளிதரன்
சுவிஸ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

வணக்கம் பல. எரிமலை வாசகர்களில் நம் குடும்பமும் ஒன்று. என் கணவர், பிள்ளைகள் நான் முந்தி, நீ முந்தி என்று அடிபட்டு வாசிப்போம். இங்கு வெளிநாடுகளில் அந்நிய பாஷையில் பயிலும் சின்னஞ் சிறுசுகளுக்கு தாய்மண் பற்றோடு தாய்மொழியறிவையும் ஊட்டுகிற இனிய எரிமலையே! நீ ஒரு தமிழ்த்தாய் வழிகாட்டி. எமக்குகூட தெரியாத சில வரலாறுகளை, தாய் மண்ணின் நிகழ்வுகள், பண்பாட்டம்சங்களை நம் பிள்ளைகள் வாசித்தவுடன் பரவசமடைகிறார்கள். உனக்கு என் நன்றிகள் பல.

க.தேவி
பேர்லின்

---

பேரன்பு சார்ந்த எரிமலை ஆசிரியர்கட்கு வணக்கம்!

தை மாதம், 1993ம் ஆண்டு வெளிவந்த எரிமலை பார்த்தேன்; தொடர்ந்து வாசித்தேன். அவற்றின் உள் பொதிந்த பொருளடக்கம், மொழிவழி பிறந்த செயல் அடக்கம், மாமண்ணைக் காத்த செயல் அடக்கம், தமிழ் ஈழத்தின் பொருள் ஆதார அடக்கம் எல்லாம் சேர்ந்து என்னுள் தமிழீழத்தில் வாழ்வது போன்ற உணர்வைத் தோற்றுவித்தது.

நன்றி
புங்கையூர்
சோமு

---

அன்பின் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

இவ்விதழின் பெருமையை நான் எப்படி வர்ணிப்பதென்றே தெரியவில்லை. ஏனென்றால், ஒரு பெண்ணின், அதாவது விடுதலைப்புலிகளைக் கொடியவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்த பெண்ணின் மனத்தை மாற்றியிருக்கிறதென்றால் வேறென்ன சொல்வது. ஆமாம்.... அந்தப் பெண் நான்தான். எனக்கு இப்போது 16 வயது. நான் எனது பெற்றோர்களுடன் டென்மார்க்கில் அகதியாக வாழ்கிறேன். இவ்வளவு காலமும் "புலிகள்" என்றால் எனக்கு ஏதோ ஒரு இனந் தெரியாத கசப்பு. ஆனால் நான் எப்பொழுது, எரிமலைக்குள் பொங்கி வந்த உள்ளுணர்வுகளை உணர்ந்து கொண்டேனோ, அப்போதே என்மீது எனக்கே ஓர் வெறுப்பு உண்டாகிவிட்டது. புலிகளைப் புரியாமல் இருந்ததற்காக. இன்னொரு பக்கம் ஏதோவொரு உந்துதலும் ஏற்பட்டுவிட்டது. தமிழ் மண்ணிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காக.

உண்மையை விளங்க வைத்து, உணர்வுகளைத் தூண்டிவிட்ட "எரிமலை" க்கு எனது மனமார்ந்த நன்றி.

இப்படிக்கு
லெற்றிசியா இராயப்பு.

---




அன்பான எரிமலை ஆசிரியருக்கு வணக்கம்!

நான் தொடர்ந்து எரிமலை இதழை விரும்பிப் படித்து வருகின்றேன். இன்று எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு இதன் வளர்ச்சி கண்டு.... எனக்கே ஆச்சரியமாயுள்ளது. எனது வாழ்த்துக்கள்!

1992 கார்த்திகை இதழை பெற்றுக் கொண்டேன். அதில் "விடுதலைப் போரில் ஒரு தாய்" இவரின் பங்குகளை எழுதிவிட்டு, முடிவில் இறந்த செய்தியை இரகசியமாக நீங்கள் எழுதியுள்ளீர்கள். அதனால் என் மனமோ தாங்க முடியாத வேதனையை அடைந்துவிட்டது. அடுத்து, தமிழீழத் தேசியத் தலைவனை நினைத்து ஒரு மூதாட்டி எழுதிய கவிதையைப் பார்த்தேன். "புவியினில் சாயப் போகிறேன், புறப்பட்டு வந்து உன் முகத்தைக் காட்டு மைந்தா" எவ்வளவு அற்புதமாக "அன்னையின் ஆவல்" என்ற கவிதையை எழுதியுள்ளார். இத்தாய்க்கு கனிவான பாராட்டுக்கள்! தமிழீழ மக்களை தலை நிமிரச் செய்த தலைவனைப் பற்றி தாலாட்டுப் பாட உலகமே ஆவலாகவுள்ளது.

நன்றி
சேது, நோர்வே.

---

பிறந்த நாட்டையும்
உன் தேச மக்களையும் நீ மறந்து விட்டாயா?
எங்கள் குலமானம் காக்க
உன் தங்கை துப்பாக்கி ஏந்திப் போர்க்களம் செல்ல
நீயோ உன் உயிர் காக்க என
யூ.ரி.ஏ விமானம் ஏறிவந்தாய்.
பெற்று, வளர்த்து, தாலாட்டிச்
சீராட்டி தமிழ் பால் ஊட்டி
வளர்த்த தாயின் நிலை மறந்து
நீ இன்னமும் தூங்குகின்றாயோ?
நாளும் அகதி என்று சொல்லுவதோ?
அடிமை வாழ்வு வாழுவதோ?

கரவையூரான்
S.K. பிள்ளை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கோ. மகேந்திரராசா

# நாளை விடியும்

எமக்கு விடிவே வராதா....?

எமக்கு விடிவு வேண்டும்.

நாளை விடியும்.

தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டு, தமிழருக்கு எதிரான அழிப்பு முயற்சிகள் எல்லாப் பக்கங்களா லும் ஏவப்பட்டிருந்த காலம்.

'தம்முடைய ஜீவாதாரங்கள் ஏன் பறிக்கப்படுகின்றன...? இந்நெருக்கடிகளில் இருந்து எவ்வாறு எம்மைப் பாதுகாத்துக் கொள்வது?' என்றே சிந்திக்காது, ''நாம் யாருக்குத் தீங்கு செய்தோம்? எமது எதிர்காலம் எவ்வாறு இருள் சூழ்ந்து வந்தது?" என அப்பாவித்தனமா கச் சிந்தித்த மக்கள் தமது அவல மான வாழ்வை எண்ணி "எமக்கு விடிவே வராதா?" என அங்கலாய்த்த னர்.

இளைஞர்கள் சிலர் சிந்தித்தனர். சிங்களப் பேரின வாதத்திற்காக எம்மைப் பலியிட சிறிலங்கா அரசு கங்கணம் கட்டி நிற்கிறது. அதற் காகத் தனது கொடூரமான தாக்கு தல்களை ஏவிவிடுகின்றது. எமது மூத்தோர் இதைப் புரிந்தும் புரியா மலோ அல்லது அறியாமலோ அல்லது களத்தில் இறங்க அஞ்சியோ சிங்கள இனவாதத் திற்கு அடங்கிப் போகின்றனர்; துணை போகின்றனர்; சமரசம் செய்ய முற்படுகின்றனர். ஒரு பகு தியினர், துணிந்து முன்வந்து எதிர்த்தாலும் அதை சிங்கள அரசு வன்முறைமூலம் எதிர் கொள்ளுகின்றது.

"எமது உரிமைகளை நாம் போராடியே பெறவேண்டும். வன்முறையை புரட்சிகர வன்முறை மூலம் எதிர்கொள்ள வேண்டும். இரத்தம் சிந்தி உயிர்த்தியாகம் செய்துதான், எமது உரிமையைப் பெறலாம். எமது நாடு தமிழீழம்" என இளைஞர் கள் அறிவித்தனர். போர்க்கொடி தூக்கினர்.

"இது நடக்குமா....?" என்றனர் சிலர்.

"எப்படிச் சாத்தியமாகும்?" என்றனர், இன்னும் சிலர். "அழி வுகள் ஏற்படுமே..." எனத் தமது அச்சத்தை . வெளியிட்டனர். "இளம் கன்று பயமறியாது" என்றும் சொல்லித் திரிந்தனர்.

"வேண்டாம் முரட்டு வழி, செல்வோம் அகிம்சை வழி" என்போரும் ''தனிவழி வேண்டாம் இணைந்து செல்வோம்" என ஐக்கியம் பேசியோரும், எம்மைச் சூழ்ந்திருந்தனர்.

இருந்தபோதும் இளைஞர்கள் மனம் தளரவில்லை. இளைஞர் களின் தன்னலமற்ற செயல்கள் தொடர்ந்தன. அவர்களுடன் மக்களும் இணைந்து கொண்ட னர். எல்லோரும் சேர்ந்து "எமக்கு விடிவு வேண்டும்" என ஆர்த்தெழுந்தனர்.

இளைஞர்களின் வழிகாட்ட லில், கப்பல் கடலில் பயணத்தைத் தொடர்ந்தது. எத்தனை சூறாவளி கள்! பிரளயத்தை ஒத்த கொந்த ளிப்புகள்! இவற்றின் நடுவே பய ணம் தொடர்கின்றது. இளைஞர் கள் மேலும் மேலும் உறுதி பூண்ட னர். மேலும் மேலும் வலிமை பெற்றனர். கரையை நோக்கி கப்பல் நெருங்க, நெருங்க சூறாவ ளிகளும், கொந்தளிப்புகளும் ஆவேசம் கொண்டு கப்பலைத் தாக்கின.

கப்பலினுள் பய ணிகள் சிலர் நோயுற் றனர்; சிலர் களைப் படைந்தனர்; மற்றும் சிலர் முணுமுணுத்த னர். "பிரயாணம் வேண்டாம், இயற் கையின் சீற்றத்தை வெல்ல முடியாது" என குழப்பமும் செய்தனர். ஏனையோர் எப்படி யாவது கரையை அடைந்து விட வேண்டும் என்பதைத் தெளிவா கப் புரிந்தனர்.

இளைஞர்கள் பலமாக, மேலும் பலமாகக் கப்பலைச் செலுத்தினர் புரிந்துகொண்ட பய ணிகளும் இளைஞர்களுடன் சேர்ந்து 'நாளை விடியும்' என்ற நம்பிக்கையுடன் பயணத்தைத் தொடர்ந்தனர். கடலினைக் கிழித் துக் கொண்டும், புயலின் சீற்றத் தைப் புரிந்து கொண்டும் கப்பல் பயணத்தைத் தொடர்கின்றது.

கடலில் தெரியும் தொடுவா னம் போன்று போராட்டம் முடி வில்லாததா..?

'கோடையில் காணும் கானல் நீர் போன்றதா விடுதலை...?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படியான கேள்விகள் அன்றும் கேட்கப்பட்டன. இன்றும் கேட்கப்படுகின்றன. எமது போராட்டம் கருக்கொண்ட காலத்திலிருந்து இன்றுவரை கேட்கின்ற நம்பிக்கையீனமான, தீனமான குரல்தான் இது. போராட்டத்தை சிந்திக்காதவர்களும், போராட்டத்தைக் கண்டு பயப்பட்டவர்களும், போராட்டத்தில் நம்பிக்கை வைக்காதவர்களும் இப்படியாகக் குரலெழுப்பினர்.

தமிழ் மக்களின் எழுச்சியையும் விடுதலை உணர்வையும் மழுங்கடிப்பதாகவே இக் குரல்கள் இருக்கின்றன. ஆனால் ஆரம்ப நாட்களில் இக்குரலுக்குரியவர்கள் பெரியளவிலும், பலமாகவும் இருந்தனர். இன்று சிறிய அளவில் பலவீனமாக இருக்கின்றனர்.

ஒரு காலத்தில், எமக்கே தனித்துவமானவை என, எமது மொழியின் தொன்மையையும், பழம் பெருமைகளையும் இலக்கியப் பெருமைகளையுமே பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பேசிப் பேசியே அழிவையும் ஏற்றுக் கொண்டோம்.

தமிழீழம் என்பது கூட மனதிற்கு மகிழ்ச்சி தரக்கூடிய இனிமையான கனவு போல இருந்த காலமும் ஒன்றிருந்தது. ஆனால் இன்று தமிழீழம் என்பது நிலை நிறுத்தப்பட்டு விட்டது. சிந்தனையிலும், உலக அரங்கிலும் தமிழீழம் ஒரு அங்கமாகிவிட்டது. தமிழீழத்திற்கான எத்தனையோ அம்சங்கள் நிறைவு செய்யப்பட்டுவிட்டன. இந்த மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன.

திடீரென நிகழ்ந்ததா?

தானாக நிகழ்ந்ததா?

மந்திரத்தால் நிகழ்ந்ததா?

பிறரால் நிகழ்ந்ததா?

பொதுநல நோக்கம் கொண்ட, தற்கொடைக்குத் தயாரான எமது இளைஞர்களினாலேயே இது சாதிக்கப்பட்டது. உங்கள் வாழ்வில் அக்கறை கொண்ட, உங்களில் பாசம் கொண்ட இளைஞர்களினாலேயே இது சாதிக்கப்பட்டது. உங்களால் நேசிக்கப்படுகின்ற இளைஞர்களாலேயே இது சாதிக்கப்பட்டது.

இவர்கள் உங்கள் பிள்ளைகள், உங்களின் சகோதரர்கள், உங்களின் உறவினர்கள், உங்கள் நண்பர்கள், உங்கள் அயலவர்கள், தமிழீழத்தின் அனைவரையுமே தமது குடும்பமாகக் கொண்டவர்கள், இவர்கள் தாம் விடுதலைப் போராளிகள்.

ஒவ்வொரு கணமும் களத்திலே எதிரியை எதிர் கொள்பவர்கள்.

மழை குளிர் என்றோ, கோடை வெப்பம் என்றோ, பனி நடுக்கம் என்றோ ஓய்வெடுக்காதவர்கள்.

பசி, தூக்கம், உடல் வருத்தம் பாராது தினமும் களத்தில் நிற்பவர்கள்.

தமது உடலைப் பகுதி பகுதியாகச் சிதைத்துக் கூறு போட்டாலும் "தமிழீழம், தமிழீழம்" என்றே துடிப்பவர்கள்.

இறக்கும் போதும், தமிழீழ நினைவுடன் புதைபவர்கள்.

இப்படியான எமது போராளிகள் வீரம், பாசம், இலட்சிய தாகம் கொண்டு களத்திலே போராடுகின்றார்கள். களத்திலே வீரச்சாவைச் சந்திக்கின்றார்கள். இறந்த போதும் எம்முடனேயே வாழ்கின்றவர்கள்; சாகாவரம் பெற்றவர்கள். இவ்வாறாக வீரச்சாவை சந்தித்தவர்களையே மாவீரர்கள் என்கிறோம்.

இந்த மாவீரர்களின் வாழ்க்கை எமக்கு நம்பிக்கையூட்டுவனவாகும். அவர்களின் செயல்கள், வார்த்தைகள் எல்லாமே எமக்கு வழிகாட்டுவனவாகும்.

அவர்களின் வாழ்க்கையை அறிவதும், அவர்களை அறிந்து வைப்பதும் எமது உயர்ந்த கடமையாகும்.

தம்மைவிட தாய்நாட்டை நேசித்தவர்கள்.

உயிரைவிட, இலட்சியத்தை உயர்வாகக் கொண்டவர்கள். தமது குடும்பத்தை மட்டுமல்ல, முழுத் தமிழ் மக்களையுமே உறவாகக் கொண்டவர்கள். தமக்கு நினைவுச் சின்னம் அமைப்பதைவிட தமிழீழம் அமைவதையே விரும்பியவர்கள்.

தமக்காக மண்டபங்களும், சிலைகளும் எழுப்புவதைவிட, தமிழ் மக்கள் உரிமைபெற்று எழுந்து நிற்பதையே விரும்பியவர்கள்.

நாம் ஒவ்வொருவரும் அவர்களுக்காகச் செய்யவேண்டியது என்ன?

மாவீரர் எந்த இலட்சியத்திற்காக தம்மை அர்ப்பணித்தார்களோ அதை அடைய நாமும் போராடுவோம்.

மாவீரர் யாருக்காக வாழ்ந்தார்களோ, அவர்களுக்காக நாமும் வாழ்வோம்.

மாவீரர் எந்தப் பண்புகளைக் கொண்டு வாழ்ந்தார்களோ, அந்தப் பண்புகளை நாமும் கொள்வோம்.

மாவீரர் தமிழீழக் கனவுடன் மரணித்தார்கள். நாம் தமிழீழத்தை நனவாக்க வேண்டும்.

வாருங்கள்!

மாவீரருக்கு

அழகான...

உறுதியான....

நிலையான...

நினைவுச் சின்னமாக....

தமிழீழத்தை

அமைப்போம்.

□■□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிமிர்ந்த நெஞ்சு கனந்து கொண்டது

கிட்டண்ணா......
நின் பெருமை பல கண்டு
நெஞ்சை நிமிர்த்திய நான் இன்று
உன் வீரச் சா நிலை யுணர்ந்து
விழியிரண்டைத் துடைக்கிறன்.

எத்தனை ஆற்றலை...... எத்தனை புதுமையை.....
இளமாலைப் பொழுதில் நினைத்துப் பார்க்கிறேன்.
மஞ்சள் வெய்யில் உந்தன்
மகிமையைக் கிளர்த்தின......


படைக்கு நீ தலைவனென்றால்
பகைவன் திகில் அடைந்திடுவான்.
இடைக்கிடையுன் வோக்கி சத்தம் கேட்டு
ஈழமே ஒருமுறை எழுந்து நிற்கும்.

அன்று......
யுத்தக் கைதிகளை பரிமாற்றும் உன்
யுக்தி கண்டு பெருமை கொண்டேன்.
இரத்தக் கறை படிந்த எதிரிகள் மனங்களும்
கிட்டு கிட்டென்றே உச்சரித்தன.....

வாழ் நாளில் நானுன்னை மறக்க முடியாது
யாழ் நாட்டை
உன் கரத்தில் அன்று தாங்கும் நிலை கண்டு
காழ்ப்புணர்ச்சி கொண்ட சில நாடுகளும் உண்டய்யா....

தூரிகையை நீ பிடித்து
ஓவியத்தை வரைகையிலே
தூர நோக்கும்.... தூய்மையான ஈகமுமே
துள்ளிக் குதிக்கும்.

இன்றோ...... உன்
ஓவியங்கள் எழுந்து நின்று
உயிர்ப்புடன் கதைக்கின்றன....



இளமாலைச் சூரியனோ
மெல்ல.... மெல்ல..... தன்னை
இருட்டிக் கொண்டு போனான்.....
அண்ணாந்து பார்த்தேன் ஆகாயத்தை....
இரைதேடிவிட்டு இருப்பிடம் நோக்கி....
வெள்ளைக் கொக்குகளும், நாரைகளும்
கூட்டம்..... கூட்டமாக.....
வேதனையைச் சுமந்து கொண்டு....

மோதும் அலை கடலில் நீ
மூட்டிய அனல் நெருப்பைக்
கண்டு வந்து சொன்னது போல் என்னைக்
கடந்து அவை சென்றன.....

கடல் கரையில்
எழுந்து நான்
கனத்த என் நெஞ்சை தடவியபடி......
உன் நினைவுகளுடன்....
அலையில்...... நடக்க..... ஆரம்பித்தேன்.....

குகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிட்டு எனும் ஓவியர்

* திலகர் *

கிட்டு ஓர் ஓவியக் கலைஞனாகவும் வளர்ந்து வந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரைத் தனது நாட்டிலிருந்து வெளியேற்றியபோது, அவர் மறைவாகப் பல நாடுகளில் இருந்த காலம், அவரது கலை உணர்வுகளுக்கு உரம் ஊட்டும் சந்தர்ப்பத்தை அளித்தது எனலாம். கலைச் செயற்பாடுகளில் ஈடுபட அக்காலம் அவருக்கு ஓரளவு ஓய்வு கொடுத்திருக்கலாம். இயற்கையாக மிக நுணுக்கமான உணர்வுத்தன்மை உடையவர் என்பதை அவருடன் நெருங்குவோர் உடனே புரிந்து கொள்வர். இயற்கையின் அழகை ரசிப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இசையில் ஆழமான ரசனை உடையவர். புகைப்படக் கலையில், ஒரு விற்பன்னனைப் போல் செயல்படும் திறனும், அது குறித்த அறிவும் பெற்றிருந்தார். மேலும், நூல்கள், பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வடிவமைப்பதில் அவருக்கிருந்த கலாரசனை, வாசகர்களின் மனோவியல் பற்றிய அறிவு, நிறத்தெரிவு ஆகியவை அவரின் தனித்தன்மையான அம்சங்கள். இத்தகைய மனத்தளத்திலேயே அவரது ஓவியக் கோபுரம் கட்டி வளர்கப்பட்டு வந்தது. மெக்சிக்க நாட்டு ஓவியர் ஒருவரிடம் சிறிது காலம் முறையாக ஓவியக் கலையைப் பயின்றார். அவ்வோவியனின் பாதிப்பு இவரது ஓவியங்களில் இருந்ததாக எண்ணுகின்றேன். கிட்டு இந்தியாவில் இருந்தபோது, சாளி என்ற இளம் ஓவியனுக்கு ஓர் ஓவிய அறையை ஒதுக்கி ஊக்கப்படுத்தி வந்தார். நான் சென்னை சென்றபோது, சாளியை ஓவியர் சந்தானத்திடம் அறிமுகம் செய்து, பயிலுமாறு செய்தேன். அக்காலத்தில் கிட்டு நவீன ஓவியம் குறித்து கருத்து முரண்பட்டவராக இருந்தார். ஆனால், ஐரோப்பாவில்



இருந்த காலத்தில், பிக்காசோவின் ஓவியங்கள் மீது காதலே கொள்ள ஆரம்பித்தார். "சவ அறை" என்ற பிக்காசோவின் ஓவியத்தின் சாயல் அவரது ஓவியம் ஒன்றில் படிவதாக உணர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ந்தேன். தனது ஓவியங்களில் ஆழ்ந்த உணர்வுகளையும், தத்துவங்களையும் வெளிப்படுத்துவதிலும், அவ்வெளிப்பாட்டிற்கு குறியீடுகளைக் கையாள்வதிலும், தனது கற்பனைகளை உயர உயரப் பறக்கவிட்டுள்ளார் என்றே கூறுதல் வேண்டும். ஒரு சித்திரம், ஒரு விடுதலை வீரனின் மரணம், ஏராளம் வித்துக்களைப் பிரசவிப்பதாக அமைந்துள்ளது. வித்துக்களிலும் அவற்றிலிருந்து உயிர்ப்பெடுக்கும் பல்வேறு வகை மரஞ்செடி, கொடிகளிலும் அவர் ஆறாத அன்பு கொண்டிருந்தார். அவை அங்கு தனது நாட்டில் பரப்பப்பட வேண்டும் என்பதிலும் ஆர்வமாய் இருந்தார். சில ஓவியங்கள் மரபு ரீதியாகவும், யதார்த்தமாகவும் அமைந்துள்ளன. ஆயினும், அவற்றிலும் சில அம்சங்களில் பண்புத் தன்மையைக் (Abstract), கலந்துள்ளார். வான்கோவின் தாக்கத்தை, ஒரு சில ஓவியங்களில் காணலாம். தனது கருத்தை ஓவியத்தின் மூலம் தீவிரமாக வெளிப்படுத்துதல் என்பதோடு, அதற்கு மேலதிக அழுத்தம் கொடுப்பதாக, தீவிர நிறச்சேர்க்கையையும், தூரிகை வீச்சையும் கையாள முயன்றுள்ளார். நிறப்பொருத்தம் என்ற விடயத்தில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார். ஆனால் நிறங்களைக் கையாளும் விடயத்தில் அனுபவக் குறைவு காரணமாக, நிற அழுக்கு ஏற்படுவதாக விமர்சனத்துக்கும் உட்பட்டுள்ளார். நிறக் கலவைகளைப் பயன்படுத்துவதில், நீர், எண்ணை நிறங்களை விட அக்கிறிலிக் என்ற நிறக்கலவையையே பெரிதும் பயன்படுத்தி வந்தார். அதன் மீது மினுக்க எண்ணையை தடவிவிடுவார். உடல் உறுப்புக்களை (Anatomy) அதன் அசைவுகளை நுணுக்கமாக வரைதல் என்ற விடயத்தில், இன்னும் ஏராளம் படிக்க வேண்டியிருந்தது. ஆயினும், ஒரு முறை என்னுடன் தொலைபேசியில் பேசும்போது வேடிக்கையாக அவர் கேட்டார், "இனி மேல் என்னை ஓவியர் கிட்டு என்று அழைக்கலாமோ?'' என்று. "நிச்சயமாக" என்று தெரிவித்தேன். ■□■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓவியக் கண்காட்சியும் பதிவேடும்

தொகுப்பு:

அண்மையில் (30,31/01/93) அன்று பாரிசில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் பங்குபற்றியதோடு, பல் துறை சார்ந்த பிரெஞ்சுக் கலைஞர்களும் பார்வையிட்டு தமது வாழ்த்துக்களையும், கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

சுமார் 14க்கும் மேற்பட்ட ஓவியக் கலைஞர்களின் வர்ணச் சித்திரப் படைப்புக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த, இக் கண்காட்சியில், குறிப்பாக, கேணல் கிட்டு அவர்களால் படைக்கப்பட்ட சுமார் 20க்கும் மேற்பட்ட ஓவியங்கள் பலரது சிந்தைக்கு விருந்தாக அமைந்ததை அங்கு வைக்கப்பட்டிருந்த பதிவேட்டின் (Livre D'or)மூலம் வெளிப்படுகிறது.

நவீன ஓவியங்களின் பிறப்பிடமாகக் கொண்ட, உயரிய வரலாற்றைக் கொண்ட பிரெஞ்சு நாட்டில் ஆச்சரியத்தக்க வளர்ச்சியையும், வசதி வாய்ப்புக்களையும் கொண்டு வளர்க்கப்பட்டுவரும் ஓவியப் படைப்புகளோடு, எமது கலைஞர்களின் ஓவிய வெளிப்பாடுகள் எவ்விதத்திலும் குறைந்தவையல்ல என்ற உறுதியான கருத்து அங்கு வந்து சென்ற பல பிரெஞ்சுக் கலைஞர்களால் பதியப்பட்டுள்ளது.

குறிப்பாக சுமார் 70வயது மதிக்கத்தக்க ஓவியர் M. Meyngnac, திரு. கிட்டு அவர்களின் ஓவியங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், அவை வெளிப்படுத்தி நிற்கும் செய்திகளான வீரம், தியாகம், ஏக்கம், விடுதலை, போர், சமாதானம், எழுச்சி, பசுமை போன்ற உண்மையின் வெளிப்பாடுகளுக்கு கலை உருவம் கொடுக்கும் தன்மை வேறெந்த தற்கால ஓவியராலும் முடியாதென்று வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டார்.

இன்று மேற்கத்தைய நாடுகளில் வியாபார மயப்படுத்தப்பட்டுவிட்ட இப்புனிதமான ஓவியக் கலையானது, பணம் சம்பாதிக்கும் தொழிலாகவும், எந்தவித கருத்தாழமற்ற குறுக்கல் தன்மைகளையே கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஓர் ஓவியன் வாழ்ந்த காலத்து நிகழ்வுகளின் வெளிப்பாடாகவே அவனது ஓவியங்கள் படைக்கப்படுகின்றன. அந்தவகையில் பிக்காசோ (Piccaso) போன்றோரின் ஓவியங்களை உலகமகாயுத்த காலத்தின் போது சமாதானத்தை நாடியும், பாசிச நாடுகளுக்கு எதிரானதாகவும் வெளிப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது என்று குறிப்பிட்ட மேற்படி ஓவியர்,

"எல்லா அடக்கப்படும் மக்களின் சுதந்திரத்திற்கும், அமைதிக்கும் இது போன்ற ஓவிய யுத்தங்கள் (L'art de Combat) தொடர வேண்டும்," என்ற தனது நம்பிக்கையையும் தெரியப்படுத்தினார்.

மற்றொரு பிரெஞ்சுக் கலைஞர் குறிப்பிடுகையில்,


"திறமைகளின் ஒன்றிணைப்பு இந்தக் கண்காட்சி! ஒரு உச்சநிலை உணர்வலையின் விலைமதிப்பற்ற வெளிப்பாடாக கிட்டுவின் ஓவியங்கள் திகழ்கின்றன. அனைத்துக் கலைஞர்களுக்கும் வாழ்த்துக்கள்." என்றார்.

"ஓவியங்கள் வெளிப்படுத்தி நின்ற உணர்வுகள், செய்திகள் என்றும் தங்கள் இதயத்தைவிட்டு அகலாது அவற்றைப் பாதுகாப்போம்" என்று ஒரு தமிழ் கற்கும் பிரெஞ்சுப் பெண்மணி கூறினார்.

மேலும் பலர் தங்கள் கருத்துக்களைக் கூறுகையில், "உங்கள் நாட்டையும், உங்கள் கலை பண்பாட்டையும் வெளிப்படுத்தி நின்றதற்கு நன்றி.

"பலதரப்பட்ட பாரம்பரியங்களையும் பற்றி நின்றது."

ஓவியக்கண்காட்சியைப் பார்வையிடுகிறார் டாக்டர் தே வங்கன்



"எதிர்காலத்தில் மகிழ்ச்சியும், வெற்றியும் பெற்று உங்கள் கனவுகள் நனவாக நல்வாழ்த்துக்கள்." என்று வாழ்த்தினர்.

''உங்கள் மக்களின் பிரச்சினைகளை இந்த அதிஉயர் பாரம்பரியக் கலை வடிவங்கள் மூலம் கண்டேன். சாதகமான, ஆரோக்கியமான நன்மைகளை இக்கண்காட்சி வெளிப்படுத்த நல்வாழ்த்துக்கள்" என்று ஓர் ஆங்கில நாட்டுக் கலைஞர் வாழ்த்தினார்.

"தங்கள் சிந்தனைச் செழுமையின் அடையாள வெளிப்பாடு" என்பது இன்னொரு கருத்து.

இவ்வாறு பலதரப்பட்ட மதிப்பீடுகள் முன்வைக்கப்பட்டன. "எமது மக்களிடையே இலைமறை காயாக உள்ள எவ்வளவோ திறமைசாலிகளை வெளிக்கொணர இது போன்ற முயற்சிகள் தொடர வேண்டும்." "எமது நாட்டின் நிகழ்வுகளைக் கண்முன்னே கண்ட உணர்வு." "கிட்டண்ணா சிறந்த போராளி மட்டுமல்ல, ஒரு தலைசிறந்த ஓவியர் என்பதையும் எமக்கு நிரூபித்துவிட்டார். அவரது எண்ண உணர்வுகள், நம்பிக்கைகள் ஈடேறும் நாள் வெகு தூரத்திலில்லை." அனைத்து ஓவியங்களும் உள்ளத்து உணர்வுகளில் நிலைத்து நிற்கக்கூடியன."இவ்வாறு அங்கு வருகை தந்த 500க்கு மேற்பட்ட தமிழ் ரசிகர்கள் பலரின் உள்ளம் நெகிழ்ந்த குறிப்புக்களும் அப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தன.

**- மோகன் -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் மொழியும் தமிழும்

ஒரு குழந்தை பிறந்த நாட்க ளில் பசியையும், நோவையும் அழுகையால் வெளிப்படுத்துகி றது. அழுகை அதற்கு ஒரு திருந்தா மொழியாகப் பயன்படுகி றது. பின்பு சைகை அல்லது நடிப்பால் (      ) தன் உணர்வுகளை வெளிப்படுத்து கின்றது. எழுத்தொலியால் அமைந்த பேச்சுமொழி உருவா வதற்கு முந்திய மனித இனம், சைகை அல்லது நடிப் பையே தம் எண்ணங்க ளையும், உணர்வுகளை யும் வெளிப்படுத்த பயன்படுத்தியதாக இன்றைய மொழியியல், ஒலியியல் ஆராய்ச்சியா ளர்கள் கூறுகிறார்கள். ஆக, நடிப்பும் ஒரு மொழியாகப் பயன்பட் டுள்ளதை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

நடிப்பும் ஒரு மொழியே. இசையும் ஒரு வகை மொழியே என்ற உண்மைகளை இன்றும் தமிழ் மொழி சொல்லிக் கொண்டிருக் கிறது. தமிழ்மொழி, இயல், இசை, கூத்து (நாடகம்/ நடிப்பு) என மூன்றாக இயலுவதால் முத்தமிழ் எனப்படுகிறது. இங்கே நடிப்பும் தமிழின் ஒரு கூறாகப் பேசப்பட் டுள்ளமை, அதுவும் ஒரு மொழி வடிவமே என்னும் கருத்தால் அல்லவோ? இவ்வுண்மையை முதன் முதலாக உலகுக்கு எடுத் துச் சொன்னவர்களும் பேணி வந்தவர்களும் தமிழர்களே!

மொழியானது ஒருவனுடைய எண்ணங்களையும் உணர்வுகளை யும் வெளிப்படுத்தவும் பிறருடன் உறவு (தொடர்பு) கொள்ளவும் பயன்படும் கருவியாக, ஊடக மாக விளங்குகிறது. "மனிதன் யார்?" என்ற வினாவுக்கு, "அவன் எண்ணும் (சிந்தனை செய்யும்) விலங்கு" "அவன் மொழி பேசும் விலங்கு" என்றே அறிவியலாளரும் (விஞ்ஞானிகள்) மெய்யறிஞர்களும் விடை கூறி யுள்ளார்கள். எண்ணம் (சிந்தனை) மொழியிலேயே நிகழ்கிறது; மொழி தெரியாதார்க்கு உள்ளத் தில் நிகழ்வது, விலங்குகள் உண ருவது போன்ற ஐம்புல உணர் ச்சியே ஒழிய; எண்ணமன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வான்புகழ் வள்ளுவன்.

"விலங்கொடு மக்கள் அனை யர் இலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்"

என்று கூறியதில் மேற்படி உண்மை பொதிந்திருப்பதை உண ரலாம். கல்லாதவர் விலங்குகள் போல்வர் என்றும், கற்றவரே மக்க ளாவர் என்றும் கூறுகிறார். கற்றல் என்பது மொழியறிவின் காரியமாய் நிகழ்வது.

"மொழியிலார் கேது முதுநூல் தெரியும்?"

"எழுத்தறியத் தீரும் இழித கமை"

"எண்ணென்ப வாழும் உயிர்க்கு"

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"

(இங்கு எழுத்தென்பது மொழி யைச் சுட்டும்)

என்ற ஆன்றோர், சான்றோர் கூற்றுக்கள், மொழியிலேயே எண்ணம் நிகழ்வதையும் அதன் வழி அறிவு பெறுவதையும் விளக்கி நிற்கின்றன.

மேற் சொன்னவையெல்லாம், யாதேனும் ஒரு மொழியின்றேல் மனிதவினத்தின் உயிர் வாழ்க்கையே கடினமா கும் என்னும் முடிவுக்கு நம்மை இட்டுச் செல்வதை உணரலாம். அந்த அளவிற்கு மொழி யானது, மனித வாழ்வில் இன்றியமையாத உறுப் பாகப் பின்னிப் பிணைந் துள்ளது.

ஆனால், ஒருவன் நாடோறும் தன் தேவை களை எண்ணிப் பார்ப்ப தேயன்றி தன்னை (தன் உடல் இயல்புகள், இயக் கங்கள்) எண்ணிப் பார்ப்பது அருமை. அதுபோ லவே, ஒருவன் மொழியைப் பயன்படுத்துவதேயல்லாமல், அம்மொழியின் இயல்புக ளையோ, அதன் இன்றியமையா மையையோ, சிறப்புகளையோ எண்ணிப் பார்ப்பதும் அரிதாக வுள்ளது.

ஒரு மொழியின் சிறப்பு, அம்மொழி மனிதனின் நுண்ணு ணர்வுகள், எண்ணங்கள், கருத்துக் களை எத்துணைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது என்பதும் மொழிவதற்கு எளிமையாயுள் ளது என்பதும் ஆகிய அடிப்படை ஆற்றல்களால் (திறன்கள்) அளக் கப்படும். மேலும், அதன் அமைப்பு வளம் (இலக்கணம்), சொல்வளம், இலக்கியவளம் என்பனவும் தொன்மை, இனிமை முதலிய சிறப்புகளும் கருதப்படும்.

**பண்டிதர் பரந்தாமன்**

www.tamilarangam.net



அந்தவகையில் நோக்கினால், இன்று உலகிலே வாழும் மொழிகளாயுள்ள ஆயிரக்கணக்கான மொழிகளில் தமிழே தலைமை பெற்று விளங்குகின்றது; இஃதுண்மை; வெறும் புகழ்ச்சியில்லை! தமிழ்மொழி தான் கொண்டுள்ள மூல ஒலிகளாலும் புதுச்சொற்களை உருவாக்கக் கூடிய ஏராளமான வேர்ச் சொற்களாலும் சொல்லமைப் பொழுங்காலும் (இலக்கணம்), சொற்றொகையாலும், பொருள் வளத்தாலும், இலக்கியச் செல்வங்களாலும், தொன்மையாலும், இனிமையாலும், எளிமையாலும் ஒப்புயர்வற்றுத் திகழ்கிறது.

18ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றி வளர்ந்துவரும் மொழி ஒப்பியற் கலையின் ஆய்வாளர்களான மாக்ஸ முல்லர் (Max Mullar), கால்டுவெல் (Gald well) குண்டர்வ் (Gunderf) முதலிய அறிஞர் பலரும் தமிழின் பெருமையை, சிறப்புக்களைக் காரணங்களோடு விளக்கியுள்ளார்கள்.

மேற்கே சில நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றி மிகப்பெரிய அளவில் வளர்ந்துவிட்ட அறிவியல் தொழில்நுட்பத்துறைகள் தவிர்ந்த வாழக்கையின் பிற எத்துறைகளிலும் உயர்தனிச் செந்நிலையில் விளங்கியவர்கள் தமிழர்களே.

தமிழ்மொழி மிகத் தொன்மையுடையதாய் இருப்பதால், அது மிகவும் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

மொழியின் வளர்ச்சிக்காகவே சங்கம் அமைத்துக் கொண்டவர்கள் தமிழர்கள்.

மொழி ஒரு கருவி என்று முதலிலே சொன்னோம். ஒரு கருவியானது, கையாள்வதற்கு எளிமையாகவும், பயன்பாட்டாற்றல் உடையதாகவும் செம்மையுடையதாகவும் இருத்தலே அதற்குச்



## தெருக்கூத்து

போர்க்காலச்சூழலில் வாழும் மக்களுக்கு போராட்டத்தைப் பற்றியும் அவர்களின் எழுச்சிக்கான தயாராக்குதலுக்கும் இது போன்ற கலை வார்ப்புக்கள் தமிழீழத்தின் சகல பாகங்களிலும் இடம்பெற்று வருகின்றது. திடீரென வழியில் தோன்றி, தத்தமது கடமைகளோடு செல்லும் மக்களை கணத்தில் ஈர்த்து நிற்கிறது இக் கலை வடிவம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறப்பு. தமிழ்மொழி அவ்வகையி லெல்லாம் செம்மையுற்ற மொழி என்பதை பிற மொழிகளின் திறன்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் விளங்கிக் கொள்வார்கள்.

சிலர் தமிழ் வளர்ச்சியின் பொருட்டு சொல்வளத்தைப் பெருக்குவதறகுப் பிற மொழிகளிலே சொற்களை வாங்கிச் சேர்த்துக் கொள்ளலாம் என்று பேசுகிறார்கள். ஒரு மொழி தன்னோடு ஒத்த அமைப்புடைய மொழிகளிலிருந்து சொற்களை வாங்கிச் சேர்ப்பது ஓரளவு பொருத்தமாகலாம். ஆனால் எந்தவகையிலும் தனக்கொவ்வாத, முரண்பட்ட பிறமொழிகளிலிருந்து தமிழ்மொழி, சொற்களை வாங்குமேயானால், தன் சிறப்பியல்புகள் பாழாகி அழியுமே ஒழிய வளர்ச்சியடையாது என்பதை அவர்கள் உணர்தல் வேண்டும். பாலைப் பெருக்க நீரைக் கலப்பதால் பால் பெருகுமா? அல்லது பாலின் பண்பு கெடுமா? புதுச் சொற்களை ஆக்கும் தகுதியுள்ள தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்களை வாங்கிச் சேர்க்க நினைப்பது, சிலரின் மடிமையும் (சோம்பல்) அல்லாது மடமையுமாகும்.

இப்பொழுது, தமிழ்மொழி, அறிவியல் தொழில் நுட்பத்துறைகளில் வளர உழைக்கக் கூடிய மொழியியல் நல்லறிஞர்கள் தேவையே ஒழிய, கடன் வாங்க வழி சொல்லும் கயமைத்தனம் கொண்ட சிற்றறிவோர் தேவையில்லை.

ஒருவன், அது எத்தனை குறையுடையதாய் இருப்பினும் தன் தாய் மொழியை நயந்தும், புகழ்ந்தும் பேசுவதை நாம் வெறுக்கவில்லை; மதிக்கிறோம். ஆனால், எல்லா வகையிலும் உண்மையாகச் சிறந்த தமிழ் மொழியைத் தாய் மொழியாகப் பெற்றவர்கள் அதனைப் புறக்கணித்தும், இழித்தும் சொல்வதை என்னென்போம்? அவர்தம் தன்மானமில்லாத் தன்மை என்போமா? அறியாமை என்போமா?

தமிழ் மொழியின் பல்வகைச் சிறப்புகளையும், பெருமைகளையும் தனித்தனி எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி உரைக்கப்போனால், அதுவே பெருநூலாக விரியும் என்பதால் இங்கு கூறாது விட்டோம். தமிழ் மக்கள் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைப் படிப்பதாலும், ஆய்வு செய்வதாலும் அச்சிறப்புகளை அறிந்து இன்புறுவராக.

* * *

# இலக்கியக் காட்சி "கடமையும் தவிப்பும்"

உருத்திரா

பொருளீட்டி வருவதற்காகக் கணவன் வெளியூர் சென்றிருக்கிறான்.

அவன் இவ்வாறு அடிக்கடி வெளியூர் சென்று பொருளீட்டி வருவது வழக்கம். திரும்பி வருவதாகச் சொன்ன நாளில் கட்டாயம் வந்துவிடுவான். இந்தத் தடவை என்ன நடந்ததோ தெரியவில்லை? அவன் திரும்பி வருவதாகச் சொன்ன தினம் கடந்து பல நாட்களாகியும் இன்னும் வரவில்லை.

அவனது பொருளீட்டும் பணியில் ஏதோ தாமதம் ஏற்பட்டுவிட்டது போலும். பொருளீட்டச் சென்றவன் பொருளோடுதானே வரவேண்டும். இதனாலேயே இவன் வீடு திரும்புவதில் தாமதம் ஏற்பட்டது.

ஆனால் வீட்டிலோ, மனைவி அவனது வரவை எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கிறாள். உணவு இல்லை, நித்திரை இல்லை. எந்த நேரமும் கணவனைப் பற்றிய ஏக்கமும் தவிப்பும்தான். கணவனுக்குத் தீங்கேதும் நேரக்கூடாது என்று பிரார்த்திக்காத நேரமே இல்லை.

வீட்டில் சிறுபிள்ளைகள் உள்ளனர். தனது தவிப்பைப் பிள்ளைகள் அறிந்தால் அவர்களது பிஞ்சுமனம் பாதிப்படையும் என்பது அவளுக்குத் தெரியும். எனவே தனது மனத் தவிப்பைத் தனக்குள் அடக்கிக் கொள்கிறாள். கணவன் இல்லாத நேரத்தில் பிள்ளைகளின் மனதில் அவரைப் பற்றிய கவலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தன் கடமை என்பதை உணர்ந்து நடக்கிறாள்.

எப்படியாயினும், தன் மனம் படும் பாட்டை யாரிடமாவது சொல்லி ஒரு ஆறுதல் வார்த்தை கேட்க வேண்டும் போல இருக்கிறது. பிள்ளைகளுக்குத் தெரியக் கூடாது.

தமிழ்ப் பெண்களுக்கே உரித்தான நாணம் அவளுக்குத் துணைபோகின்றது.

தான் வளர்க்கும் கிளியைக் கையில் ஏந்தி யாருமறியாமல் அதனிடம் தன் மனத் தவிப்பைச் சொல்கிறாள்.

"என் கணவர் இன்று வருவார் எனச் சொல் கிளியே" என்று மென் குரலில் கெஞ்சுகிறாள்.

"செந்தார்ப் பைங்கிளி
முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென
இல்லவர் அறிதல் அஞ்சி
மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை".

(அகநானூறு)

www.tamilarangam.net



# இளம் ஓவியர்



# ஜக்குலின்

**எப்போது வரைய ஆரம்பித்தீர்கள்?**

பள்ளிக் கூடத்தில் படிக்கிற போதே நிறைய படங்கள் கீறும் பழக்கம் எனக்குண்டு. எனக்கு எட்டு வயதாக இருக்கும் போது அவ்வப்போது கீறவேண்டும் என்ற உணர்வு எனக்குள் ஏற்படும். அப்போதெல்லாம் மனித உருவங்களைப் புனைந்து வரைவதுண்டு. மனித உருவங்களை ஆடை, ஆபரணம் என்ற அலங்கார அம்சத்துடன் பகட்டான ரூபங்களாகச் சித்தரிப்பது சிறுவயதில் எனக்குக் கைவந்த கலை. எனது ஆசிரியையாக விளங்கிய அருட் சகோதரி கொலம்பா ஓவியக் கண்காட்சிக்காக என்னைக் கொண்டு படங்களை வரைந்து என்னை ஊக்குவித்துள்ளார்.

**நீங்கள் புத்தி பூர்வமாக ஓவியம் வரைய ஆரம்பித்த காலத்தில் எவரையாவது அடியொற்றி வர்ணத்தையும், தூரிகையையும் பயன்படுத்தியதுண்டா? அல்லது மற்றவர்களின் ஓவியங்களால் உங்களுக்குப் பாதிப்பு உள்ளதா?**

ஆரம்பகாலத்திலிருந்து இன்று வரை ஓவியங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கதிகம். என்னாலியன்ற அளவில் ஓவியர்கள் சிலரின் படங்களைப் பார்த்திருக்கிறேன். பிக்காசோ, மைக்கல் அஞ்சலோ, அகிர்தா ஷெர்கில்(வங்காளம்) ஆகியோருடைய ஓவியங்கள் என்னைக் கவர்ந்திழுத்திருக்கின்றன. முகலாய மற்றும் ராஜபுத்திர ஓவியங்களில் திளைத்து மகிழ்ந்திருக்கிறேன். ராஜபுத்ர கங்கார மரபு ரூபங்களில் காணப்படும் அர்த்த பாவமுள்ள பக்கவாட்டான முக வெட்டும், சிருங்காரம் சஞ்சரிக்கும் விழிகளும் என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றன. மற்றும்படி தனித்துப் பார்க்கும் அளவில் ஓர் ஓவியரை முன்மாதிரியாகக் கொண்டு நான் வரைய ஆரம்பிக்கவில்லை. ஒருவரை அடியொற்றுவதன் மூலம்தான் ஒருவர் ஓவியராக வரரேண்டும் என்ற நியதியுமில்லை. 'அவர் மாதிரிக் கீறவேண்டும், இவர் மாதிரிக் கீறவேண்டும்' என்று நான் எண்ணியதுமில்லை.

**உங்கள் ஓவியங்களில் நீங்கள் முனைப்பாக வெளிக் கொணரும் உணர்வுகள் எவை?**

ஒரேவகையான கருப்பொருளை எனது எல்லா ஓவியங்களிலும் காண முயலக் கூடாது. எது முதல், எது இரண்டாவது என்பது பற்றி எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. பெரும்பாலும் எனது ஓவியங்களில் உயிரோட்டமான அம்சமாக இருப்பது காதலும், அன்பும்தான். இரண்டும் அனைவர்க்கும் பொதுவானவை. மற்றும்படி, பெண்ணினத்தின் அவலமும், வேதனைக் குரலும் எமது மரபு ரீதியான ஓவியங்களில் பதியப்படுவதில்லை. எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிராகப் புரையோடிப் போயி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ருக்கும் சமூகக் கொடுமைகளைச் சித்தரிக்கும் போது, பெண்கள் சம்பந்தமான சமூக யதார்த்தத்தை என்னால் முனைப்பாக வெளிக் கொணர முடிகிறது.

**எதாவது ஓவியம் இப்போது வரைந்து கொண்டிருக்கிறீர்களா?**

சமூகக் கோலங்களை உள்வாங்கிக் கொள்கிறேன். அது எப்போதோ ஒருநாள் ஓவியமாகப் பரிணமிக்கிறது. இப்போது சில ஓவியங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறேன். இன்றைய சூழலில் குடும்ப வாழ்க்கை, காதல், அன்பு, பெண்களின் அவலம் என்பவற்றைச் சுற்றி ஓவியங்கள் வளர்ந்து கொண்டு இருக்கின்றன. அவை விரைவில் முழுமை பெறும் என்பது எனது நம்பிக்கை.

**நீங்கள் வரைகின்ற ஓவியங்கள் முழுமையானவை என்ற திருப்தி உங்களுக்கு உள்ளதா?**

கீறு பொருள், இதயபூர்வமான ஈடுபாடாக வெளிப்படும் போது அது முழுமை பெறுகின்றது. தான் கண்டதையும், கேட்டதையும், சுய அனுபவத்தையும்தான் ஓவியமாகத் தீட்டுகின்றேன். உதாரணமாக அண்மைக்கால நிகழ்வுகள் தான் மன உந்தலாக 1991ல் சர்வதேச மகளிர் தினத்திற்கான ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஓவியமாக முகிழ்ந்தது. முழுமை என்பது சார்புடையது. முழுமைத் தன்மையை அல்லது எனது வெளிப்பாட்டின் நோக்கத்தை கலாரசிகர்கள் எப்படி அணுகுகிறார்கள் என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம். பெண்கள் மீது இழைக்கப்படும் கொடூரத்தையும், வன்முறையையும் நான் எதார்த்தமாக வெளிக் கொணர்வதால் அது சம்பிரதாய பார்வைக்கு மாறுபட்ட வக்கிரம், விரசம் என்றெல்லாம் கூறுகிறார்கள். உடல் அழகின் கவர்ச்சி மேலோங்கி நிற்பதாக விமர்சிக்கப்படுகின்றது. மற்றும்படி, யாரும் சொல்லிக் கீறுவது, முகஸ்துதிக்காக கூறுவது எனக்குத் திருப்தியைத் தருவதில்லை. அதில் முழுமையை எட்ட முடியாது. என் அனுபவத்தில் சுயதேடலின் முயற்சிதான் திருப்தி தருகிறது.



**நவீன ஓவியம் பற்றி உங்கள் கணிப்பு என்ன?**

ஆரம்பத்தில் நவீன ஓவியத்தில் அதிக ஈடுபாடு இருக்கவில்லை. அதற்கு ஒரு பயன்பாடு உண்டு என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதன் காரணமாக நவீன ஓவியங்கள் (Modern Art) தீட்டுவதிலிருந்து நான் விலகிக் கொண்டேன். தத்ரூப வகை ஓவியங்களில் எனக்கு அதிகம் நாட்டம் இருந்தது. தத்ரூப பாணியிலேயே எனது ஓவியங்களும் அமைந்தன. மார்க் மாஸ்டரிடம் பயிற்சி பெற்ற காலத்தில் நவீன ஓவியங்கள் பற்றிய அவருடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. பிரயாசைப்பட்டு நவீன ஓவியத்தில் எனது தூரிகையை நனைத்தேன். நவீன ஓவிய பாணியில் நான் எதிர்பார்க்கிற அளவிற்கு எனது கருத்தை கலப்பது சாத்தியமாகிறது. கருத்துக்கேற்றவாறு வர்ணங்களைச் சேர்க்க முடியும். என்னைப் பொறுத்தவரையில், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்ற அளவில் நவீன ஓவியம் நல்ல தொடர்பு ஊடகமாகவும் பயன்படுகிறது. தத்ரூப ஓவியமும், நவீன ஓவியமும் இணையும் இடத்தில் புதிய கற்பனைகள் சாத்தியமாகின்றன.

**ஓவியக் கலையைப் பொறுத்தவரையில் உங்கள் இலட்சியம் என்ன?**

சிறுவயது முதல்-வரைகிறேன். ஆனால் ஓவியத்தைப் பொறுத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரை இலட்சியம் என்று ஒன்றும் எனக்குக் கிடையாது. நினைவுகளில் சஞ்சரிக்கிறேன். நினைவுகள் நீறுபூத்த நெருப்பைப் போல சில சமயங்களில் அவை எரியத் தொடங்குகின்றன. அப்போதெல்லாம் 'விசையின் கை' வரைகிறது; அவ்வளவுதான்!

**ஓவியத்தையும் சமகாலப் பிரச்சினைகளையும் அது எதுவாக இருந்தாலும், சம்பந்தப்படுத்தும் பார்வை எமது ஓவியர்களுக்குக் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?**

எமது அனுபவங்களையும், அவலங்களையும் வெளிக்கொணர்வதுதான் ஓவியம். இது எல்லாக் கலைகளுக்கும் பொருந்தும். சாஸ்திர வரம்பிற்குள்ளேயே நிற்கும் மனநிலையில் உள்ளவர்களிடம் அனுபவமும், சமகாலப் பிரச்சினைகளும் ஓவியமாகப் பரிணமிக்க வழியில்லை. இன்னும் சிலர் தாமே வகுத்துக் கொண்ட வரம்பிற்குள் அதிக அக்கறை காட்டுவதால் சந்தர்ப்பவசமாகிப் போன தனிப்பட்ட நடைமுறைகளைத் தான் உருவகப்படுத்திச் சித்தரிக்கிறார்கள். வரம்பை மீறுவது இவர்களுக்கு முடியாத காரியம். பிரச்சினைகளின் வடிவமும் இவர்களைப் பாதிப்பதில்லை.

**பொருளாதார கலாசார அடக்குமுறைகளுக்கு ஆளாகியிருக்கும் இன்றைய நிலையில் உங்களது அண்மைக்கால ஓவியங்களின் கருப்பொருள் என்ன?**

போரின் விளைவுகள் பல்வேறு வகைகளில் எம்மைப் பாதிக்கத்தான் செய்கின்றன. அடக்குமுறையினால் எமக்கு ஏற்பட்ட அழுத்தங்களையும், துன்பங்களையும் உணர்த்தும் ஓவியங்களை மிகக் குறைவாகவே வரைந்துள்ளேன். அதற்காக நான் எனக்குள் சமரசம் செய்து கொண்டு குளங்களையும், கடலையும், பூந்தோட்டங்களையும், பறவைகளையும், மிருகங்களையும் கீறுகிறேன் என்று அர்த்தம் பண்ணிவிடக்கூடாது. இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது பெண்களுக்கு நேர்ந்த துரதிஸ்டங்களையும், காலாகாலமாக சமுதாயத்தின் பல நிலைகளிலும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் உணர்த்தும் ஓவியங்களையும் சித்தரித்துள்ளேன்.

**பெண் விடுதலை பற்றிய உங்கள் கருத்து என்ன?**

சமூகத்தின் மூடக் கொள்கைகளையும், அர்த்தமற்ற சட்டதிட்டங்களையும் அலட்சியப்படுத்திவிட்டு ஒரு பெண், விடுதலை அடைந்த பெண்ணாக வாழ முற்படும் போது, அந்தச் சமூகத்தின் தவறான விமர்சனங்களுக்கும், வக்கிரமான பார்வைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. பெண்கள் தம்மை இழிவுபடுத்தும் சக்திகளுக்கெதிராகவும், உரிமைகளுக்கெதிராகவும் போராடித்தான் ஆகவேண்டும். ■ □ ■

## எல்லைச் சண்டை

உருத்திரா

குமரப்பரும் கந்தப்பரும் அயல் வீட்டவர்கள். குமரப்பர் இறந்து சில வருடங்களாகிவிட்டன.

குமரப்பர் இறந்த பின் அவருடைய வீட்டுக்குக் கந்தப்பர் வீட்டார் நல்ல உதவி.

கந்தப்பர் செய்யும் உதவி சுயநலத்தோடு கூடியது. இரு வீடுகளுக்குமிடையிலுள்ள வேலியை வருடா வருடம் குமரப்பரின் காணிக்குள் நகர்த்திக் கொண்டு வரும் மண் கொள்ளையை மறைக்கவே இந்த உதவி.

குமரப்பரின் ஆண்பிள்ளைகள் இருவரும் வயதில் சிறியவர்கள் என்றாலும், நடப்பது என்ன என்பதைப் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்குப் 'பெரியவர்கள்'!

"கந்தப்பர் காணி பிடிக்கிறார்" என்று இவர்கள் சினத்துக் கிளம்பியபோதெல்லாம் தாயார் தடுத்தார்.

"வேலி அரக்கிறது உண்மைதான். ஆனால், அந்தரம் ஆபத்துக்கு உதவிற ஆக்களோட சண்டை பிடிக்காமல் சமாதானமாகக் கதைச்சுத் தீர்ப்பம்".

சமாதானமாகப் பல தடவைகள் பேசியாயிற்று. இனிமேல் எல்லாம் சரியாக நடக்கும் என்ற உறுதி மொழியும் தந்தாயிற்று.

ஆனால் மண் கொள்ளை தொடர்கிறது. நடுவேலியில் நின்ற வேப்பமரம் இப்போது கந்தப்பரின் காணிக்குள்.

'பொடியளால்' பொறுக்கமுடியவில்லை. தாய் தடுக்கவும் கேளாமல் புறப்பட்டார்கள். ஒருவனிடம் கத்தி, மற்றவனிடம் கோடரி.

வேலி முற்றாக வெட்டி விழ்த்தப்பட்டது. கந்தப்பர் 'துள்ளிக் கொண்டு' வந்தார்.

'பொடியள்' விளக்கமாகச் சொன்னார்கள்.

"ஐயாவையும் அம்மாவையும் ஏமாத்திக் காணி பிடிச்சமாதிரி எங்களை ஏமாத்த விடமாட்டம். சமாதானமாக இரண்டு காணியளையும் அளந்து எல்லை வைக்கிறதுக்கு நாங்கள் தயார். இல்லையெண்டால் எங்கடை காணியை எங்கடை உறுதிப்படி அளந்து வேலி அடைக்கப் போறம்."

கந்தப்பர் சத்தம் போட்டுப் பார்த்தார். 'பொடியள்' மசியவில்லை. திரும்பிப் போய்விட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயுதப் போராட்டமாக முளைவிட்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று இராணுவ அடக்குமுறைகளிலிருந்து தமிழீழத்தை விடுவிப்பதனை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் பொருளாதார அடக்குமுறைகளிலிருந்தும், சமூக அடக்கு முறைகளிலிருந்தும் தமிழீழத்தை விடுவிப்பதனை நோக்கமாகக் கொண்ட ஒரு பாரிய விருட்சமாக வளர்

# தமிழீழ பொருளாதாரம்

# வளங்களும் – வாய்ப்புக்களும்

## ஓர் அறிமுகம்

சி.வரதராஜன்

ந்துள்ளது. இராணுவ முனையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க வேண்டிய அதே நேரத்தில் பொருளாதார முனையிலும் வெற்றி காண வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். ஒரு தேசிய இனத்திற்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளில் ஒன்று அதற்கென ஒரு தனியான பொருளாதாரம் இருத்தலாகும். ஆனால் நீண்ட காலமாகவே சிறிலங்காவில் தங்கியிருக்கும் ஒரு பொருளாதாரமாகவே தமிழீழம் இருந்து வந்ததனால், எமக்கென ஒரு தனியான பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பத் தவறிவிட்டோம். இந் நிலையில் தமிழீழப் பொருளாதாரத்தின் வளங்கள், வாய்ப்புக்கள் என்பன தொடர்பாக நீண்ட காலமாகவே சந்தேகங்கள் எழுப்பப்பட்டுவந்துள்ளன.

எமது பிரதேசத்தின் வளங்களைப் பற்றிய ஆய்வும் அவற்றின் பயன்பாடும் சிறிலங்கா அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் கடந்த காலங்களில் தமிழர்கள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டார்களோ அதே போன்றே எமது பிரதேசத்தின் வளங்களும் புறக்கணிக்கப்பட்டிருந்தன. உதாரணமாக மன்னார் கடற்கரையோரங்களில் பெற்றோலிய வளம் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு உண்மையில் இங்கு பெற்றோலிய வளம் கண்டு பிடிக்கப்படுமேயானால் தமிழீழப் பிரதேசங்களின் முக்கியத்துவம் அதிகரித்துவிடும், அது தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை மேலும் முனைப்படையச் செய்து விடும் என்ற பயம் காரணமாக அரசாங்கம் இவ் ஆய்வில் அக்கறை காட்டவில்லை. இவ்வாறான நிலையிலேயே எமது வளங்களைப் பற்றி நாம் சந்தேகம் கொள்கின்றோம். அவ்வாறாயின் உண்மை நிலை என்ன?

எமது பிரதேசத்தில் உள்ள கனிப்பொருள் வளங்களில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய ஒன்று திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை பிரதேசத்தில் காணப்படும் இல்மனைட் வளம் ஆகும். இங்கு ஆண்டொன்றுக்கு 150000 மெட்ரிக் தொன் செப்பனிடப்பட்ட இல்மனைட் உற்பத்தியில் நாம் அனுகூலமான நிலையினைக் கொண்டிருக்கின்றோம். புல்மோட்டையில் உள்ள இல்மனைட் படிவுகளிலிருந்து 70லிருந்து 80 சதவீதமான செப்பனிடப்பட்ட இல்மனைட்டை பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் உலகின் பெரிய இல்மனைட் உற்பத்தி நாடுகளில் ஒன்றான அவுஸ்திரேலியாவின் இல்மனைட் படிவங்களிலிருந்து 50 சதவீதமான செப்பனிடப்பட்ட இல்மனைட்டே பெறப்படுகின்றது. மேலும் புல்மோட்டையில் வருடாந்தம் 8500 மெட்ரிக் தொன் ருட்ரையுல் (Rutile) கனிப்பொருளும், 5000 மெட்ரிக் தொன் சிக்கோன் (Zircon) கனிப்பொருளும் பெறப்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலும் வட பகுதியின் கரையோரங்களில் பெருமளவு கண்ணாடி மணல் திட்டுக்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

கடல் வளங்களை எடுத்து நோக்கும்போது, தமிழீழம் தனது தேவைக்கும் மேலாகவே மீன், கருவாடு போன்றவற்றின் உற்பத்திகளை மேற்கொள்கின்றது. இராணுவ நடவடிக்கைகளினாலும், கடல் பாதுகாப்பு வலயம் போன்றவற்றினாலும் தற்போது மீன், கருவாடு போன்றவற்றின் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்துள்ளன. 1985க்கு முந்திய உற்பத்தித் தரவுகளின்படி தமிழீழத்தின் வருடாந்த சராசரி மீன் உற்பத்தி 110000 மெட்ரிக் தொன் ஆகும். இதில் விரயமானது போக 77000 மெட்ரிக் தொன் மீன் நுகர்வுக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் தமிழீழத்தின் வருடாந்த மீன் தேவை (24 இலட்சம் என்ற அடிப்படையில்) 20200 மெட்ரிக் தொன் மட்டுமேயாகும். எனவே தமிழீழத்தின் மொத்த மீன் உற்பத்தியில் 26 சதவீதமே அதன் நுகர்விற்குப் போதுமானதாகும். தமிழீழத்தின் வருடாந்த சராசரிக் கருவாடு உற்பத்தி ஏறத்தாழ 11500 மெட்ரிக் தொன் ஆகும். தமிழீழத்தின் வருடாந்த கருவாட்டுத் தேவை 5300 மெட்ரிக் தொன் ஆகும். எனவே தமிழீழத்தின் கருவாட்டு உற்பத்தியில் 46 சதவீதம் அதன் நுகர்விற்குப் போதுமானதாகும். மேலும் முல்லைத்தீவிலிருந்து பொத்துவில் வரையும் அமைந்துள்ள நீர் நிலைகள் இறால் வளர்ப்பிற்கு உகந்தவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலையில் 1980 களின் ஆரம்பத்தில் இறால் பண்ணை ஒன்று தனியாரினால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பண்ணை உலகிலேயே மிக உயர்ந்த அளவு இறால் உற்பத்தியினைச் செய்து சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது. இத்தகைய முறையின் கீழ் பல உலக நாடுகள் ஒரு ஹெக்டேயருக்கு 1000 கி.கிராமிலிருந்து 1200 கி.கிராம் வரையிலான இறால் மட்டுமே உற்பத்தி செய்கின்றன. ஆனால் கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் இப்பிரதேசத்தின் நீரின் உயர்ந்த தரம் காரணமாக ஒரு ஹெக்டேயருக்கு 2000 கி.கிராம் இறால் உற்பத்தி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த இறால் பண்ணை 1987ல் சிறிலங்கா இராணுவத்தினால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது.

நெல் உற்பத்தியினைப் பொறுத்தவரையில் தமிழீழம் தனது தேவைக்கும் மேலாகவே உற்பத்தியினை மேற்கொள்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. தமிழீழத்தின் வருடாந்தச் சராசரி நெல் உற்பத்தி 6520000 மெட்ரிக் தொன் ஆகும். இதிலிருந்து நுகர்விற்காக கிடைக்கக்கூடிய அரிசியின் அளவு ஏறத்தாழ 4 இலட்சம் மெட்ரிக் தொன் ஆகும். ஆனால் தமிழீழத்தின் வருடாந்த அரிசித் தேவை (24 இலட்சம் மக்கள் என்ற அடிப்படையில்) 245000 மெட்ரிக் தொன் ஆகும். இந்நிலையில் நாம் எமது அரிசி உற்பத்தியின் தரத்தில் கூடிய கவனம் செலுத்துவோமேயானால், அரிசி ஏற்றுமதிக்குரிய வாய்ப்புகள் அதிகமாகும்.

இன்று தமிழீழத்தில் நடைபெறுகின்ற யுத்தத்தினால் எமது பிரதேசங்கள் அனைத்தும் அழிக்கப்படுகின்றன என்பது உண்மையே. ஆனால் இந்த அழிவுகளைக் கண்டு நாம் அஞ்சவேண்டியதில்லை. இரண்டாம் உலகப் போரில் யப்பான், ஜேர்மனி போன்ற நாடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. ஆனால் இன்று அந் நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தில் முதன்மையான நாடுகளாகத் திகழ்கின்றன. இதற்குத் தேவையானது, அந்நியராதிக்கத்திலிருந்து விடுபடலும், உழைப்பும், விடாமுயற்சியும், மன வுறுதியுமேயாகும். இவை தமிழீழ மக்களிடம் நிறையவே உண்டு. எனவே இன்று எமக்குத் தேவையானது அந்நியராதிக்கத்திலிருந்து விடுபடல் மட்டுமேயாகும்; எமது பிரதேசத்தை நாமே ஆளவேண்டும்; எமது வளங்களைப் பயன்படுத்தவும், அனுபவிக்கவும் எமக்கு அதிகாரம் வேண்டும். எனவே, இராணுவ அடக்குமுறையிலிருந்து எமது மண் விடுவிக்கப்படும் போது மட்டுமே எமது வளங்கள் எமக்குக் கிடைக்கும். அப்போது இந்த அழிவிலிருந்தும், இடிபாடுகளிலிருந்தும், அழகிலும், வடிவமைப்பிலும் புதிதாக பல நகரங்கள் எழுந்துவரும். சாம்பலிலிருந்து எழுகின்ற பீனிக்ஸ் பறவை போல, இந்த அழிவின் சாம்பலிலிருந்து ஒரு புதிய வளமான தமிழீழ சமூகமொன்று கட்டியெழுப்பப்படும். ■□



**"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகிறேன். ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது. எனது வாழ்விடமாய்த் திகழ்கிறது."**

www.tamilarangam.net

## வசதி குறைந்த குடும்பங்களுக்கு 200 இரட்டை சூட்டடுப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப் பகுதியினர் 200 இரட்டை சூட்டடுப்புக் களை கடந்த மாவீரர் வாரத்தை யொட்டி வசதி குறைந்த குடும்பங்களுக்கு இலவசமாக விநியோகித்துள்ளனர்.

நாட்டுமக்களின் வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரித்துள்ள அதே வேளை விறகுக்காக பெருமளவு பணம் செலவிடப்படுகின்றது. இச் செலவினைக் கட்டுப்படுத்தக் கூடிய தாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப் பகுதியினர் பிரசாரப்படுத்தி வரும் இரட்டைச் சூட்டடுப்பு 30% விறகுத் தேவையை குறைக்க வல்லது என பரிசோதனைகள் நிரூபித்துள்ளன.

நாளாந்த உழைப்பாளிகள் தமது உணவுக்கே திண்டாடும் காலத்தில் விறகுத் தட்டுப்பாட்டிற்கு முகம் கொடுக்க முடியாதுள்ளது. எனினும் அவ்வாறான தாக்கத்திலிருந்து அவர்களை மீட்பதற்காகவே இவ்வடுப்பு இலவசமாக வழங்கப்பட்டது என்றும் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்......

## தென்னங்கன்று விநியோகம்

முல்லை மணலாறு மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர் மாவீரர் குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகளை விநியோகித்துள்ளனர்.

மாவீரர்களை நினைவு கூரும் வகையில் அங்குள்ள மாவீரர் குடும்பங்களுக்கே தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந் நடவடிக்கையின் மூலம் மாவீரர்கள் நினைவுகூரப்படுவதும், மரம் நடுகைகள் ஊக்குவிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கவையாகும்.



## மாமரச் செய்கை

கிளிநொச்சிக் கோட்டம் இராமநாதபுரம் பகுதியில் மாமரச் செய்கைத் திட்டமொன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சூழலைப் பாதுகாப்பதில் மரங்களின் இன்றியமையாத தேவையையும் விறகுத் தேவைக்காக வன்னிப்பகுதியில் அதிகளவில் மரங்கள் தறிக்கப்படுவதனால் தறிக்கப்படும் மரங்களின் எண்ணிக்கையில் ஒரு குறிப்பிட்ட வீதத்தையேனும் ஈடுசெய்யும் நோக்கத்துடனும், ஊட்டச்சத்துள்ள பழமரங்களை உற்பத்திசெய்யவும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

## மரம் நடுகை

வடமராட்சி வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளில் கடற்புலிகளினால் மரம் நாட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொண்டைமானாறு முதல் வடமராட்சி கிழக்குப்பகுதிகளில் மரங்கள் நாட்டப்படவுள்ளன.

## வன வளர்ப்புத் திட்டத்தில் சின்ன கருவேல மரவிதைகள்

நாவற்குழி, வல்லைவெளி ஆகிய இடங்களில் சின்னக் கருவேலம் மரவிதைகள் தற்சமயம் தூவப்பட்டு வருகின்றன.

காடு வளர்ப்பு மற்றும் விறகுத் தேவை, மண் பாதுகாப்பு என்பவற்றை நோக்கமாகக் கொண்டு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வெளிநாடொன்றில் இருந்து தருவிக்கப்பட்டு மன்னார் பகுதியில் இம்மரங்கள் வளர்க்கப்பட்டன.

தற்சமயம் குடாநாட்டிலும், கிளிநொச்சியிலும், வவுனியா, மணலாறு மாவட்டங்களிலும் பொருத்தமான இடங்களில் சின்னக் கருவேலம் விதைகள் தூவப்பட்டு வருகின்றன.

## நெல்

முல்லை, மணலாறு மாவட்டத்தில் சிறிய விவசாயிகள் சுயமாக உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு நெற்செய்கைத் திட்டமொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

நூறு வறிய விவசாயிகளுக்கு தலா ஒவ்வொரு ஏக்கர் நெற்செய்கைக் காணியில், செய்கை பண்ண தேவையானவிதைநெல், உரம், கிருமிநாசினி களைகொல்லி போன்றனவும் கடனடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

## தென்னை

தென்னை ஒவ்வொரு மாதமும் பூத்துக் காய்த்துப் பயன் தரும். வருடம் முழுவதும் அது பலவித பயன்களையும் தருவதால் தரையில் உள்ள ஊட்டச்சத்து வெகுவிரைவில் அழிக்கப்படுகின்றது. இந்த இழப்பை ஈடுசெய்வதன் மூலம் தொடர்ச்சியான நல்ல பயனைப்பெற முடியும்.

தரையில் ஊட்டச்சத்தை அதிகரிக்க, தென்னையில் ஏற்படும் பீடைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகளுள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்படுகின்றது. பனைவள அபிவிருத்தி ஒன்றியப் பகுதியினரும் தெங்குப் பயிர்ச் செய்கைக்கு ஊக்கமளித்து வருகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்